# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 10 புதன்கிழமை (24.03.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 118


# மேலைநாடுகளின் தலையீட்டுக்கு எமது அரசாங்கம் அடிபணியாது!

## நிபுணர் குழு நியமிக்கும் மூனின் முடிவுக்கு பிரதமர் சாட்டை!!





புத்தளம், மார்ச் 24

இலங்கை சுதந்திரமான, இறைமையுள்ள நாடு. சுயா திபத்தியம் உள்ள தேசம் என்ற வகையில் நாங்கள் சுயமரியாதை கொண்டவர்கள். எங்கள் நாட்டின் உள் விவகாரங்களில் சில மேலை நாடுகள் தலையிடப் பார்க்கின்றன. அதனை நாங்க்ள் ஒரு போதும் அனுமதிக்கமாட்டோம்.

அந்த நாடுகள் எம்மை இப்போதும் காலனித்துவ தேசமாகவே பார்க்கின்றன. எங்கள் நாட்டின் மீது நாம் சுய மதிப்புக் கொண்டுள்ளோம். எங்கள் நாட்டை எவ்வாறு ஆள வேண்டும் என்று அவை எமக்குப் பாடம் புகட்டத் தேவையில்லை.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## 'சிரச' தாக்குதல்: 16 சந்தேக நபர்களுக்கும் பிணை அனுமதி

கொழும்பு, மார்ச் 24

கொழும்பு, கொம்பனித்தெருவிலுள்ள 'சிரச' அலுவலகம் மீது தாக்குதலை மேற்கொண்டவேளை கைதுசெய்யப்பட்ட 16 சந்தேகநபர்களும் நேற்றுப் பிணையில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர் எனப்

(24 ஆம் பக்கம் பார்க்க)

**கல்விச் சுடர் உள்ளே**

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான சேதன இரசாயனவியல் மாதிரி வினாத்தாள்

## விசாரணைக்குழு நியமிப்பதை அரசு கடுமையாக எதிர்க்கிறது – அமைச்சர் சமரசிங்க

கொழும்பு, மார்ச் 24

இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பாக ஆராய நிபுணர் குழு அமைக்கும் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் - கீ மூனின் முடிவை இலங்கை கடுமையாக எதிர்க்கிறது.

மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க இப்படிக் கூறியுள்ளார்.

இலங்கையில் தேர்தல் நடைபெறும் நேரத்தில் இத்தகைய கடும்தொனியிலான அறிக்கைகளை வெளியிடுவது, எதிர்க்கட்சிகள் இலாபம் அடைய வழிசமைத்து விடும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மனித உரிமை மீறல் குறித்துப் பொறுப்புக் கூறுவதை ஆராய்வதற்கு இத்தகைய குழு ஒன்றை நியமிக்க இலங்கை அரசு எந்தச் சந்தர்ப்பத்திலும் விருப்பம் தெரிவிக்கவில்லை என்று அமைச்சர் சமரசிங்கா வலியுறுத்திக் கூறினார். (24 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவுக்கு இயற்கை மரணம் ஏற்படுத்த அரசு முயற்சிக்கின்றதாம்!

### அதிர்ச்சிக் குண்டு போடுகிறது ஜே.வி.பி.

கொழும்பு, மார்ச் 24

இராணுவத்தினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கான உணவு மற்றும் காற்றோட்ட வசதிகளைத் தடுப்பதன் மூலம் அரசு அவர் இயற்கை மரணம் எய்தும் சூழ்நிலையை உருவாக்குகிறது என ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கான உணவையும், உரிய காற்றோட்ட வசதிகளையும் தடுப்பதன் மூலம் அரசு அவருக்கு இயற்கை மரணத்தை ஏற்படுத்த முயல்கிறது.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சிகள், சுயேச்சைகள் இணைந்து தீவுப் பகுதியில் இன்று தேர்தல் பிரசாரம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடுகின்ற ஆளும்கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள், அனைத்

(24 ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்பைத் தனிக்குடும்ப நலனுக்காக மாற்ற ஐக்கிய தேசியக்கட்சி ஒரு போதும் ஒத்துழைக்காது

### பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்கா சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 24

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்தல் மற்றும் தேர்தல் முறைமையை மாற்றுதல் போன்றவற்றிற்காக ஆளும் தரப்பு முன்வைக்கும் அரசமைப்பு திருத்த யோசனை ஒரு தனிக் குடும்பத்திற்கோ அல்லது தனிக் கட்சிக்கோ நன்மையளிப்பதாக அமைந்தால், அந்த யாப்புத் திருத்தத்துக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவு நாடாளுமன்றத்தில் கிட்டுவதற்கான ஆதர

(24 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவை விடுவிக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மார்ச் 24

ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோரி நேற்று பொன்சேகாவின் கூட்டமைப்பினர் கொழும்பில்

(24 ஆம் பக்கம் பார்க்க)





சுண்ணம்புக்கல் கலவையற்றதால்
நிப்போன் சிமெந்து நன்கு
பற்றிக்கொள்ளும் சக்தி வாய்ந்தது




MITSUI CEMENT

தற்போது

NIPPON CEMENT

வாழ்வோடு இணைந்தது

SLS 107

TOKYO CEMENT GROUP


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ சாயீராம்
### பட்டமளிப்பு விழாவுக்கான விசேட வெளியக நிலையம்

★ போட்டோ, வீடியோ & ஸ்ரூடியோ
★ பெண் பட்டதாரிகளுக்கான அலங்காரம் (Make Up)
★ குளிர்பானங்கள், சிற்றுண்டி வகைகள், ஐஸ் கிறீம் வகைகள்.

உங்கள் தேவைகளை நிறைவு செய்கின்றோம்.
0776258290 (95853)


# மரண அறிவித்தல்கள்



## திருமதி அருந்தவநாயகி சரவணப்பெருமாள்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருந்தவநாயகி சரவணப்பெருமாள் நேற்று (23.03.2010) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகளும், அமரர் சரவணப்பெருமாளின் அன்பு மனைவியும், தெய்வநாயகியின் சகோதரியும், இராசஇராசேஸ்வரி (ஆசிரியர், யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்), லோகேஸ்வரன் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், கிராம அபிவிருத்தி, பிரதேச செயலகம், பளை) ஆகியோரின் அன்புத் தாயாரும், பவாணி, திருலோகநாயகி, செல்வநாயகி, பாலசரஸ்வதி, பாலசறோயினி, சிவசண்முகநாதன், கலைச்செல்வி, செந்தில்நாதன் ஆகியோரின் பெரியம்மாவும், சுந்தரராசா (சுந்தரம்), பாமினி (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், உடுவில்) ஆகியோரின் மாமியாரும், தனுராஜ், தர்ஷிகா, தனுசியன், நிஜகரன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2010) புதன் கிழமை முற்பகல் 11மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீதிராசா வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (95854)

தகவல்:
இராசஇராசேஸ்வரி (மகள்),
லோகேஸ்வரன் (மகன்)

## திருமதி ஞானம்மா மார்க்கண்டு

குப்பிளானைப்பிறப்பிடமாகவும், இல. 36, ஹாமர்ஸ் அவனியு, வெள்ளவத்தை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானம்மா மார்க்கண்டு (21.03.2010) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், விக்னேஸ்வரன் (கனடா), வினோதினி (ஆசிரியை, இரத்மலானை இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2010) புதன்கிழமை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 5மணிக்கு கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

36, Harmers Avenue,
Wellawatte,
Colombo. (95844)

தகவல்:
திருமதி வினோதினி புருசோத்தமன் (மகள்).
தொ.பே.இல: 0779333369.


## ஈழத் தமிழருக்கு எதிரான இந்திய-இலங்கை கூட்டுச் சதியை எதிர்ப்போம்



யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட
தமிழ்த்தேசிய விடுதலைக்
கூட்டமைப்பு வேட்பாளர்கள்

ந.சிறீகாந்தா -
எம்.கே.சிவாஜிலிங்கம்
(முன்னாள் நாடாளுமன்ற
உறுப்பினர்கள்)



2 3

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 (X) | 3 (X) | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | | | | | | | | |

தேசியம் - தாயகம் - சுயநிர்ணய உரிமை

★ தமிழ் ஈழதேசம், சிங்கள தேசம் இணைந்த இலங்கை ஒன்றியம் (Union Ceylon) என்ற கூட்டு இணைப்பாட்சியின் (Confederation) அடிப்படையிலேயே நிரந்தரத் தீர்வு காணப்பட முடியும்.
★ சுமார் ஐந்து இலட்சம் அகதிகளின் மீள்குடியேற்றத்தை ஐ.நாவிடம் ஒப்படை.
★ 12, 000 தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனை இன்றி விடுதலை செய்.
★ உயர்பாதுகாப்பு வலயங்களை முற்றாக நீக்கு.
★ தமிழர் தாயகத்தில் இராணுவ ஆட்சியை மீளப்பெறு.
★ பயங்கரவாதத் தடைச்சட்டம் , அவசரகாலச் சட்டம் ஆகியவற்றை மீளப்பெறு.
★ சிங்களக் குடியேற்றங்களை உடனடியாக நிறுத்து.
★ போரில் கொல்லப்பட்டவர்களுக்கும் உடல் ஊனமுற்றவர்களுக்கும் சொத்து அழிவுகளுக்கும் போதியளவு நஷ்ட ஈட்டை வழங்கு.
★ வன்னிப்போரிலும், கிழக்குப்போரிலும் 50,000 தமிழ் மக்கள் மீதான இனப் படுகொலைக்காக சர்வதேச நீதி விசாரணையைக் கோருவோம்.
★ வடக்கு- கிழக்கு மாகாணங்கள் இணைந்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை (Interim Self-Governing Authority - ISGA) நிரந்தரத் தீர்வு கிடைக்கும்வரை நிறுவ நடவடிக்கை எடு.


X

(95838)



## காணி விற்பனைக்கு

நவாலி தெற்கு, மானிப்பாயில் 1பரப்புக் காணி விற்பனைக்கு. அதி கூடிய கேள்வியாளருக்கு மட்டும். (95851)
தொடர்பு: 0212229757, 0775544413

## வீடு வளவு விற்பனைக்கு

முருகமூர்த்தி கோயிலடி, ஆலங்குழாய், சண்டிலிப்பாயில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய வீடு (மாபிள் பதித்தது) 6பரப்புக் காணியுடன் தென்னை, மா, வாழை கூடிய பயன்தரும் மரங்களுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0776669918,
பிரவீன் கிளினிக்,
யூனியன் அருகாமை, சங்கானை. (95847)


## தவறிவிட்டது

சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த குமாரசாமி பாலகிருஷ்ணாஎன்பவரது தேசிய அ.அ. (840273865V), விசேட அ.அட்டை, நீர்பாசனத் திணைக்கள அ.அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் ATM Card மற்றும் ஒரு தொகைப் பணம் என்பன 20.03.2010ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (95850)
S.K.T மகாலட்சுமி நகையகம், கஸ்தூரியார் வீதி.
தொ.பே. 0213219590, 0778212061


## வீடுகள், காணிகள் விற்பனைக்குண்டு

யாழ்.நகர் மத்தியில் காணியும், யாழ். மாநகர சபை சுற்றாடலிலும், திருநெல்வேலி பல்கலைக் கழகத்திற்கருகிலும் மற்றும் நல்லூர், கொக்குவில் பகுதிகளிலும் வீடுகள், காணிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0777110385 (சி/566020)

## மணமகள் தேவை

யாழ்.கௌர RC பெற்றோர்கள் தமது 37 வயதுடைய, உயர் கல்வி கற்று கௌரவமான, நல்ல வருவாய் உடைய தொழில் செய்யும் மகனிற்கு 32 வயதுக்கு குறைந்த கௌரவ RC மணமகளைத் தேடுகின்றனர்.
தொ.பே: 0777698339 (95842)


## சனசமூக நிலையத்தின் புனருத்தாரண ஆரம்ப வைபவம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

வாதரவத்தை, பெரிய பொக்கணை கணேஸ்வரா சனசமூக நிலையத்தின் புனருத்தாரணமும் படிப்பகம் ஆரம்பித்தலும் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவத்தமிழ் மானிட விடியற்கழக ஆலோசகர் வை. சுரேஷ் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகத் துர்க்கா தேவஸ்தானத் தலைவர் ஆறு. திருமுருகனும் மற்றும் விருந்தினர்களாக அமரர் இந்துமதி ஞாபகார்த்த நிதியத்தைச் சேர்ந்த இருதய சிகிச்சை நிபுணர் பூ. லக்ஸ்மன், பொது வைத்திய நிபுணர் திருமதி ஜெ. கணேசமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் அமரர் இந்துமதி ஞாபகார்த்த நிதியத்தின் அனுசரணையுடன் சிவத்தமிழ் மானிட விடியற் கழகத்தினரால் மேற்கொள்ளப்படவிருக்கும் சிறுவர் நல் வாழ்வு செயற்றிட்டத்தைப் பிரதம விருந்தினர் ஆரம்பித்து வைப்பார்.

இன்றைய இந்த நிகழ்வில் மானிட விடியற் கழக ஆலோசகர்கள், [illegible] மற்றும் கிராம மக்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-16)

## நன்றி ஆராதனை

"நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" (II தீமோத்தேயு 4:7)



அமரர்
அழகேஸ்வரசாமி
ஞானச்சந்திரன்
(ஏனோக்)
(ஓய்வு பெற்ற
கிராம அலுவலர்)



20.02.2010 அன்று கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்த அழகேஸ்வரசாமி ஞானச்சந்திரன் அவர்களின் நல்லடக்க ஆராதனையில் கலந்து கொண்ட சபைப் போதகர்கள், ஊழியக்காரர்கள், விசுவாசிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (24.03.2010) புதன் கிழமை முற்பகல் 11மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் நன்றி ஆராதனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அல்வாய் கிழக்கு,
அல்வாய். (C/566025)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## செல்வரத்தினம் சின்னம்மா



மஞ்சத்தடி தெற்கு, இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் சின்னம்மா 21.03.2010 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் செல்வரத்தினத்தின் (சின்னமணி) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சின்னமேனை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - நாகம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ் சென்ற இராசையா மற்றும் கனகசபாபதி, ஆறுமுகம் (ஓய்வு பெற்ற கிராம சேவகர்), இலட்சுமிப்பிள்ளை, இராசலட்சுமி, நாகையா (U.K), சறோயினிதேவி, விஜயகுமாரன் (அண்ணாபாம்), ஜெகதாம்பாள் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராச ரத்தினத்தின் (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்) மைத்துனியும் குமாரதாஸ் (U.K), குமாரதர்சினி (ஆசிரியர், இணுவில் இந்துக் கல்லூரி), அருள்தாஸ் (பிரான்ஸ்), சங்கரதாஸ் (பிரான்ஸ்), குமாரநந்தினி (ஜேர்மனி), குமாரசுகந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெகதீஸ்வரி, திருப்பதிராசன் (ஆசிரியர், இணுவில் மத்திய கல்லூரி), ராகினி, லதா, மதியழகன், சிவகுமார் ஆகியோரின் மாமியாரும் தனந்தி, விசாகன், லக்ஷா, விஷ்ணவன், பவித்திரன், அஸ்வின், மிதுன், சாயீஸ், சகாயன், காலஞ்சென்ற பிரவின் மற்றும் கஜானி, சதுர்ஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.03.2010) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ந.ப.12 மணியளவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சத்தடி தெற்கு,
இணுவில். (95845)

தகவல்:
குடும்பத்தினர்.

## வ. நல்லையா (நாகரத்தினம்)

(ஓய்வு பெற்ற அதிபர்)



புங்குடுதீவு ஏழாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கல்கிசையை வசிப்பிடமாகவும் கொண்ட வ. நல்லையா (ஓய்வு பெற்ற அதிபர், வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம்) அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம்-தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வேலணை மேற்கு செல்லத்துரை-கனகம்மா தம்பதியினரின் மருமகனும், பூமணியின் (ஓய்வு பெற்ற ஆசிரியர், திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலை) அன்புக் கணவரும், சசிகலா (U.K), Dr. சசிகரன் (சத்திரசிகிச்சை நிபுணர், அவுஸ்ரேலியா), Dr. சசிகேசவன் (போதனா வைத்திய சாலை, மட்டக்களப்பு), குமுதினி (ஆசிரியை, அல்ப ஹாரியா மத்திய கல்லூரி, பாணந்துறை), காலஞ்சென்ற முகுந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பரநிருபராஜா (U.K), அஜீற்றா (அவுஸ்ரேலியா), Dr. சமயந்தன் (மாவட்ட வைத்தியசாலை, செங்கலடி), Dr. நளினா (போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் இராமச்சந்திரன் (ஓய்வுபெற்ற இலிகிதர், கிராமசபை), பரமேஸ்வரி (கனடா), ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற பொறியியலாளர், அவுஸ்ரேலியா), சறோஜினிதேவி, கமலாதேவி, வில்வரத்தினம் (கனடா), பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கோமளேஸ்வரி, கமலாம்பிகை (அவுஸ்ரேலியா), தம்பிராசா, செல்வராசா (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகலனும், திலக்ஷா, கலைமாறன் (U.K), சிவப்பிரணவன், சிவப்பிரம்யன், சிவநிர்மிதன் (அவுஸ்ரேலியா), தருணி, சஷ்மிதா ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.03.2010) புதன்கிழமையன்று கல்கிசை "மகிந்த மலர்ச்சாலையில் " அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (25.03.2010) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று 3.00 மணிக்கு பொரளை, கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(சி/565845)

தகவல்:
மனைவி, மக்கள்,
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## நீடிக்கும் பொருளாதாரச் சீரழிவு

பிரபல பொருளியல் ஆய்வாளரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற வேட்பாளருமான ஹர்ஷா டி சில்வா நாட்டின் பொருளாதாரம் தொடர்பாக மீண்டும் அதிர்ச்சி தரும் தகவல்களைப் போட்டுடைத்திருக்கின்றார்.

அவர் குறிப்பிட்டுக் காட்டியுள்ள முதலாவது விடயம் - அபிவிருத்திக்கென, குறிப்பாக வடக்கு, கிழக்கின் அபிவிருத்திக்கென, ராஜபக்ஷ அரசிற்கு சர்வதேச நாணய நிதியம் நடைமுறை வசதியாக ஏற்பாடு செய்து கொடுத்துள்ள 64 கோடி டொலரில் (சுமார் 65 ஆயிரம் கோடி ரூபாவில்) ஒரு டொலரைக் கூட இந்த அரசு இன்னும் பயன்படுத்தவில்லை. அது தேங்கிக் கிடக்கின்றது.

அதேவேளை, கடந்த வாரம் ஸ்ரீலங்கா அபிவிருத்தி முறிகளை, சுமார் நான்கு வீத வட்டிப் பெறுமதியோடு விற்பனை செய்ததன் மூலம் அரசு, ஒன்பது கோடி முப்பது லட்சம் டொலரை (சுமார் 950 கோடி ரூபாவை) கடனாகத் திரட்டியிருக்கின்றது என்பது அவர் குறிப்பிட்டுள்ள அடுத்த விடயம்.

இந்த நிதியும் கூட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகவே திரட்டப்படுகின்றது எனக் கூறப்பட்டாலும், உண்மையில் ஏற்கனவே வாங்கிக் குவித்த கடன்களை மீளச் செலுத்தவே, இப்படிப் பண முறிகளை விற்கும் பெயரில் முன்னெடுக்கப்படுகின்ற கடன் வாங்கும் நடவடிக்கைகளை அரசுத் தரப்பு மேற்கொள்கின்றது என்றும் ஹர்ஷா டி சில்வா சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

ஏற்கனவே அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென சர்வதேச நாணய நிதியம் நடைமுறை வசதியாக ஏற்பாடு செய்த 65 ஆயிரம் கோடி ரூபாவில் ஒரு ரூபாவைத் தன்னும் அந்நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தாத அரசு, அதே அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு என்ற பெயரில் - சர்வதேச நாணய நிதியத்தின் விதிப்பிலும் விடக் கூடிய வட்டி செலுத்தவேண்டிய - பண முறிகள் மூலம் 950 கோடி ரூபாவைத் திரட்ட முனைவது ஏன் என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது.

வெளிப் பார்வைக்கு - பெயருக்கு - இந்த நிதித் திரட்டல் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு என்று கூறப்பட்டாலும், உண்மையில் ஏற்கனவே உயர் வட்டிக்கு - வர்த்தக அடிப்படையில் - அரசு வாங்கிக் குவித்த கடனுக்கான மீள் செலுத்துகைக்காகவே அந்த நிதியை அரசு தேடுகின்றது என்பதே உண்மையாகும்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து அபிவிருத்திக்கென நிதியை அரசு பெற்றால் அதனை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மட்டுமே அரசு பயன்படுத்த முடியும். அதனை வேறு செலவுகளுக்கோ அல்லது முன்னைய கடன்களுக்கான நிலுவைகளை மீளச் செலுத்திச் சமாளிக்கும் தேவைக்கோ அதனைப் பயன்படுத்த சர்வதேச நாணய நிதியம் அனுமதிக்காது. கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக்கொண்டு அது தனது நிதி ஒதுக்கீட்டுத் திட்டங்களின் போக்கைக் கண்கொத்திப் பாம்பாக அவதானித்துக் கொண்டிருக்கும்.

அதனாலேயே சர்வதேச நாணய நிதியம் அபிவிருத்திக்கென வழங்கிய நடைமுறை நிதி ஏற்பாட்டு வசதி அப்படியே கிடக்க, பண முறிகள் மூலம் - தனது நேரடிக் கட்டுப்பாட்டில் இடம்பெறும் கடன் அறவிடும் திட்டம் வாயிலாக - 'அபிவிருத்திக்கென' என்ற பெயரில் நிதியைத் திரட்டுகின்றது அரசு என்பதை அவர் புட்டுப் புட்டுக் காட்டியிருக்கின்றார்.

நிதி அறவீடுகள், கடன்கள் பெறுதல் போன்றவை தொடர்பில் அரசுத் தரப்பின் கடந்த காலப் பதிவுகள் மக்களைத் தவறாகத் திசை திருப்புபவையாகவே அமைந்துள்ளன என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள ஹர்ஷா டி சில்வா, 'எச்.எஸ்.பி.ஸி.' வங்கியிடமிருந்து - உயர் வர்த்தக வட்டிக்கு - இலங்கை அரசு பணமுறியாகப் பெற்றுக்கொண்ட - 'பிரபலமான' - ஐம்பது கோடி அமெரிக்க டொலர் (சுமார் ஐயாயிரத்து ஐந்நூறு கோடி ரூபா)கடன் விடயத்தில் அரசுத் தரப்பு ஏறுக்கு மாறாக விடுத்த அறிவிப்பையும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

இந்தக் கடன் பெறும் முயற்சி கூட முதலில் அபிவிருத்திக்கென்றுதான் அறிவிக்கப்பட்டது. ஆனாலும் பின்னர் இந்தப் பணத்தில் பெரும்பகுதி அரசு அறவிட்ட பழைய கடன்களுக்கான நிலுவையைச் செலுத்தவே பயன்படுத்தப்பட்டது என்பதை அரசே ஒப்புக்கொண்டது என்பதை அம்பலப்படுத்துகிறார் ஹர்ஷா.

கடந்த ஆண்டில் அரசின் வரி விதிப்பு மூலமான வருமானம் ஆக 70ஆயிரத்து 200 கோடி ரூபாதான். ஆனால் முன்னர் பெற்ற கடனுக்கான அந்த வருடத்தில் செலுத்தவேண்டிய முதலின் பகுதி மற்றும் வட்டி ஆகியன மொத்தம் 82 ஆயிரத்து 400 கோடி ரூபா. இப்படி வருமானத்தை விட வருடாந்தம் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை எகிறியுள்ள நிலையில், இந்தத் தேசம் பொருளாதார சீரழிவிலிருந்து மீளுவது என்பது துர்லபமே.

'கடன் வாங்கிக் கல்யாணம்' என்பது போல எல்லா விடயங்களையும் அவ்வப்போது கடன் வாங்கி ஒப்பேற்றி, சாதனை செய்துவிட்டவர்களாகத் தங்களைக் காட்டிக்கொண்டு, கடன் சுமைகளை அடுத்த ஆட்சித் தரப்பு மீதும், அடுத்த தலைமுறை மீதும் சுமத்திவிட்டுப் போகும் தற்போதைய பாங்கு - பாணி - தொடருமானால் இந்த நாடு பொருளாதாரத் துறையில் மேம்படுவதற்குச் சாத்தியமே கிடையாது என்பதுதான் உண்மை.

## மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு உதவுவதற்கு நிக்கொட் நிறுவனத்துக்கு 750 மில்லியன் ரூபா

### தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு வழங்கியது

யாழ்ப்பாணம், மார்ச் 24

மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு உதவுதொகை வழங்குவதற்கு என தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு 750 மில்லியன் ரூபாவை அரச நிறுவனமான 'நிக்கொட்' நிறுவனத்துக்கு வழங்கியுள்ளதென அதன் திட்டப் பணிப்பாளர் தம்பையா லங்கா நேசன் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் இலங்கை அரசுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ள இந்த நிதியுதவி மூலம் 30 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் வழங்க முடியும்.

யாழ்ப்பாணத்தில் 22 ஆயிரம் குடும்பங்களுக்கும், மன்னாரில் 2 ஆயிரத்து 750 குடும்பங்களுக்கும், வவுனியாவில் ஆயிரத்து 240 குடும்பங்களுக்கும், கிளிநொச்சியில் 4 ஆயிரத்து 510 குடும்பங்களுக்கும் என இந்த உதவுதொகை வழங்கப் படவுள்ளது.

இதுவரையும் 20 ஆயிரத்து 145 குடும்பங்களுக்கு இந்தக் கொடுப்பனவு அவரவர் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

மீளக்குடியமர்ந்த மக்கள் தமது வாழ்வாதார முன்னேற்றத்துக்கு இந்த நிதியைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். சிறுகைத்தொழில், விவசாயம், மீன்பிடி, சிறுவியாபாரம் போன்ற முயற்சிகளில் குடும்பங்கள் ஈடுபட முடியும் -என்றார். (50-14)

## குடா நாட்டில் பிரதான வீதிகள் பலவும் தார்க் கலவையால் தற்காலிகமாகப் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ். குடா நாட்டின் பிரதான வீதிகள் பலவும் தார்க்கலவையைக் கொண்டு சீர்செய்யப்பட்டு வருகின்றன.

மானிப்பாய் வீதி, ஸ்ரான்லி வீதி, பலாலி வீதி, கே.கே.எஸ். வீதி, பருத்தித்துறை வீதி போன்றவையே தற்போது செப்பனிடப்பட்டு வருகின்றன.

இந்த வீதிகளில் காணப்படும் பள்ளங்கள், சேதங்க்ளே தார்க்கலவையைக் கொண்ணடு தற்காலிக ஏற்பாடாகப் புனரமைக்கப்படு கின்றன என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, சில இடங்களில் போடப்பட்ட இந்தத் தார்க்கலவை அதிகரித்த வாகனப் போக்குவரத்துக் காரணமாக கிளறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-224)

## மலகூட குழிகளுக்கு மாற்றீடாக 'பிளாஸ்ரிக்' கொள்கலன் பாவிக்கலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

மாநகரசபை எல்லைக்குள் குடிசன அடர்த்தி அதிகமாகவுள்ள பிரதேசங்களில் மலசல கூடங்களை அமைப்பதால் நிலத்தடிநீர், மாசடைதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுவதால் 'பிளாஸ்ரிக்' மலத்தாங்கிகளைப் பாவிக்குமாறு யாழ். மாநகர முதல்வர் திருமதி யோ. பற்குணராசா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

மாநகரசபை எல்லைக்குள் குடிசன அடர்த்தி அதிகரித்துள்ள பிரதேசங்களில் மலகூடங்களை அமைப்பதற்கான கட்டட அங்கீகாரத்தை வழங்குவதில் பெரும் சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன. குறிப்பாக சிறியதுண்டுக் காணிகளில் இவ்வாறான குழிகளை அமைக்கும்போது அருகிலுள்ள கிணற்றுநீர் மாசடைவதோடு சுகாதாரச் சீர்கேடும் ஏற்படுவதற்கு சாத்தியங்கள் அதிகமாகவே உள்ளன.

இவ்வாறான நிலையில் மலக்குழிகளிலிருந்து கழிவுகள் வெளியேறாத வகையில் 'ஆர்ப்பிகோ' (ARPICO) நிறுவனத்தினால் அறிமுகப்படுத் தப்பட்டுள்ள மலத்தாங்கிகளின் பாவனை மூலமாக மேற்கூறப்பட்ட அனைத்துச் சீர்கேடுகளும் இல்லாது ஒழிக்கும் நிலை உருவாகும்.

மாநகரசபை அலுவலகத்தினுள் மேற்படி நிறுவனத்தால் காட்சிப் படுத் தப்பட்டுள்ள மலத்தாங்கிகளைப் பார்வையிட்டு நியாய விலையான ரூபா 47,000இற்கு பெற்று பயன் படுத்துமாறும் அறிவுறுத்துகின்றேன்.

இதன் பாவனை பற்றிய தொழில்நுட்ப உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்குவதற்கு மாநகரசபை தயாராகவேயுள்ளது - என்றுள்ளது. (ஒ-10)

## கற்சிலைமடு பாடசாலை மீண்டும் ஆரம்பம்

ஒட்டுசுட்டான், மார்ச் 24

கற்சிலைமடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை கடந்த 15ஆம் திகதியிலிருந்து மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது. ஆரம்ப நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மேகநாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மங்கள விளக்கேற்றி பாடசாலையை ஆரம்பித்து வைத்தார்.

தற்போது திருத்தவேலைகள் செய்யப்படாத நிலையிலும் மாணவரின் கல்விநிலை பாதிக்கப்படக் கூடாது என்ற நோக்கில் துணுக்காய் வலயத்தில் ஆறாவது பாடசாலையாகக் கற்சிலைமடு பாடசாலை இயங்கத் தொடங்கியுள்ளது.

இப்பாடசாலைக்குத் தற்போது 235 மாணவர்கள் வருகை தருகின்றனர் என்று அதிபர் தெரிவித்தார். (ஒ-க-341)

## மீள்குடியேறிய முத்துஐயன்கட்டு மக்களுக்கு விவசாயத் தேவைகளுக்கு குளத்து நீர்

### வாய்க்கால் தூர்வாரும் பணிகள் ஆரம்பம்

ஒட்டுசுட்டான், மார்ச் 24

முத்துஐயன்கட்டுப் பகுதியில் மீள்குடியேறிய மக்களின் விவசாயத் தேவைகளுக்காக குளத்து நீரை வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கென வாய்க்கால்களைத் தூர்வாரும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. அத்துடன் மீள் குடியேறிய ஒவ்வொருவருக்கும் தலா இரண்டு ஏக்கர் காணி விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் தங்கியிருக்கும் இப்பகுதி மக்கள் தமது வாழ்வாதாரங்களை மேம்படுத்திக்கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. மேலும் இப்பிரதேசத்திலுள்ள சிறு குளங்களும் புனரமைக்கப்பட்டு வருவதாகவும், பல நிறுவனங்கள் இப்பணிகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-க-341)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 11 | 25.03.2010 |
| | வியாழக்கிழமை |
| திதி: | தசமி |
| | மு.இ. 07.57 வரை |
| நட்சத்திரம்: | புனர்பூசம் காலை 07.16 வரை |
| | பூசம் பி.இ. 05.40 வரை |
| சுபநேரம்: | 07.45 -09.15 வரை |
| ராகுகாலம்: | 01.45 -03.15 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தூர் வடக்குக்கு விரைவில் மின்சாரம்

கோப்பாய், மார்ச் 24

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையில் வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் கோப்பாய் வடக்கு மற்றும் புத்தூர் வடக்கு ஆகிய பிரதேசங்களில் புதிதாக மின் விநியோகத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான வேலைத்திட்டங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் விரைவில் மின்விநியோகப் பணிகள் ஆரம்பமாகவுள்ளன. இதன்மூலம் மேற்படி பிரதேசங்களைச் சேர்ந்த 450 குடும்பங்கள் நன்மையடையவுள்ளன. (ஒ-201)

## ஆயிரம் பிறை கண்ட பெரியாருக்குக் கௌரவம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

காரைநகர் அருள்மிகு திருமணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் திருக்கோயில் இரண்டாம் திருவிழா சென்ற இரண்டாம் திகதி செவ்வாய்க்கிழமை மிகச்சிறப்பாக நடந்தேறியது.

இந்த உற்சவத்தின்போது 1008 சங்காபிஷேகம் நடைபெற்றதுடன் பல சிவாச்சாரியார்களும், தலைசிறந்த நாதஸ்வர, தவில் வித்துவான்களும் கலந்து சிறப்பித்தனர். அத்துடன் ஆயிரம் பிறைகண்ட கே.கே. சுப்பிரமணியத்துக்கு அவர்களுக்கும் அவரது பாரியாருக்கும் எசமான அபிஷேகமும் சிறப்பாகச் செய்யப்பட்டது. மேலும் இந்தத் தம்பதியினர் பொன்னாடை போர்த்தி, மாலை அணிவிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர். (ஒ-க)

## யோகர் சுவாமிகளின் குருபூசைத் தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

யோகர் சுவாமிகளின் 46ஆவது குருபூசைத் தினம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை சிறப்பாகக் கொண்டாடப்படவிருப்பதாக சிவதொண்டன் சபையினர் அறிவித்துள்ளனர்.

பங்குனி ஆயிலிய நாளான வெள்ளிக்கிழமை யாழ். சிவதொண்டன் நிலையத்திலும், கொழும்புத்துறை சமாதிக் கோயிலிலும் குருபூசை சிறப்பாகக் கொண்டாடப் படுவது டன், குருபூசைக்கு முந்திய மூன்று நாள்களும் ஆச்சிரம வாழ்வு நாள்கள் என்பதால், இந்த நாள்களில் யாழ். சிவதொண்டன் நிலையத்தில் நற்சிந்தனை முற்றோதல் நடைபெறும் என்றும் சபையினர் அறிவித்துள்ளனர். (ஒ-க)

## கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 24

தவறவிடப்பட்டுள்ள அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

வசாவிளானைச் சேர்ந்த இராசரத்தினம் சுபாசினியின் விசேட அடையாள அட்டை (இல. 0907025264), சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த துர்க்காதேவி அஜந்தனின் தேசிய அடையாள அட்டை (இல. 837714826 V) ஆகியனவே கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் தகுந்த ஆதாரத்துடன் போதனா வைத்தியசாலை அலுவல கத்தில் பெற்றுக்கொள்ளுமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ-201)

# IIS

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு 01 : 25.03.2010
பிரிவு 02 : 27.03.2010
காலை 10.00 மணி

**Diploma Courses**

- Diploma in Software Development
- Diploma in Computer Hardware & Networking Eng.
- Diploma in Business Information System

**Certificate Courses**

- Certificate in Office Solution Development
- Certificate in Networking
- Certificate in Java Programming
- Certificate in Visual Programming
- Certificate in Web Designing
- Certificate in Computerized Accounting
- Certificate in Hardware Technology
- Certificate in Eng.Drawing & AutoCAD
- Certificate in Database Management System
- Certificate in Multimedia
- Certificate in Desktop Publishing

INSTITUTE OF INFORMATICS STUDIES ( IIS )
#100, Clock Tower Road, Jaffna.
T.P.No : 021 222 2831 Fax : 021 222 6933 E.Mail : iiscc@sltnet.lk



## அரிசி விற்பனை

தரமான சிவப்பு நாட்டரிசி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.

1kg சிவப்பு நாட்டரிசியின் விலை ரூ.50 மட்டுமே.

இடம்: இல.163, சிவகணேசன் களஞ்சியம், ஆஸ்பத்திரி வீதி, கோட்டை, யாழ்ப்பாணம் (பழைய மீன் சந்தை அருகில்)
தொடர்புகளுக்கு: 0777283811.
(95833)


## தவறிவிட்டது

இணுவில் கிழக்கு, தியேட்டர் லேன் என்னும் முகவரியைச் சேர்ந்த ஐயாத்துரை விக்னேஸ்வரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (660841636V) 19.03.2010 அன்று தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் மேற் காணும் முகவரியுடன் அல்லது 0215100642 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
(95831)


முகாமைத்துவ பயிற்றுவிப்பாளர்கள், கணக்கியல், மனிதவளங்கள்/ சந்தைப்படுத்தல்/நிர்வாகம், இள நிலை பட்டதாரிகள் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவர்களாக மற்றும் கம்பியூட்டர் அறிவு மற்றும் நல்ல சோதித்தறியும் திறமைகளோடு விண்ணப்பிக்கவும்.

**யுனிடெக் பிளேஸ் மென்ட்ஸ்**
545, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை
கொழும்பு. 10.
ஈ.மெயில்: Penpal@eureka.lk
Fax: 011-2448211
(சி/565836)





## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி இராஜராஜேஸ்வரி சுந்தரராஜன்
அவர்களின் அன்புத் தாய்
**திருமதி சரவணப்பெருமாள் அருந்தவநாயகி**
அவர்களின் திடீர் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். (95830)
உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
யா/பெரியபுலம் ம.வித்தி.

யா/பன்னாலை கனகசபை வித்தியாலயத்தின்

## கண்ணீர் அஞ்சலி




எமது பாடசாலையின் ஆரம்பப் பிரிவுக்குப் பொறுப்பான ஆசிரியை திருமதி பா.முகுந்தன் அவர்களின் தாய்
**திருமதி செல்லத்துரை கனகேஸ்வரி**
அவர்களின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த துயரம் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/பன்னாலை சேர்.கனகசபை
வித்தியாலயம்,தெல்லிப்பழை. (95839)
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
ப.மா.சங்கம்.

## 31ஆம் நாள் நினைவலைகள்

எம்மையும் மண்ணையும் விட்டகன்று சென்ற தங்கள் பாதங்களில் கண்சிவந்து வடியுமெங்கள் அஞ்சலிகள்

இருவர் உறவில் மனிதன்
23 . 09 . 1948



இறைவன் அழைப்பில் புனிதன்
22 . 02 . 2010

## அமரர் கந்தையா இராசன்

**நினைவு மாறா வரிகள்**

உறவுகள் ஆயிரம் உதித்திடலாம் - அவை
வரவுகள் என நாங்கள் சூடித்திடலாம்
கனவுகள் போலவை கலைந்திடலாம் - ஆனால்
விளைவுகள் ஏமாற்றவை வந்திட்டாலும்
கலையாத உறவுங்கள் உறவு அது - எம்மில்
நிலையாய் பதிந்தென்றும் நினைவிலாழ்ந்தும்.

2010.02.22 அன்று சிவனின் அமர கணத்துள் ஒருவராகிய எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டி (31ஆம் நிறைவு நாள்) நிகழ்வு நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் (நல்லூர் சட்டநாதர் கோயிலுக்கு அருகாமையிலமைந்துள்ள மண்டபம்) இன்று (24.03.2010) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும். அந்நிகழ்விலும் அங்கு தொடர்ந்து இடம்பெறும் நண்பகல் உணவிலும் கலந்து எம்மை ஆறுதல் படுத்தும் வண்ணம் உற்றார், உறவினர், ஊரார், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் மிக்க அன்புடன் அழைக்கின்றோம்.

56/19, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம் மேற்கு, யாழ்ப்பாணம். (95836)
நன்றியுடன்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்தங்கச்சி துரையப்பா



இணுவிலைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் தற்போது கனடா மார்க்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தங்கச்சி துரையப்பா (19.03.2010) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் துரையப்பா அவர்களின் அருமை மனைவியும் ஜெகதாம்பிகை (தஞ்சி), பாலச்சந்திரன், ராமச்சந்திரன், தவமணி (தேவி), நகுலாம்பிகை (சந்திரா), சீதா (இந்திரா), சூரியநாராயணன், ராதா (பவா), பத்மநிதி, சிறிவிக்கிரமநாராயணன் மற்றும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், பாலசுப்பிரமணியம், பாலகிருஷ்ணன், ஞானசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புத் தாயும் விமலாதேவி, சத்தியபாமா, சிவசுப்பிரமணியம், ரஞ்சிதமலர், பரமேஸ்வரி, சிவதர்மன், கருணாகரன், சிவஞானம், ஆனந்தா, சிவராஜா, லயனல், அஜினா மற்றும் காலஞ்சென்ற டம்பிகை பூசனி ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24.03.2010) புதன்கிழமை கனடா நேரப்படி காலை 9மணிதொடக்கம் முற்பகல் 11 மணி வரை **WELLESLEY AND PARLIAMENT** சந்திப்பில் உள்ள **ST. JAMES CREMATORIUM, 635, Parliament street, Toronto** இல் ஈமக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
தொ.பே.: 0212223604. (95837)

தகவல்:
திருமதி சத்தியபாமா
பாலகிருஷ்ணன்
(மருமகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1,600 மில்லியன் ரூபா நிதியுதவியுடன்
# வடக்கில் 5 மாவட்டங்களிலும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள்
## மே மாதம் முதல் 'நிக்கொட்' நடைமுறைப்படுத்தும்

யாழ்ப்பாணம்,மார்ச் 24

அரசினால் வழங்கப்பட்ட ஆயிரத்து 600 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் வட மாகாணத்தில் ''கடன் விரிவாக்கல் திட்டம்'' எனும் புதிய திட்டம் ஒன்றை 'நிக்கொட்' நிறுவனம் அமுல்படுத்தவுள்ளது என்று நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் தம்பையா லங்காநேசன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்வரும் மேமாதம் ஆரம்பத்தில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் இந்தப் புதிய திட்டத்திற்குரிய நிதியில் ஆயிரத்து 300 மில்லியன் ரூபாவை ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கை அரசுக்கு கடனுதவியாக வழங்கியுள்ளது. வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இதில், கிளிநொச்சி வைத்தியசாலை புனர் நிர்மாணத்துக்கென 150 மில்லியன் ரூபா ஒதுக்கப்படவுள்ளது.

பாடசாலைகள் புனருத்தாரணம், விவசாயம் மற்றும் கால்நடை அபிவிருத்தி போன்றவற்றுக்கு 170 மில்லியன் ரூபாவும், கிராமிய மின் திட்டத்துக்கு 100 மில்லியன் ரூபாவும், அரச நிறுவன உட்கட்டமைப்புக்கு 50 மில்லியன் ரூபாவும்-

கிராமங்களின் வீதிகளைத் திருத்துவதற்கு 100 மில்லியன் ரூபாவும், குளங்கள் புனரமைப்பிற்கு 100 மில்லியன் ரூபாவும், கிராம மட்டத்திலான உட்கட்டமைப்பு வசதிகளுக்கு 100 மில்லியன் ரூபாவும் இவற்றைவிட வட மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளின் உபகரணங்களின் தேவைகளுக்கு 100 மில்லியன் ரூபாவும் விவசாயம் கால்நடை விருத்திக்கு 200 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்படவுள்ளன.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் நிக்கொட் நிறுவனம் கடந்த காலங்களில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளுக்கும் 1,371 மில்லியன் ரூபாவைச் செலவழித்துள்ளது-என்றார். (ஒ-14)


## பற்றைகளால் மூடிக்கிடந்த அரியாலை பிள்ளையார் கோயில் புனரமைப்பு

யாழ்ப்பாணம். மார்ச் 24

யாழ்.கண்டி வீதியிலிருந்து கிழக்கு அரியாலை செல்லும் பாதையின் வடக்குப் புறமாக உள்ள கொட்டுக்கிணற்றடிப் பிள்ளையார் கோயிலைப் புனரமைக்கும் பணிகளை மீளக் குடியேறிய மக்கள் முன்னெடுத்துள்ளனர்.

அரியாலை கிழக்குப் பகுதி மக்கள் 1995 நவம்பர் மாத இடப்பெயர்வோடு கைவிடப்பட்டிருந்த இக்கோயில் பற்றைகள் அடர்ந்து வளர்ந்து மூடப்பட்டிருந்தது.

பழமையும் , பெருமையும் மிக்க இக்கோயிலைப் புனரமைத்து புனராவர்த்தன கும்பாபிஷேகத்தைச் செய்து பொதுமக்களுக்கு வழிபாட்டிற்குவிட அண்மையில் மீளக்குடியேற மக்கள் ஆர்வத்துடன் செயற்பட்டு வருகின்றனர். (ஒ-12)




# குறிகாட்டுவான் துறைமுகப் பகுதியில் கண்டபடி வீசியெறியும் 'லஞ்ச்சீற்'றுக்கள்
## கால்நடைகள் பாதிப்பு; சுகாதாரச் சீர்கேடு

புங்குடுதீவு, மார்ச் 24

குறிகாட்டுவான் துறைமுகப் பகுதியில் அங்குவரும் உல்லாசப் பயணிகள் கண்டபடி வீசியெறியும் 'லஞ்ச் சீற்'றுக்கள் மற்றும் 'சொப்பிங்' பைகள் காற்றில் பறந்து எங்கும் பரவிப்போய்க் கிடக்கின்றன. இதனால் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

தென்னிலங்கையிலிருந்து நாளாந்தம் பெரும் எண்ணிக்கையான உல்லாசப் பயணிகள் இங்கு வந்து செல்கின்றனர். இவர்கள் எடுத்துவரும் உணவுகளைச் சாப்பிட்டுவிட்டு 'லஞ்ச் சீற்'றுக்களை மீதி உணவுடன் சேர்த்து கண்ட இடங்களில் வீசிவிட்டுச் செல்கின்றனர். இவற்றை நாடி வரும் கால்நடைகள் உணவுடன் 'லஞ்ச் சீற்'றுக்களையும் சேர்த்துச் சாப்பிட்டு விடுகின்றன. இதனால் கால்நடைகள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றன

மேலும் தெருவோரங்களில் வீசப்படும் மீதி உணவுகள் நாறித் துர்நாற்றம் வீசுவதோடு இலையான்களும் மொய்க்கின்றன- இதனால் கடைகளில் இருக்கும் உணவுகளிலும் இலையான்கள் மொய்த்துப் பெரும் சுகாதாரச் சீர்கேடுகளும் ஏற்படுகின்றன.

சம்பந்தப்பட்டவர்கள் இவற்றைக் கவனத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்பதே இப்பிரதேச மக்களின் எதிர்பார்ப்பாகும். (ஒ-க-188)

# வேலணை பள்ளம்புலம் கிராமத்தில் இரு மதகுகள் அமைக்கப்படுகின்றன
## சமுர்த்திக்கு ஊர் மக்கள் நன்றி தெரிவிப்பு

புங்குடுதீவு, மார்ச் 24

சரவணை கிழக்கு, வேலணையில் உள்ள பள்ளம்புலம் கரப்பியன் வீதியில் இரு மதகுகள் அமைக்கப்பட்டு வருகின்கின்றன.

மழைகாலங்களில் நீர் வடிந்து செல்ல முடியாத அளவுக்கு இங்குள்ள வீதி உயரமாக உள்ளதால் குடிமனைகளுக்குள் புகும் மழைநீரை வீதியை வெட்டியே வெளியேற்ற வேண்டிய நிலை இருந்தது. இது தொடர்பாகப் பல கோரிக்கைகள் இப்பகுதி மக்களால் விடப்பட்டும் பயனெதுவும் கிடைக்கவில்லை.

தற்போது சமுர்த்தி நிறுவனம் இருமதகுகளை அமைத்து வருகின்றது. இதனால் இனிமேல் மழைநீர் தேங்காது வடிந்து செல்லவழியேற் பட்டுள்ளது. இதற்கு உதவிய சமுர்த்தி நிறுவனத்துக்கு இப் பகுதி மக்கள் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர். (க-188)




யாழ்ப்பாணம்,மார்ச்24

தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நவக்கிரக மூர்த்திகளுக்கு கும்பாபிஷேகமும், கோயிலின் முகப்புத் தோரண அலங்கார வாயிற் கோபுரத்துக்கான கலச அபிஷேகத்துடன் கூடிய பெருவிழாவும் நாளை வியாழக்கிழமை காலை 7.45 மணி தொடக்கம் 9.45 மணிவரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளன.

நேற்று செவ்வாய்க்கிழமை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வும் இடம்பெற்றது. (204)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்24

பண்ணாகம் விசவர்த்தனை ஸ்ரீ முருகன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், தீர்த்தத்திருவிழா மறுநாள் திங்கட்கிழமையும் நடைபெறும்.

திருவிழாக் காலங்களில் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மாவின் 'திருவிளையாடற் புராணம்' என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு நடைபெற்று வருகின்றது. (204)

* * *


யாழ்ப்பாணம்,மார்ச் 24

சாவகச்சேரி, நுணாவில் மத்தி கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

பாராளுமன்றத் தேர்தல் 2010
யாழ் மாவட்டம்

—உங்களது பாதுகாப்பு எனது பொறுப்பு சித்திரை 8ம் திகதி வெற்றிலைச் சின்னம் இலக்கம் 1 இற்கு வாக்களித்து என்னைத் தெரிவு செய்யுங்கள்




# தமிழ் எழுத்துக்களில் பல பிழைகளுடன் சுப்பிரமணிய பூங்கா அறிவுறுத்தல் பலகை!

யாழ்ப்பாணம்,மார்ச் 24

யாழ்.மாநகர சபையின் பராமரிப்பின் கீழ் இயங்கும் சுப்பிரணியம் பூங்காவின் முன் பக்கமாகப் பொருத்தப்பட்டுள்ள அறிவுறுத்தல் பலகையில் எழுதப்பட்டுள்ள தமிழ் எழுத்துக்களில் பல பிழைகள் காணப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

பூங்காவைப் பார்வையிடச் செல்வோர் அங்கு கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளைக் கூறும் பெயர்ப்பலகையில் உள்ள சொற்களில் மிகத் தெளிவாகத் தெரியக் கூடியதாக எழுத்துக்களில் பிழைகள் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

பெரும்பான்மை இனத்தவர்களின் பிரதேசங்களில் இவ்வாறான பிழைகள் விடப்பட்டிருந்தால், அதனைப் பெரிதுபடுத்தாமல் விடலாம். யாழ்ப்பாணத்தில் அதிலும் மாநகரசபையின் நிர்வாகத்திலுள்ள ஓர் அறிவித்தல் பலகையில் இவ்வாறான பிழைகள் ஏற்படுவதை எவரும் சகித்துக்கொள்ள மாட்டார்கள் என்று பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, இவ்விடயத்தில் மாநகர சபை உடனடிக் கவனமெடுத்து இதனைச் சீர் செய்ய முன் வருவதுடன் இனிமேல் இப்படியான தவறுகள் ஏற்படாத வண்ணம் கவனிக்க வேண்டும் என்றும் அவர்கள் கூறுகின்றனர். (ஒ-288)

# பொது அறிவுப் போட்டியில் வெற்றிபெற்ற 31 மாணவர்களின் பெயர்,விவரங்கள்

வண்ணை,மார்ச் 24

யாழ்.சமாதானத்துக்கும்,நல்லிணக்கத்துக்குமான (சீ.பீ.ஆர்) பணியகம் குடாநாட்டில் 15வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு இடையில் நடத்திய பொது அறிவுப்போட்டியின் ''அறிவுக்கு ஒரு சவால்'' இறுதிப் போட்டி அண்மையில் யாழ்.இந்துக்கல்லூரியில் நடைபெற்றது. பணியக இயக்குநர் அருட்பணி பிரவீண் மகேசன் அடிகள் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதிநிதிகளாக வடமாகான அமலமரித்தியாகிகள் முதல்வர் அருட்திரு போல் நட்சத்திரம் அடிகள்,யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம்,வண. பிதா குரூஸ் அடிகளார் ஆகியோர் கலந்துகொண்டனர். இறுதிச் சுற்றுக்குத் தெரிவா்ன 31பேர்களில் கீழ்க் கண்டோர் முறையே முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்டனர்.

எஸ்.ராகவேந்திரன், ஆர்.அபர்ணா, எஸ்.சுகன்ஜா [illegible] கல்லூரியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சான்றிதழ்கள் பெற்றுக்கொண்ட மாணவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:

வி.தவசனா (வேம்படி மகளிர்), ரி.விஜிதா (உடுவில் மகளிர்), ரி.சுதர்சனா (யாழ்ப்பாணக் கல்லூரி), என்.கோபிகா (தியாகராஜா ம.ம.வி.), ஒ.நிதுசன் (யாழ். இந்து), எஸ்.சபேசன் (யாழ்.இந்து), எஸ்.பிரியங்கா (வேம்படி மகளிர்), பி.தேவநோயா (கரவெட்டி விக்கினேஸ்வரா).

என்.பிரதீபன் (தியாகராஜா ம.ம.வி.), எஸ்.இனியவன் (சென்.ஜோன்ஸ்), ரி.கயத்திரி (விக்ரோறியா), கே.சாந்தினி (தியாகராஜா ம.ம.வி.), பி.ஐங்கரன் (விக்ரோறியா), ஆர்.பவதாரணி (விக்ரோறியா), எம்.சர்மிளா (கரவெட்டி விக்கினேஸ்வரா), கே.மதுசன் (கரவெட்டி விக்கினேஸ்வரா),எம்.அசோக்குமார் (கரவெட்டி விக்கினேஸ்வரா), கே.ஜினோஜன் (கொடிகாமம் அரசினர் வித்தி.), எஸ்.மயூரதன் (யாழ்.இந்து).

எஸ்.வின்சன் (சாவகச்சேரி இந்து), உ.விதுசா (டிறிபேர்க் கல்லூரி), எஸ்.ராகுலன் (தியாகராஜா ம.ம.வி.), ஈ.சிவராம் (விக்ரோறியா), ஜே.ஆரூரன் (யாழ்.இந்து), இ.விசானி (சாவகச்சேரி இந்து), எஸ்.சுஜீவன் (சாவகச்சேரி இந்து), எ.கிருஷாந்தன் (சாவகச்சேரி இந்து), ரி.துவாரகன் (சென்.ஜோன்ஸ்). (ஒ-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை வாய்ப்புப் பணியகத்தின் அலுவலகம் குடாநாட்டில் திறப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 24

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் அலுவலகம் ஒன்று நேற்றுமுன்தினம் காலை நல்லூரில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி இந்த அலுவலகத்தை இல.61/1 குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில், சமூகசேவைகள் மற்றும் சமூக நலன்புரித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வெளிநாட்டு வேலை வாய்ப்பு தலைமையத்தின் தலைவர் கிங்ஸிலி ரணவக்க, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மேம்பாட்டு நலன்புரி அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.ஸ்ரீசேன, யாழ் 51ஆவது படைப்பிரிவு தலைமை அதிகாரி சரத் ஜயசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.


## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விரோதி வருடம் பங்குனி மாதம் 11ஆம் நாள் நாளை(25.03.2010) வியாழக்கிழமை காலை 9.27 மணிமுதல் 10.33 மணிவரையுமுள்ள பூச நட்சத்திரமும், தசமி திதியும், அமிர்தசித்த யோகமும் கூடிய மீன லக்கின நல்வேளையில்

திரு.திருமதி பரஞ்சோதி தம்பதியரின் ஏக புத்திரன் திருநிறை செல்வன்
**ஸ்ரீகாந்தன்**
அவர்களுக்கும்



திரு.திருமதி முத்துக்குமாரன் தம்பதியரின் திருநிறை செல்வி
**சுமதி**
அவர்களுக்கும்

வல்வெட்டித்துறை, நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் திருவருள் துணை கொண்டு பருத்தித்துறை, கோட்டுவாசல் ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்பத்துடன் வருகை தந்து மணமக்களை வாழ்த்தி, தொடர்ந்து நடைபெறும் பகல்வேளை விருந்துபசாரத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதேவிரும்பும்

*திருமதி எம். பரஞ்சோதி,*
*174-4/15, மெசஞ்சர் வீதி,*
*கொழும்பு - 12.*

*திரு.திருமதி முத்துக்குமாரன்,*
*தெணி வைரவ கோயிலடி,*
*வல்வெட்டித்துறை.*

இருவீட்டார் அழைப்பு



யாழ்ப்பாண வணிகர் கழகம் நடத்தும்

## மாபெரும் வர்த்தக கண்காட்சி - 2010

அனைவரையும் கலந்துகொண்டு கண்காட்சியை பார்வையிடுவதற்கு விஷேட கழிவு விலையில் பொருள்களை கொள்முதல் செய்யும் சந்தர்ப்பத்தையும் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இடம்:
*யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி*
*யாழ்.மத்திய கல்லூரி*

காலம்:
*27, 28, 29 மார்ச் 2010*
*(சனி, ஞாயிறு, திங்கள்)*

மூன்று தினங்களும் மாலை 6.00 மணி தொடக்கம் 9.00 மணி வரை யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

அனுமதி இலவசம்

ஊடக அனுசரணை
உதயன்



## புனருத்தாரண வேலைக்கான விண்ணப்பம் கோரல்

வல்வெட்டி வேவில் கலட்டி சித்திவிநாயகர் (புதுப்பிள்ளையார்) ஆலயம் புனருத்தாரண வேலை செய்ய இருப்பதால் அவ் வேலையை செய்ய விரும்பும் ஆசாரிமார்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ளும் நேரம்:
காலை 8 மணி முதல் மாலை 2 மணிவரை.
விண்ணப்பம்: 05.04.2010 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

நன்றி.
M.P.தருமலிங்கம் (தலைவர்)
பத்திரிகை முகவர்
உடுப்பிட்டிச் சந்தி, வல்வெட்டித்துறை.



LANKA ALUMINIUM

METROOF

**Lanka Aluminium Industries (PLC)**
(லங்கா அலுமினியம் இன்டஸ்ரீஸ்) இனதும்
**Metroof Lanka (Pvt) Ltd**
(மெற்றூவ் லங்கா)
இனதும்
கலந்துரையாடல்

## அலுமினியம் பொருத்துனர்களை Glory Aluminium Enterprices வரவேற்கின்றது!

இடம்:
யூரோவில் கலந்துரையாடல் மண்டபம்
17, அக்ரேயன் சேர்விஸ் லேன்,
பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**காலம்: 26.03.2010 நேரம்: காலை 9.30 மணி**

பொருத்துனர்களின் செயல்நுட்ப பிரச்சினைகளுக்கு நிபுணர்களினாலும் விரிவுரையாளர்களினாலும் தீர்வு வழங்கப்படும்.

அனுமதி இலவசம்: முற்கூட்டியே பதிவு செய்யப்பட வேண்டும்.

விற்பனையாளர்:
குளோரி அலுமினியம்
இல. 96 A, கஸ்தூரியார் வீதி,
கன்னாதிட்டி சந்திக்கு அருகாமை,
யாழ்ப்பாணம்.
*021 222 1153, 0773114415.*

பதிவுக்கு தொடர்பு கொள்ள: 0777686021


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45 வருடங்களின் பின் வீதி புனரமைப்பு

தென்மராட்சி,மார்ச் 24

தும்பளை தெற்கு, கற்கோவளம் - மாதனை வீதி 'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 45 வருடங்களுக்கு மேலாக இவ் வீதி புனரமைக்கப்படவில்லை. பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர் இவ்விடயத்தில் மக்களின் போக்குவரத்து வசதி கருதி நடவடிக்கை எடுத்து புனரமைப்பு செய்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த வீதியைப் புனரமைத்தமைக்காக அப்பிரதேச மக்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளனர். (ஓ-122)

## மீளக்குடியமர்ந்த 36 குடும்பங்களுக்கு வீட்டு வசதிகள்

கோப்பாய்,மார்ச் 24

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்தவர்களில் வறிய 36 குடும்பங்களுக்குப் பாதுகாப்புத் தரப்பினர் அரை நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இப்பிரதேச செயலர் பிரிவின் பல்வேறு கிராம அலுவலர் பிரிவிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட 36 குடும்பங்களுக்கே இவ் வசதி கிட்டியுள்ளது. (ஓ-72)

## கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கான அறிமுகவிழா இன்று

யாழ்ப்பாணம்,மார்ச் 24

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 2010 ஆம் கல்வியாண்டுக்குப் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களுக்கான அறிமுகவிழா இன்று முற்பகல் 10 மணிக்குக் கல்லூரியின் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தேசிய கல்வியியற் கல்லூரிகளின் முன்னாள் பணிப்பாளர் திருமதி புவனேஸ்வரி இராமகிருஷ்ணா கலந்துகொள்ளவுள்ளார். (50-16)

## பருத்தித்துறை வீதியில் வேகப்பாதை; மும்முரமாக பணிகள் நடக்கின்றன

கோப்பாய்,மார்ச் 24

யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக அமைக்கப் பெற்றுவரும் இரு வழி வேகப் பாதை வேலைகள் பருத்தித்துறை வீதியில் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இவ்வீதியின் ஒரு வழிப்பாதை 7 மீற்றர் அகலம் உடையதாக இருக்கும். மத்தியிலிருந்து 3 மீற்றர் தூரம் வாகனம் பயணிப்பதற்கும் அடுத்த ஒரு மீற்றர் சைக்கிள் பயணிகளுக்கும் மற்றும் ஒரு மீற்றர் பாதசாரிகளுக்கும் ஒதுக்கப்படும். மற்றைய ஒவ்வொரு மீற்றரும் தொலைபேசி, மின் இணைப்பு தூண்களுக்கும் மற்றும் வடிகால் வசதிக்கும் அமைந்திருக்கும்.

இந்த அடிப்படையிலேயே இந்த வீதி புனரமைப்பு செய்யப்பட்டு வருகிறது.(ஓ-72)

## யாழ்.மாவட்ட கைவினைக் கலைஞர் அபிவிருத்திச் சங்கம் உதயம்

யாழ்ப்பாணம்,மார்ச் 24

தேசிய அருங்கலைகள் பேரவையின் ஏற்பாட்டில் ஒருநாள் செயலமர்வு யாழ். செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

பேரவையின் பிரதிப் பணிப்பாளர் திருமதி சந்திரமாலி லியனகே தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட தொழில் திணைக்கள அதிகாரிகளும் கைவினைக் கலைஞர்களும் பிரதேச செயலகங்களின் வெளிக்கள உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது யாழ்.மாவட்ட கைவினைக் கலைஞர் அபிவிருத்திச் சங்கம் உருவாக்கப்பட்டு நிர்வாகிகளும் தெரிவுசெய்யப்பட்டனர்.

யாழ்.மாவட்ட கைவினைக் கலைஞர்களுக்கு உதவுவதுடன் மே மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள மாகாண மட்டக் கண்காட்சியிலும் ஜூலை மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள தேசியக் கண்காட்சியிலும் அவர்கள் பங்குபற்றுவதற்கு இந்தச் சங்கம் உதவுமெனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-க-121)

## யாழ்.மாவட்ட கல்வித்துறை வளர்ச்சிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிதி உதவி

யாழ்ப்பாணம்,மார்ச் 24

யாழ்.மாவட்டத்தின் கல்வித்துறை வளர்ச்சியில் அக்கறை செலுத்திவரும் ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா யாழ்.திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென ஐந்து லட்சம் ரூபா நிதி உதவியை வழங்கியுள்ளார்.

பாடசாலை நிர்வாகத்தினரின் கோரிக்கைக்கு இணங்கவே அமைச்சர் இந்நிதி உதவியை வழங்கியுள்ளார்.

இதேவேளை, வடமராட்சி குடத்தனையிலும் தீவகப் பகுதியான புங்குடுதீவிலும் மாணவர்கள் தங்களது மேலதிக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மேலதிக மற்றும் பகுதி நேர வகுப்புகள் இல்லாத காரணம் அமைச்சருக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. அதைத் தொடர்ந்து இப்பகுதிகளில் மேலதிக வகுப்புக்களை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் இப்பகுதி சார்ந்த வேலையில்லாப் பட்டதாரிகளைக் கொண்டு இம்மேலதிக வகுப்புக்களை இயங்க வைப்பதற்கு அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

இதன் பிரகாரம் குடத்தனையில் மேலதிக வகுப்புக்களை நடத்துவதற்கென முதற்கட்டமாக 75 ஆயிரம் ரூபா நிதி உதவியையும் புங்குடுதீவுப் பகுதியில் மேலதிக வகுப்பை ஆரம்பிப்பதற்கென முதற்கட்டமாக ஒரு லட்சம் ரூபா நிதி உதவியையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ)

## மீளக்குடியமர்ந்தோருக்கு தகரங்கள் விநியோகம்

கோப்பாய்,மார்ச் 24

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் வன்னிப் பிரதேசத்தில் இருந்து மீளக்குடியமர்ந்தோருக்கு தகரங்கள விநியோகிக்கப்பட்டுள்ளன. குடும்பத்துக்கு தலா 12 தகரங்கள் வீதம் வழங்கப்பட்டுவருகின்றன.

ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் தத்தமது கிராம அலுவலர் ஊடாக தொடர்பு கொண்டு தற்காலிக கொட்டகை அமைப்பதை உறுதிப்படுத்தி தகரத்தைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (201-72)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## சைக்கிள், மரதன் ஓட்டப் போட்டிகள்

கைதடி,மார்ச்24

கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 54ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ்.மாவட்டத்தில் சைக்கிளோட்டம், மரதன் ஓட்டப் போட்டிகள் விரைவில் நடத்தப்படவுள்ளதாகச் சனசமூக நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

எனவே மேற்படி போட்டிகளில் பங்கு கொள்ள விரும்புவோர் தமது பெயர், விவரங்களை நேரடியாகப் பதிவுசெய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (201-288)

## 'போரூட்' நிறுவனத்தால் மாணவர்களுக்குச் சைக்கிள்கள்

கோப்பாய்,மார்ச் 24

வன்னிப் பகுதியில் இருந்து வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியேறியவர்களில் போக்குவரத்து வசதிகள் அற்ற வறிய நிலையில் உள்ள 174 மாணவர்களுக்கு 'போரூட்' நிறுவனத்தால் சைக்கிள்கள் கடந்த வாரம் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மேற்படி மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளைத் தொடர ஓரளவு வசதி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (201-72)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



பெண்கள் மூலம் முக்கியமான காரியம் ஒன்றைச் சாதிக்கலாம். நண்பர்களின் பொல்லாப்பைச் சந்திக்காமல் இருக்க பரிகாசப் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். வருமானம் வரும் வழிகள் அதிகரிக்கும். எதிர்பாராத திடீர் பணவரவுகளுக்கு வாய்ப்பு உண்டு. மற்றவர்கள் செலவில் உங்களின் சில தேவைகள் நிறைவேறும்.

### இடபம்



நினைத்த காரியங்களை நினைத்த நேரத்தில் முடிக்க முடியாமல் அவதிகளுக்கு ஆளாகலாம். குடும்பத்திற்குத் தேவையான பொருள் ஒன்றை வாங்க அலைந்து திரியலாம். விருந்து, விசேஷ நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கும். அரசியல்வாதிகள் மேலிடத்தின் அனுசரணையை, பாராட்டைப் பெறுவர்.

### மிதுனம்



கணவன் மனைவி இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் விலகி பாசம் அதிகரிக்கும். மேல் அதிகாரிகள் அனுசரணையாக நடந்து கொள்வர். வியாபாரிகள் பிற்போக்கான நிலையில் இருந்து விடு பட்டு மேன்மை காண்பர். கலைஞர்கள் தொழில் ரீதியான புதிய ஒப்பந் தங்களை மேற்கொள்ளலாம். பெற்றோர்களால் பெருமை அடைவீர்கள்

### கடகம்



தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். மறக்க முடியாத சம்பவம் ஒன்று நடக்கலாம். ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் அலைய நேரிடலாம். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். நிலம், வீடு வாங்க மேற்கொண்ட முயற்சிகள் தள்ளிப் போகலாம். கனவுத் தொல்லையுண்டு.

### சிங்கம்



குடும்பத்தில் மகிழ்ச்சி சந்தோஷம் அதிகரிக்கும். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். எதிர்பாராத திடீர் பணவரவுகளை நண்பர்கள் மூலம் பெறலாம். உடல் ஆரோக்கியக் குறைவுகள் நீங்கி உற்சாகம் பெறுவீர்கள். ஒருவர் செய்த உதவிக்கு பதில் உதவி செய்து பெருமை அடைவீர்கள். வாக்கு வாதத்தைத் தவிர்க்கவும்

### கன்னி



எந்த வேலையையும் நினைத்த நேரத்தில் முடிக்க சந்தர்ப்பம் சாதகமாக அமையும். தொழில் விடயங்களில் புத்திசாலித்தனமாக செயற்பட்டு ஆதாயத்தை அதிகரிப்பீர்கள். பொன், பொருள் வாங்கப் போட்ட திட்டம் கை கூடி வரும். புதிய தொழிலுக்கு முயற்சி செய்வோர் நல்ல செய்தி கேட்கலாம். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும்

### துலாம்



குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும் நாள். சக ஊழியர்களிடம் வீண் விவாதங்களைத் தவிர்க்க வேண்டும். தொழில் நிமித்தம் சிலர் வெளியூர் பயணம் செல்லலாம். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டுக்களைப் பெறுவர். வியாபாரிகளுக்கு பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர் ஒருவர் தங்களின் அனுபவத்தை உங்களிடம் சொல்லலாம்.

### விருச்சிகம்



மதிப்பு, மரியாதையை பாதிக்கும் சம்பவங்கள் நடக்கலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். அதிக ஆதாயத்தை எதிர்பார்த்த ஒன்றில் குறைந்த ஆதாயம் கிடைக்கலாம். எப்படியும் முடிந்து விடும் என நினைத்த காரியம் ஒன்று முடியாமல் போகலாம். மனக்குழப்பம் கூடும்.

### தனுசு



ஆடம்பரச் செலவுகளைக் குறைக்க வேண்டிய நாள். கணவன் மனைவி உறவில் இணக்கம் காணப்படும். வியாபாரிகள் உழைப்பிற்கு ஏற்ற பலன் பெறலாம். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நண்பர்களிடம் உங்களின் பெருமையைப் பற்றி பேசுவீர்கள். வரவேண்டிய கடன் மிகுதி ஒன்றை கேட்டு வாங்குவீர்கள்.

### மகரம்



உறவினர்கள் வருகையால் கலகலப்பு சந்தோஷம் அதிகரிக்கும். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்ட வேண்டும். புதிய சொத்துக்கள் வாங்கப் போட்ட திட்டத்தில் முன்னேற்றம் உண்டு. அண்டை அயலார் அனுசரணையாக நடந்து கொள்வர். மதிப்பு, கவுரவம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள்.

### கும்பம்



தன்னம்பிக்கை, தைரியத்துடன் செயற்படும் நாள். தம்பதியர்கள் இடையே குடும்ப விவகாரங்களில் வாக்குவாதங்கள் ஏற்படலாம். சிலருடன் வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். எதிர்ப்புகள் போட்டிகளால் மன உளைச்சல் அதிகரிக்கலாம். நல்ல காரியம் அல்லது சங்கடம் தரும் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்கலாம்.

### மீனம்



தன்னம்பிக்கை, தைரியத்துடன் செயற்படும் நாள். தம்பதியர்கள் இடையே குடும்ப விவகாரங்களில் வாக்குவாதங்கள் ஏற்படலாம். சிலருடன் வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். எதிர்ப்புகள் போட்டிகளால் மன உளைச்சல் அதிகரிக்கலாம். நல்ல காரியம் அல்லது சங்கடம் தரும் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்கலாம்.

## 4 வருடங்களில் கல்வியமைச்சால் 35,700 பேருக்கு ஆசிரிய நியமனம்

**அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தகவல்**

கொழும்பு, மார்ச் 24

கடந்த நான்கு வருட காலத்தில் 35 ஆயிரத்து 700 ஆசிரியர்களுக்கு புதிதாக நியமனம் வழங்கப்பட்டுள்ளது - என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் கல்வியமைச்சருமான சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் கூறினார்.

இங்கு அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையின் கல்வித்துறையில் அரசியல் செல்வாக்குச் செலுத்துவது முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது. எதிக்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கல்வித்துறை மீது சுமத்தும் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை.

• புதிய ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குதல், ஆசிரியர்கள், அதிபர்கள் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தல், கல்வி நிர்வாகச் சேவைக்கு ஆட்சேர்ப்பு, நவீன தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்துதல், ஆங்கில அறிவை அபிவிருத்தி செய்தல் போன்ற நடவடிக்கைகள் அமைச்சால் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாடநூல்கள் விநியோகம், சீருடை விநியோகம் என்பவையும் ஒழுங்கு முறைப்படி நடைபெற்றுவருகின்றன. இவை தொடர்பில் எதிக்கட்சித் தலைவர் சுமத்தும் குற்றச்சாட்டுகளில் உண்மையில்லை - என்றார். (சி)

## மனித உரிமை குறித்த வேலைத்திட்டத்தில் தொண்டு நிறுவனங்கள் அவநம்பிக்கை

கொழும்பு, மார்ச் 24

இலங்கை அரசு உருவாக்கிவரும் மனித உரிமைகள் தொடர்பான தேசிய திட்டம் குறித்து அரச சார்பற்ற அமைப்புகள் அவநம்பிக்கை வெளியிட்டுள்ளன. இது வெறுமனே மற்றுமொரு ஆவணமாக மாத்திரம் அமையும் எனக் கருத்துத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேற்குலகத்தினதும் சர்வதேச அமைப்புகளினதும் அழுத்தம் காரணமாக இலங்கை அரசு மனித உரிமைகள் தொடர்பான தேசிய திட்டமொன்றை உருவாக்கி வருகின்றது.

எனினும் இந்தத் திட்டம் குறித்து அவநம்பிக்கை வெளியிட்டுள்ள மனித உரிமைப் பணியாளர்கள் இது மற்றுமொரு ஆவணமாக மாத்திரம் அமையும் என்கின்றனர்.

ஐ.பி.எஸ். செய்திச் சேவைக்குக் கருத்துத் தெரிவித்துள்ள பெயர் குறிப்பிட விரும்பாத மனித உரிமைப் பணியாளர் ஒருவர், அரசியல் சிவில் உரிமைகள் தொடர்பான ஐ.நாவின் பிரகடனங்களை தான் பின்பற்றுவதாக சர்வதேச சமூகத்துக்குக் காண்பிப்பதற்கு அரசு முயல்கிறது எனத் தெரிவித்தார்.

மனித உரிமைகள் தொடர்பான தேசிய திட்டம் குறித்த ஆரம்ப கட்ட பேச்சுகளில் அரசு தங்களை ஈடுபடுத்தியிருந்த போதிலும் பின்னர் தாங்கள் தவிர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.


அரசின் நம்பகத்தன்மை குறித்த சந்தேகம் கொண்டிருந்தபோதிலும் அரச சார்பற்ற அமைப்புகள் குறிப்பிட்ட திட்டம் தொடர்பாக மிகுந்த ஆர்வத்தை வெளிப்படுத்தின எனச் சுட்டிக்காட்டியுள்ள தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெஹான் பெரேரா அரசு இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதே அதன் முன்னால் உள்ள சவால் எனத் தெரிவித்துள்ளார். (சி)

## கடவுளின் சித்தம் அறிந்து செயற்படுவதே மேன்மையானது

இன்று மதங்கள் மதங்கொண்டு திரிவதை நாம் எல்லோரும் பார்க்கின்றோம். நாம் ஒவ்வொருவரும் பிறக்கின்றபோது நான் இந்த மதத்தில், சாதியில், குடும்பத்தில், கோத்திரத்தில், இடத்தில் பிறக்கப் போகின்றேன் என்று கேட்டுப் பிறப்பதில்லை. இறைவனின் விருப்பப்படி ஏதோ ஒன்றிற்குள் பிறந்து வருகின்றோம்.

ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவன் குலமும், கோத்திரமும், சமயமும், பழக்க வழக்கமும் முக்கியமானதும் பெருமைக்குரியதுமாகும். அதை ஏன் எம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. நாம் எம்மையும் எம் கடவுளையும் ஏற்றுக்கொண்டால் அடுத்தவனையும் அவன் கடவுளையும் ஏற்றுக்கொள்ள முடியும். எந்த இறைவனும் தீமை செய்யும்படி சொல்லவில்லை. பல கடவுள்கள் உருவாக நாமே காரணகர்த்தாக்களாக இருக்கின்றோம். இறைவனுக்கு உருக்கொடுத்து, உருவம் கொடுத்தவர்கள் நாம் தான். இறைவன் எல்லோருக்கும் ஒருவர் தான். ஆண்டவர் உள்ள இடத்தில் அன்பிருக்கும், அமைதியிருக்கும், ஆனந்தம் இருக்கும், மனித நேயமும் மாண்பும் இருக்கும். இதனையே புனித பவுல் கூறுகின்றார்.

**தவக்காலச் சிந்தனை**



''உன்னிடத்தில் அன்பில்லையேல் ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும் தாளமும் போல் ஆவாய்'' என்று. உண்மையான சமய நெறி எது என்று யாக்கோபு குறிப்பிடும் போது ''தாம் சமயப் பற்றுடையோர் என எண்ணிக் கொண்டிருப்போர் நம் நாவை அடக்காமலிருப்பாரென்றால் தம்மையே ஏமாற்றிக் கொள்வர்''

''இனி உங்களிடையே யூதர்கள் என்றும் கிரேக்கர்கள் என்றும் அடிமைகள் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை. ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை. கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள்'' (கலா 3:28) எப்பொழுதும் கடவுள் முன்னிலையில் வாழ வேண்டும். தூய்மையைக் கடைப்பிடித்து பிறரை அன்பு செய்து நன்மையான செயல்களைச் செய்து கடவுள் முன்னிலையில் நிற்கக் கூடிய தகுதியுள்ள மனிதனாக வாழ்வோம். ஒருவர் தன்னுடைய மனதை முற்றிலும் கடவுளுடைய சித்தத்திற்கு கையளித்து விட வேண்டும். தன்னுடைய சொந்த விருப்பு வெறுப்புக்கேற்ப வாழ்க்கையை வாழாமல் கடவுளுடைய திருச்சித்தம் [illegible] வாழ வேண்டும்.

பருத்தித்துறை. ஜெஸ்வின் பற்றிமாராணி.


## 45ஆம் நாள் நினைவு நிகழ்வு



பிறப்பு 20 . 08 . 1988



பிறப்பு 11 . 05 . 1988

மறைவு:09.02.2010

இரவீந்திரதாசன் விக்ரர் அருள்தாசன்

வேலாயுதம் திருவிழி

(பல்கலைக்கழக முதலாமாண்டு மாணவர்கள் - முகாமைத்துவ பீடம்)

09.02.2010 அன்று அகாலமரணமெய்திய இரவீந்திரதாசன் விக்ரர் அருள்தாசன், வேலாயுதம் திருவிழி ஆகியோரின் 45ஆம் நாள் நினைவு நிகழ்வு நாளை (25.03.2010) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் பல்கலைக்கழகச் சமூகத்தினர், சகபணியாளர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

109 இரா[illegible]தன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(95818)

தகவல்:
பெற்றோர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**புலம்பெயர்ந்த தமிழர் சமுதாயம் தற்போது நாடுகள் ரீதியாக நடத்திவரும் தமிழீழத்திற்கான வாக்கெடுப்பானது மிகவும் வித்தியாசமான வினைத்திறனுள்ள விடுதலைக்கான வழியெனவும் அதுவே தமிழர்களுக்குரிய தீர்வுக்கான அடிப்படையை உருவாக்கும்." எனவும் மருத்துவர் பிறையன் செனிவிரத்தினா தனது சிறப்பு கட்டுரையில் கூறுகிறார்.**

**இக்கட்டுரையின் முழுமையான வடிவம் வருமாறு:-**

தமிழீழ வாக்கெடுப்பு: இதுவரை உலகம் முழுவதிலும் இப்படியொரு தீர்ப்பை எந்த விடயத்திலும், எந்த இடத்திலும் நான் காணவில்லை. புலம் பெயர் தமிழ் மக்கள் பெரும்பான்மையாகத் தமிழீழம் எனும் தனியான நாட்டை விரும்புகிறார்கள் என்ற கூற்று மிகவும் தவிர்க்கப்பட்டால் நூறு வீதம் தமிழீழத்திற்கு ஆதரவான வாக்குகள் இலகுவாகக் கிடைக்கலாம்.

### சமஷ்டித் தீர்வின் பயனின்மை

அன்றும் (1945இல்) அதனிலும் பார்க்க இன்றும், இந்தப் பொறுப்பற்ற, நாசகாரமான பிரித்தானியக் குடியேற்ற ஒரே நேர்மையான பாதை ஈழத்தை அமைக்கும் ஓர் அரசியல் தீர்ப்பாகும். அது ஒன்றுதான் நீண்ட நோக்கில் வெற்றியளிக்கக் கூடிய தீர்ப்பு என்றார்.

### தமிழ் வாக்கெடுப்பிற்கு எதிர்ப்பு

தமிழ் வாக்கெடுப்பில் எதிராக இல்லையென வாக்களித்த 561 (0.28 %) மக்களின் மனதில் எத்தகைய தீர்வு இருந்ததென அறிய ஆவல்பட்டேன்.

1. விடுதலை கிடைத்தபின் இலங்கைத் தீவில் இருந்த அதே நிலையைத் தொடர்வதன் மூலம் தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாகவோ அல்லது மூன்றாந்தரப் பிரஜைகளாகவோ வாழ்வது.

தமிழ் இளைஞர்கள் எமக்கு ஒளியூட்டுபவர்கள் ஊடகங்களின் ஆதரவின்றியும் இவர்கள் பிரித்தானியாவில் நடத்திய இவ்வாக்கெடுப்பு இளைஞர்களிலேயே தங்கியிருந்தது. வட்டுக்கோட்டைத் தீர்மானத்திலேயே இளைஞர்களின் பங்கெடுப்பு தெளிவாக விளக்கப்பட்டது. அவர்கள் முழுமூச்சாக இந்த புனிதப்பணியில் பங்குபற்றி, தமிழீழம் எனும் குறிக்கோளை அடையும் வரை ஈடுபட வேண்டும் என அதில் கூறப்பட்டது.

இன்று தமிழர் தாயகத்தில் ஏற்பட்டுள்ள இடர்நிலை குடியேற்ற அரசினால் ஏற்பட்டது. அதன் பொறுப்பு பிரித்தானியா

# உலகளாவிய வாக்கெடுப்புகளால்


வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மீதான மீள் வாக்கெடுப்பின் போது.......

மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாகும். இத்தனை வருடங்களாக இவ்விடயத்தில் ஈடுபட்ட போதிலும், இந்தத் தீர்ப்பு காரணமாக நான் பிரமிப்படைந்தேன்.

சிறிலங்கா என்பது ஒரு குடியேற்ற நாட்டின் அமைப்பு. தமிழர்கள் இந்த வாக்கெடுப்பின் மூலம் கேட்பதும், பேராதரவோடு உறுதிப்படுத்துவதும், தோல்வியுற்ற இந்தக் குடியேற்ற அரசமைப்பைக் கலைக்க வேண்டும் என்பதே யாகும். 70 கோடி தமிழர்கள் வசிக்கும் தமிழ் நாட்டில், இப்படியொரு வாக்கெடுப்பை நடத்தினால், டெல்லி அரசு மாத்திரமல்ல அத்துடன் அவர்களின் உளவுத்துறையான 'றோ' அமைப்பும் ஒளித்தோட வேண்டி வரும்.

இலங்கைத் தீவில் தமிழ் பிரதேசங்களாகிய வடக்கிலும், கிழக்கிலும் ஒரு வாக்கெடுப்பைப் பார்க்க நான் ஆசைப் படுகிறேன். ஆனால், அத்தகைய வாக்கெடுப்பை ராஜபக்ஷவின் இராணுவ சீருடையுடனோ அல்லது இல்லாமலோ பணியாற்றும் அடிவருடிகளைத் தவிர்த்தும், அல்லது வாக்காளர்கள் எப்படி வாக்களிக்கிறார்கள் என தமது எஜமானர்களுக்கு முறையிடுவதற்கு வேவு பார்க்கும் தமிழ் உதவியாளர்களைத் தவிர்த்தும் இது நடைபெற வேண்டும். அதாவது, ஒரு நம்பகமான வாக்கெடுப்பில், இலங்கைத் தீவில் இராணுவம் அப்பிரதேசங்களில் இருந்து விலக்கப்பட்டு, ராஜபக்ஷவின் பல்லக்குக் காவிகளான கருணா, பிள்ளையான் போன்றவர்களும்

அமைப்பை இல்லாது ஒழிக்கும் வரை, இலங்கைத் தீவில் அமைதியோ, அபிவிருத்தியோ வரப்போவதில்லை. அப்படிச் செய்வதன் மூலம் கிடைப்பது ஈழம் எனப்படலாம். அல்லது வேறொன்றாகலாம். ஆனால், தமிழ்ப் பிரதேசங்களில் நிர்வாக உரிமை, சிங்களவர்களின் கைகளுக்கு வெளியே கொண்டுவரப்பட வேண்டும். நோர்வே வாக்கெடுப்பு முடிவுற்று (98.95 வீத தமிழீழ ஆதரவு வாக்குகளின் பின்) சில நாள்களில் நோர்வேயில் அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் (2009 இல்) சமஷ்டி அரசியல் இலங்கைத் தீவின் பிரச்சினைக்கு ஓர் உகந்த தீர்வு எனக் கூறினார். மதிப்பிற்குரிய அமைச்சரும், இலங்கைத் தீவிலும் வெளிநாடுகளிலும் உள்ள சில நடு நிலைமை வகிக்கும் தமிழ்ப் பிரமுகர்களும் இன்னும் தமது கடந்த கால எண்ணங்களுடனே வாழ்கின்றார்கள். சமஷ்டி பற்றிய காலம் எப்பொழுதோ கடந்து விட்டது.

இலங்கைத் தீவில் சமஷ்டி ஆட்சி இயங்குவதற்கு, தமிழர்கள் கொழும்பில் நம்பிக்கை வைக்கவேண்டும். அவர்கள் சித்தசுவாதீனம் அடைந்தாலொழிய அத்தகைய நம்பிக்கை வைப்பதை எதிர்பார்க்க முடியாது. தமிழர்கள் எதனைக் கட்டியெழுப்பினாலும், அது அழிக்கப்படும் என்பதை மஹிந்த திட்டத் தெளிவாகக் காட்டியுள்ளார்.

இந்த யதார்த்தத்தை, ஹரோ-வின் கன்சர்வேட்டிக் கட்சி வேட்பாளராகிய டாக்டர் ரேச்சல் ஜாய்ஸ் எடுத்துக் கூறும்போது எனது நீண்ட கால நோக்கில் இலங்கைத் தீவின் அமைதிக்கு

2. தமிழர்கள் எல்லாவற்றையும் கைவிட்டுச் சிங்களவர்களாக மாறுவது.

3. சிங்கள எஜமானர்கள் கொடுப்பதைக் கைநீட்டி இரந்து பெறுவது.

4. சிங்கள ஆட்சியாளர்களின் உதார குணத்தை நம்பி சமஷ்டி ஆட்சி கிடைக்குமென எதிர்பார்ப்பது.

சமஷ்டித் தீர்வு, அரசியல் அறியாமை உடையவர்களுக்கே ஏற்றதாகும். (இல்லையென வாக்களித்தவர்கள், நடுநிலைமை எனக்கூறும் பிரமுகர்கள், இலங்கை தீவில் அரசியல் சரித்திரப் பதிவுகளை அறியாத பரிதாபத்திற்குரிய எரிக் சொல்ஹெய்ம் போன்ற வெளிநாட்டவர்கள்) கனடாவில் இவ்வாக்கெடுப்பிற்கு எதிராக ஒரு பரப்புரை மேற்கொள்ளப்பட்டதற்குக் காரணம், இத்தகைய ஆம் எனும் செய்தி இலங்கைத் தீவின் அரசை எட்டினால், வாக்காளர்கள் இலங்கைத் தீவிற்கு காலடி எடுத்து வைப்பதைப் பாதிக்கும் என்பதாகும்.

பல வருடங்கள் என்னுடன் வேலை செய்த கனடா தமிழர் பேரவை நிலைப்பாட்டில் நான் கவனம் செலுத்தினேன். கனடாவில் வாக்கெடுப்பு நடைபெற்ற அதே சமயம், வியன்னாவில், இலங்கை தீவின் சில தமிழறிஞர்கள் (நான் சந்தித்த சிலரும்) உள்ளக சுயநிர்ணயம், திம்புக் கொள்கை பற்றி ஆலோசித்தனர். இத்தகைய அழிகரைகளினால் திசை திருப்பப்படாமலும், தளர்ச்சி அடையாமலும், பயமடையாமலும் தமது வாக்கெடுப்பை அமைதியாக கொண்டு செல்லும்படி அதை ஏற்படுத்தியவர்களுக்கு நான் கூறினேன்.

வையே சாரும்: பிரித்தானியாவின் குடியேற்ற அரசையும், இலங்கைத் தீவில் இருந்த குழப்ப நிலையைத் தீர்க்க முற்பட்டு மேலும் ஆழமான குழப்பங்களை உண்டாக்கிய கோல்ப்ரூக், கேமரூன், டொனமூர், சோல்பரி ஆகியோரையும் அவர்களோடு கூடிய ஆளுநர்களையும் இந்த நிலையை ஏற்படுத்திய குற்றச்சாட்டுகள் சேரும்.

சிங்களவர்களின் தற்போதைய நாடகத்திற்கு இவர்களே வழியமைத்துக் கொடுத்தார்கள். பிரித்தானியா இதற்கு முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கோருவது இதற்கு ஒரு முதற்படியாகலாம்.

1833இல் கோல்புரூக்-கேமரூன் கொண்டு வந்த சீர்திருத்தங்கள் பிரித்தானியரால் தமது நிர்வாக வசதிக்காக கொண்டுவரப்பட்டு, சுற்றுப்புறங்களின் வளர்ச்சியில் பாராதூரமான அலட்சியங்களையும் அதனால் நாட்டுக்கு எல்லாவற்றிற்கும் மேலான தீங்கையும் விளைவித்தன. ஹியூஜ் கிளைகோன் என்பவர் தனது கிளைகோன் குறிப்பு எனும் நூலில் 1799இலேயே சிங்களவர்களும் தமிழர்களும் வேறாக குடியமர்ந்திருந்தனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

முற்காலந்தொட்டு, இலங்கைத் தீவை (16 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு வருமா?


வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மீதான மீள் வாக்கெடுப்பின் போது.......

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# சேதன இரசாயனவியல்

## 2010 மாணவர்கள் இதுவரை முடிவடைந்த

பாடத்திட்டங்களை அலகு ரீதியாக ஆழமாக மீட்டல் செய்வதற்கான ஒரு விசேட தொகுப்பு

## அமைப்புக் கட்டுரை வினாக்கள்

01. a) 1) C, N, H என்ற மூலங்களைக் கொண்ட சேர்வை திணிவுப்படி முறையே 54.55%, 31.82%, 13.63% கொண்டது. இச்சேர்வையின் மூலக்கூற்றுச் சூத்திரத்தைக் கணிக்குக.

........................................

........................................

2) மேலே தரப்பட்டுள்ள சேர்வை A ஆனது சமச்சீரற்ற காபனைக் கொண்டிருக்கவில்லை. அது $NaNO_2$ / HCl உடன் $C_2H_5O$ இனை அனுபவ சூத்திரமாக உடைய சேர்வை B இனைக் கொடுத்தது. B இன் மூலக்கூற்றுச் சூத்திரத்தையும், A,B இற்குப் பொருத்தமான கட்டமைப்புச் சூத்திரங்களையும் தருக.

........................................


........................................

3) ஆரம்ப C,N,H சேர்வை $NaNO_2$ / HCl உடன் ஒரேயொரு ஒட்சிசன் அணுவை மூலக்கூறு ஒன்றில் கொண்டிருக்குமாயின், உருவாகிய கட்டமைப்புக்குப் பொருத்தமான சூத்திரங்களைத் தருக.

........................................

........................................

b) பின்வரும் படிமுறைகளைக் கவனிக்குக.




A,B,C,D இற்குப் பொருத்தமான கட்டமைப்புக்களைச் சூத்திர வடிவில் தெளிவுபடுத்துக.

........................................

........................................

........................................

c) பின்வரும் படிமுறைகளைக் கவனிக்குக. A கொதிநிலை கூடிய சமபகுதியம் ஆகும்.

$$\underset{A}{\overset{Imol}{C_7H_6O_3}} \xrightarrow{ImolNaOH(aq)} \underset{B}{C_7H_5O_3Na} \xrightarrow{NaOH_{(aq)}} \underset{O}{C_7H_4O_3Na_2}$$

A,B,C இன் கட்டமைப்புக்களைச் சூத்திரவடிவில் தெளிவுபடுத்துக.

........................................

........................................

02. a) 1) C இன் தரைநிலை இலத்திரன் நிலையமைப்பை எழுதுக.


........................................

........................................

2) C இன் அருட்டப்பட்ட இலத்திரன் நிலையமைப்பை எழுதுக.

........................................

........................................

3) 


பொருத்தமான முறையில் ஓபிற்றல்களை பெட்டிகளைக் குறித்து சக்தி நிலைக்கு ஏற்ப இட்டு இலத்திரன் நிலையமைப்பைக் குறித்துக்காட்டுக.

b) பின்வரும் சேர்வைகளைப் பயன்படுத்தி பின்வரும் சேர்வைகளின் கட்டமைப்புச் சூத்திரங்களைத் தருக. ஐதான $H_2SO_4$, $H_2O$, $K_2Cr_2O_{7(aq)}$, $NaOH_{(aq)}$, $CH_3CH_2$, MgBr, $CH_3COCH_3$, $CH_3CH_3CH_2CHO$.

........................................

........................................

03. a) சரியாயின் '√' அடையாளத்தையும், பிழையாயின் '⨯' அடையாளத்தையும் இடுக.

1) $CH_3MgBr$ ஐ பென்சீனில் சேகரித்தல் சிறப்பானதாகும். (        )

## SPECIAL GUIDE FOR 2010 A/L MATHS, SCIENCE STUDENTS

2) ⟨O⟩—$NH_2$ உடன் ⟨O⟩—$N_2Cl$ இலத்திரன்நாட்டப் பிரதியீட்டுத் தாக்கத்தை ஏற்படுத்தும். (        )

3) ⟨O⟩—$NH_2$ உடன் $CH_3COCl$ கருநாட்டப் பிரதியீட்டுத் தாக்கத்தை ஏற்படுத்தும். (        )

4) கீற்றோன்களில் அல்டிகைட்டு சமபகுதியங்கள் மாத்திரம் காணப்படும். (        )

5) $C_nH_{4n}O$ என்ற சூத்திரம் உடைய சேர்வை அற்ககோலுக்குரிய சூத்திரமாக அமையலாம். (n-முழு எண்) (        )

6) அற்கைன்கள் $Hg^{2+}$/ஐதான $H_2SO_4$ சேர்த்து மென்சூடாக்கப்பட அல்டிகைட்டுக்களை/கீற்றோன்களை விளைவுகளாகத் தரக்கூடியன. (        )

7) $CH_3CH_2Br$ இற்கு அற்ககோல்சேர் () சேர்த்துச் சூடாக்க HBr அற்ககோல் ஊடகத்தில் சேகரிக்கப்படும். (        )

8) $H^+/MnO_4^-$ ஆனது () ஒட்சியேற்ற மாட்டாது. (        )

9) $CH_3COCl$ இற்கு $LiAlH_4$ சேர்த்துப் பின் $H_2O$ சேர்ப்பதன் மூலம் முதல் அற்ககோல்களை மாத்திரம் உருவாக்கலாம். (        )

10) நைத்திரோ பீனோல்கள் யாவும் நடுநிலை $FeCl_3$ உடன் ஊதாநிறத்தைக் கொடுக்கும். (        )


b) பின்வரும் மாற்றீட்டினை கீழே தரப்பட்டுள்ள சேர்வைகளையும், தனித்தனி நிபந்தனைகளையும் பயன்படுத்தி A,B,C,D போன்றவற்றிற்குப் பொருத்தமான சேர்வைகள் அல்லது நிபந்தனைகளைத் தருக.

| | | | | |
|---|---|---|---|---|
| $CH_3$ | MgBr | $CH_3COOH$ | ⟨O⟩$CH_2OH$ | ⟨O⟩ $Br_2PCl_5$ |
| $AlCl_3$ | $KMnO_4$ | NaOH | $H_2SO_4$ | $CCl_4$ |

$$A \xrightarrow{P} B \xrightarrow{Q} C \xrightarrow{R} D \xrightarrow{S} E \xrightarrow{T} F \xrightarrow{H_2SO_4}$$

........................................

........................................

04. a) 


என்ற சேர்வையை அவதானித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
u,v,w,x,y,z எழுத்துக்கள் காபன்களுக்குக் குறிப்பிடப்பட்டுள்ளது.

1) எவ் எழுத்துக்களால் குறிக்கப்பட்ட காபன்கள் $sp^2$ ஓபிற்றல் கலப்புடையவை?

........................................

........................................

2) $sp^2$ ஓபிற்றல் கலப்படைந்த காபன்கள் எத்தனை?

........................................

........................................

3) $sp^2$ ஓபிற்றல் கலப்படையாத காபன் எது?


........................................

........................................

4) ஒரு தளத்தில் காணப்படும் அணுக்களின் எண்ணிக்கை எவ்வளவு?


........................................

| கோணம் | பிணைப்புக்கோணம் (ஏறத்தாழ கிட்டிய பத்தில்) |
|---|---|
| $C_uC_vH$ | .................... |
| $C_wC_uH_y$ | .................... |
| $C_vC_wC_x$ | .................... |
| $C_yC_zCl$ | .................... |

b) 


X, A, B, Y, C இற்குப் பொருத்தமானவற்றைக் குறிப்பிடுக.

c) பின்வரும் சோடிகளை இனங்காண்க.

1) 


........................................

........................................

2) $CH_3CH_2CH_2OH$          $CH_2OHCH_2CH_2OH$

........................................

........................................

d) கீழே மாற்றீடு ஒன்று தரப்பட்டுள்ளது. A,B,C,D இன் கட்டமைப்புச் சூத்திரங்களையும், P,Q,R,S இனையும் தருக.

$$C_2H_3N \xrightarrow{P} C_2H_4OH \xrightarrow{Q} C_2H_7NO_2 \xrightarrow{R} C_2H_5NO \xrightarrow{S} C_2H_3N$$

........................................

(15ஆம் பக்கம் பார்க்கவும்)

யாழ்.ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் S.தங்கராஜாவின் வழிகாட்டலில் தொகுத்து வழங்குபவர்:
S.T ஜனார்த்தனன் (ஆசிரியர், கொழும்பு)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவோ. நக்ஸல்கள் அதிரடித் தாக்குதல்; தண்டவாளங்கள் தகர்ப்பு! ரயில் கவிழ்ப்பு!!

## பீஹார், ஒரிசா, ஜார்கண்ட், மேற்குவங்கத்தில் கைவரிசை





பாட்னா, மாரச் 24

மத்திய அரசுக்கு எதிராகக் கடும் தாக்குதல் போரை ஆரம்பித்துள்ள மாவோயிஸ்ட் நக்ஸலைட்டுகள் பல தண்டவாளங்களை வெடிகுண்டுகள் வைத்துத் தகர்த்துள்ளனர். இந்த சதியில் இருந்து பல ரயில்கள் தப்பின. ரயில்கள் கவிழ்ப்புச் சதி பெரும் உயிர்ச் சேதம் இல்லாமல் முடிந்தது.

இத்தாக்குதலில் ஒரிஸாவில் சரக்கு ரயில் ஒன்று தடம் புரண்டது. பீஹாரில் ரயில் ஒன்றின் எஞ்சின் உட்பட 7 பெட்டிகள் தடம் புரண்டன.

பீஹார், ஜார்கண்ட், மேற்குவங்கம், ஒரிஸா, சட்டீஸ்கர், ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களில் மாவோயிஸ்ட் நக்ஸல்களின் தாக்குதல் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது.

நக்ஸல்களை ஒடுக்கவும், முழுமையாக ஒழிக்கவும் மத்திய அரசு 'ஒப்ரேஷன் கிரீன் ஹன்ட்' எனத் திட்டம் வகுக்கப்பட்டு வேட்டை நடத்தி வருகிறது. இந்த வேட்டைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல அதிரடித் தாக்குதலை நக்ஸல்கள் ஆரம்பித்துள்ளனர். இதனால் மத்திய அரசு கடும் சவால்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. மத்திய அரசுக்கு தனது கோபத்தைக் காட்டும் விதமாக நக்ஸல்கள் மேற்கூறிய 5 மாநிலங்களில் நேற்று முன்தினம் முதல் 48 மணி நேர முழு அடைப்பு நடத்துகின்றனர்.

இந்த முழு அடைப்பையொட்டி பல இடங்களில் ரயில்வே தண்டவாளங்களை நக்ஸல்கள் தகர்த்துள்ளனர். பீஹார் மாநிலம் கயா அருகே டில்லி - ... லும் ராஜ்தானி எக்ஸ்பிரஸ் ரயிலை ...க்க சதி நடந்துள்ளது. இந்த ரயில் ...ன்று கொண்டிருந்தபோது தண்டவாளம் வெடி வைத்துத் தகர்க்கப்பட்டது. இதில் எஞ்சின் உட்பட 7 பெட்டிகள் தடம் புரண்டன.

கயாவில் இருந்து காஸ்டா- பரையா இடையில் கயாவில் இருந்து 15 கிலோ மீற்றர் தூரத்தில் இந்த இடம் உள்ளது. சம்பவ இடத்திற்கு மீட்புப் படையினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். உயிர்ச்சேதம் ஏதும் இல்லை பலர் காயமுற்றுள்ளனர் என முதல் கட்டத் தகவல் தெரிவிக்கிறது.

ரயில் செல்லும்போது பலத்த சப்தம் கேட்டது எனவும், தொடர்ந்து ரயில் பெட்டிகள் கவிழ்ந்தன எனவும் உயிர் தப்பிய பயணி ஒருவர் கூறினார்.

இதுபோல மேற்குவங்கம், ஒரிஸா, ஜார்கண்ட் உள்ளிட்ட மாநிலங்களிலும் ரயில் தண்டவாளம் தகர்க்கப்பட்டது. ஒரிசாவில் ஒரு சரக்கு ரயில் தடம் புரண்டது. நக்ஸல்களின் தாக்குதலால் 4 மாநிலங்களிலும் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. நக்ஸல்கள், எதிர்ப்பாளர்கள் சிலரது வீட்டைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

# ஓடும் குதிரையிலிருந்து கீழே விழுந்த நடிகர் சரத்குமாருக்கு எலும்பு முறிவு

## படப்பிடிப்பு ஒரு மாதம் ரத்து

சென்னை, மார்ச் 24

சினிமாப் படப்பிடிப்பின்போது, நடிகர் சரத்குமார் ஓடும் குதிரையில் இருந்து கீழே விழுந்தார். இந்த விபத்தில், அவருடைய இடுப்பு எலும்பில் முறிவு ஏற்பட்டது. இதையொட்டி அவர் சம்பந்தப்பட்ட சினிமாப் படப்பிடிப்பு ஒரு மாதகாலம் ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சித் தலைவரும், நடிகருமான சரத்குமார் 'சாரதி' என்ற கன்னடமொழி படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படத்தில், அவருக்கு ஜோடியாக சினேகா நடிக்கிறார். கே.எஸ்.செல்வராஜ் இயக்கம் செய்து வருகிறார்.

இந்தப் படத்தின் தொடக்கவிழா மதுரையில் நடந்தது. அதை அடுத்து கல்லிடைக் குறிச்சியில் சில காட்சிகள் படமாக்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் 'சாரதி' படத்தின் படப்பிடிப்பு புதுச்சேரியில் நடந்தது. சரத்குமார் குதிரையில் வேகமாக செல்வதுபோல் ஒரு காட்சி படமாக்கப்பட்டது.

அப்போது, எதிர்பாராதவிதமாக அவர் குதிரையில் இருந்து கீழே விழுந்தார். அதில் அவருக்கு பலத்த அடிபட்டது. அவருடைய இடுப்பு எலும்பில் முறிவு ஏற்பட்டது. வலி தாங்கமுடியாமல் சரத்குமார் கதறினார்.

உடனடியாக அவரை படப்பிடிப்புக் குழுவினர் கனகசெட்டிகுளத்தில் உள்ள பிம்ஸ் வைத்தியசாலையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு எக்ஸ்ரே மற்றும் சி.டி. ஸ்கான் எடுத்து பார்க்கப்பட்டது.அப்போது அவருக்கு கழுத்து மற்றும் முதுகுதண்டு பகுதியில் பலத்த அடி ஏற்பட்டிருந்தமை தெரியவந்தது. அதற்கான சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. கட்டும் போடப்பட்டது. பின்னர் சரத்குமார் ஒரு அம்புலன்ஸ் மூலம் சென்னையில் உள்ள அவருடைய வீட்டுக்கு அழைத்து வரப்பட்டார்.இந்த விபத்தையொட்டி, 'சாரதி' படத்தின் பட்ப்பிடிப்பு ஒரு மாதம் ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

# வாழும் பெண் தெய்வம் மாயாவதி: இனி எடைக்கு எடை தங்கம் தயார்!

## பகுஜன் சமாஜ் மூத்த தலைவர் தெரிவிப்பு



உத்தரப்பிரதேச முதல்வர் மாயாவதி, வாழும் பெண் தெய்வம். அவருக்கு பண மாலை போடுவதில் எந்தத் தவறும் இல்லை - என்று பகுஜன் சமாஜ் கட்சி மூத்த தலைவர் சுவாமி பிரசாத் மயூரா கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு -

கணக்கில் காட்டப்படாத கோடிக்கணக்கான ரூபாக்களை, பலர் கோவில்களுக்கு காணிக்கையாகச் செலுத்துகின்றனர். இது குறித்து, யாரும் கேள்வி எழுப்புவது இல்லை. ஆனால், மாயாவதிக்கு பண மாலை அணிவித்தமை குறித்து மேட்டுக்குடி அரசியல்வாதிகள் சந்தேகம் எழுப்புகின்றனர். இந்தப் பணம் எங்கிருந்து வந்தது என கணக்குக் கேட்கின்றனர். கட்சித் தொண்டர்கள் நிதி வசூலித்து மாலை தயார் செய்து அதை மாயாவதிக்கு அணிவிக்கின்றனர்.

மாயாவதி, ஒரு வாழும் பெண் தெய்வம். அவருக்கு மாலை அணிவிப்பதில் எந்தத் தவறும் இல்லை. எதிர்காலத்திலும், அவருக்கு தொடர்ந்து பண மாலை அணிவிப்போம். எடைக்கு எடை, தங்கம், வெள்ளி ஆகியவற்றை அளிப்போம்.

ஊடகங்களும், எதிர்க்கட்சியினரும் இதைப் பெரிதுபடுத்துகின்றனர். மாயாவதிக்கு பண மாலை அணிவிக்கப்படுவதை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை - என்றார்.


யாழ் மாவட்டம். ஐக்கிய தேசியக் கட்சி - UNP

நேர்மையற்ற அரசியல்வாதிகளுக்கு வாக்களித்துவிட்டு
தென்னிலங்கை தமிழ் அரசியல்வாதிகளை
நாடிச் செல்வதில் என்ன பயன்?
ஆழமாய்ச் சிந்தித்து வாக்களியுங்கள்.






X

வெற்றி இலக்கம்

1

மக்கள் துயர் துடைக்க
மீண்டும் ஒரு மகேஸ்வரன்
தியாகராஜா துவாரகேஸ்வரன்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




படத்தில் தோன்றுபவர்களின் அடையாளம் காப்பதற்காக முகம் மறைக்கப்பட்டுள்ளது.

# பொறுத்தது போதும் இத்துன்பம்!
# மாற்றுவோம் ஆட்சியை!

இலவச சுகாதார சேவையை நாட்டிற்கு அளித்த கட்சியுடன்
ஆரோக்கியமான இலங்கையொன்றை மீண்டும் உருவாக்குவோம்.

# ஐக்கிய தேசிய முன்னணி

CONCEPT STUDIO 2423

* 2008-2009 காலப்பகுதிக்கான கணிப்பீடு - நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதோ வந்து விட்டது மரபணு மாற்றப்பட்ட நுளம்பு

மலேரியாவைத் தடுக்க, மரபணு மாற்றப்பட்ட நுளம்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நுளம்பு நோயைப் பரப்புவதற்குப் பதிலாக, மலேரியா வராமல் தடுக்கும் எதிர்ப்புச் சக்தியைப் பரப்புகிறது என, விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். ஜப்பானைச் சேர்ந்த ஜி.சி. மருத்துவப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஷிகெடோ யோஷிடா கூறியதாவது: இந்த ஆய்வு, மனிதர்களிடம் மலேரியாவை பரப்பும் 'அனோபிலஸ்' வகை நுளம்பை மையமாக வைத்து மேற்கொள்ளப்பட்டது.



நுளம்புகள் மனிதர்களிடம் இருந்து இரத்தத்தை உறிஞ்சும்போது நோய்க் கிருமிகளைப் பரப்புகிறது. இதனால், மலேரியா போன்ற நோய்கள் ஏற்பட்டு, ஆண்டுக்கு 10 லட்சம் முதல் 20 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர். இதில் பெரும்பாலும் ஆபிரிக்காவைச் சேர்ந்த குழந்தைகளே உயிரிழக்கின்றனர். நுளம்புகளைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினமானதாக உள்ளது. எனவே, மரபணு மாற்றப்பட்ட நுளம்புகள் மூலம் மனிதர்களுக்குத் தடுப்பு மருந்தைப் பரப்புவது குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இதன் மூலம் நுளம்பு கடித்ததும், பாரம்பரிய தடுப்பு மருந்துகள் போன்று பாதுகாப்பான நோய் எதிர்ப்பு திறன் தூண்டப்படுகிறது. இவ்வாறான நுளம்புகள் தொடர்ந்து கடிக்கும் போது, வாழ் நாள் முழுவதும் நோய் எதிர்ப்புத்திறன் இயற்கையாகவே அதிகரிக்கிறது. இதனால் இந்தப் பூச்சி இனம் தீங்கு விளைவிப்பதில் இருந்து, ஆதாயம் தருவதாக மாறுகிறது. இந்த ஆய்வு மலேரியாவைக் கட்டுப்படுத்தும் புதிய தொழில்நுட்பம் குறித்த நம்பிக்கையை அதிகரித்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார். ★


# விரைவில் வருகின்றது 3டி தொலைக்காட்சி!



சினிமா தியேட்டர்களில் மட்டுமே பார்த்து வந்த 3டி தொழில் நுட்பத்தைத் தொலைக்காட்சியிலும் இனிப் பார்த்துக் கொள்ளலாம். இந்த முயற்சியில்தான் தற்போது சாம்சங் மற்றும் சோனிக் நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. இந்நிறுவனங்கள் தயாரித்துள்ள 3டி தொலைக் காட்சிகளை விரைவில் சந்தையில் விட உள்ளன. இதன் விலை 3000 டொலர் வரை இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. பனசோனிக் நிறுவனம் வெளியிட உள்ள 3டி தொலைக்காட்சியில் 3டி கண்ணாடிகள் தரப்பட்டுள்ளன. இது தியேட்டர்களில் தரப்படுவதைப் போல பயன்படுத்தியதும் தூக்கியெறியும் ரகமல்ல. இவை அளவில் பெரிதாகவும் ரீசார்ஜ் செய்யக்கூடிய மின்சாரக் கண்ணாடிகளாகவும் இருக்குமாம்.

ஹொலிவுட்டில் ஷ்ரெக், அவதார், அலைஸ் இன் வொண்டர்லேண்ட் எனப் பெரும்பாலும் 3டி படங்கள் வரத்தொடங்கிவிட்டதால் அவற்றுக்குத் தொலைக்காட்சி உலகிலும் பெரிய மார்க்கெட்டை ஏற்படுத்த வேண்டிய அவசியம் காரணமாக இந்த 3டி தொலைக்காட்சிகள் தயாரிக்கப்பட்டுள்ளதாக சாம்சங் நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். எப்படியும் இந்த ஆண்டு 40 லட்சம் 3டி தொலைக்காட்சிகள் விற்கப்பட்டுவிடும் என்று அவர் தெரிவித்துள்ளார். ★

TOSHIBA
Leading Innovation >>>
e-STUDIO




அனைத்து அலுவலக வேலைகளையும் செய்யும் உலகின் தலைசிறந்த பிரதியெடுக்கும் இயந்திரம்

டொஷிபா e-Studio என்பது உலகின் அதி முன்னேற்றகரமான, சூழலுக்குத் தீங்கிழைக்காத நிழற்படப் பிரதியெடுக்கும் இயந்திரமாகும். சிறிய வியாபார நிலையங்கள் முதல் மாபெரும் நிறுவனங்கள் வரை எந்தவொரு தொழில் முயற்சியையும் இலாபகரமாக நடத்துவதற்கு அருந்துணையாகும் e-Studio பிரதியெடுக்கும் இயந்திரமொன்றை வாங்கினால், ஜோண் கீல்ஸ் ஒபிஸ் ஓட்டொமேஷனின் நாடளாவிய பராமரிப்புச் சேவை, கவர்ச்சியான விசேட சலுகைகள் என்பவற்றையும் நீங்கள் பெறுவீர்கள்.

- மிகக் குறைந்த விலை
- இலவச சேவைகள்/பயிற்சி
- இலவச விநியோகம்
- ஏனைய கொள்வனவுகளுக்கு விலைக்கழிவு
- நாடெங்குமுள்ள வர்த்தக முகவர்களிடம் வாங்கலாம்



விசேட சலுகை ரூ.104,000/- + வ  இச் சலுகை மார்ச் 31 வரை மட்டுமே

- நிமிடத்திற்கு 16 பிரதிகள்/அச்சுப் பிரதிகள்
- 100 தாள்கள் பைபாஸ் ட்ரே
- 250 தாள்கள் கசெட்
- A3 வரையான அளவு தாள்களைப் பயன்படுத்தலாம்
- நியம Windows GDI அச்சிடல் தொழில்நுட்பம்
- TWAIN ஸ்கேன் வசதி

The 7th Frontier

JKOA
அதிகாரம்பெற்ற விநியோகஸ்தர்
ஜோன் கீல்ஸ் ஒபிஸ் ஓட்டொமேஷன் (பிறைவேட்) லிமிட்டட்
320/1, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொ.பே: 2313000 தொ.ந: 2431745
இணையத்தளம்: www.jkoa.com

மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்
0773182838 (மில்ரோய்),
0777725241 (அசோக்)

அம்பாறை: பதூர்கொம் அண்ட் ஸ்டேஷனரி-தொ: 077-9350738, பிரியங்க எண்டர்பிறைசஸ்- தொ: 063-2222567 வங்கீச: 0777 809915. அநுராதபுரம்: வனோஜ் ஒபிஸ் ஓட்டொமேஷன்- 025-4580054 மில்ரோய்: 0773-182838. பதுளை: இம்தியாஸ் பக்கீர்தீன்- தொ: 055-2222497 வங்கீச: 0777-809915. மட்டக்களப்பு: ஜிலியன்ஸ் டெக்னோ-மெக்ஸ்- 065-2226864, தைபாஹ் மார்கெடிங் பிறைவட் லிமிடெட்: 077-667900 வங்கீச: 0777-809915. எம்பிலிப்பிட்டி: யூனியன் ஒபிஸ் ஓட்டொமேஷன்- தொ: 047-4924699 தினேஷ்: 0773-539568. கம்பஹா: மைக்ரோடெக் ஒபிஸ் ஓட்டொமேஷன்- தொ: 0777-713757 சஞ்ஜீவ: 0775-402222. காலி: லங்கா டெக்னோலொஜி அப்ளையன்சஸ்- 0915-672492, டெக்னோ இன்டர்நஷனல் கம்பனி- தொ: 091-5690005 சம்பத்: 0773-070033 ஹம்பாந்தோட்டை: கே.ஈ. ஒபிஸ் ஓட்டொமேஷன் (பிறை) லிமிட்- தொ: 047-4922622 ருவன்: 0777-771068. ஹட்டன்: வீ.கே.அர். ரெலிகொம்- தொ: 051-2222967 வங்கீச: 0777-809915. ஜா-எல: பீலைன் ஒபிஸ் ஓட்டொமேஷன்- தொ: 0718-441919, 4325887 பிரதீப்: 0773-583287. யாழ்ப்பாணம்: நோர்த் லிங்க் எஞ்ஜினியரிங்- தொ:021-2224099, எஸ்.ரி.பி. கொம்பியூட்டர் வேர்ல்ட்- 021-2222674 அசோக்: 0777-725241. கண்டி: த ஒபிஸ் ஷொப்- தொ: 081-2202830, எல்.எச்.சந்திரசேகர அண்ட் சன்ஸ்- 081-2234270 மதுரா: 0773-884987 கிரிபத்கொடை: அம்ஸ்டர் ஒபிஸ் ஓட்டொமேஷன்- தொ: 011-4813222 பிரதீப்: 0773-583287. குருநாகல்: கே.ரி. ஒபிஸ் ஓட்டொமேஷன்- தொ: 037-5260019, குளோபல் ஒபிஸ் சொலூஷன்ஸ்- தொ: 037-2234310 உதேனி: 0777-274009. மஹரகம: ஜஸ்ட் டெக்னோலொஜிஸ்- தொ: 4542355 ஹசன்க: 0772-990357. மொனராகல: சுப்பர்டெக் ஒபிஸ் ஓட்டொமேஷன்- தொ: 072-4085846 வங்கீச: 0777-809915. மொறட்டுவை: ரி.எஸ்.பி. மனேஜ்மன்ற் சேர்விசஸ்- தொ: 011-2644741 சுதர்சன: 0773-120714. மாத்தறை: கே.ஈ. ஒபிஸ் ஓட்டொமேஷன்- தொ: 041-4390288 ருவன்: 0777-771068. நீர்கொழும்பு: அம்ஸ்டர் ஒபிஸ் ஓட்டொமேஷன்- தொ: 031-4873732 சஞ்ஜீவ: 0775-402222. நுவரெலியா: [illegible] பொலன்னறுவை: [illegible] அப்ளையன்சஸ்- தொ: 038-2240715 சுதர்சன: 0773-120714. பிற்றகோட்டே: டயமன்ட் லங்கா [illegible] ஒபிஸ் ஓட்டொமேஷன்- தொ: 027-5673263 மில்ரோய்: 0773-182838. இரத்தினபுரி: லங்கா டெக்னோலொஜி அப்ளையன்சஸ்- தொ: 045-5622251 [illegible]- தொ: 045-2223221 தினேஷ்: 0773-539568. சீதுவ: சி.எம்.என். எண்டர்பிறைசஸ் இன்பொர்மேஷன் [illegible]- தொ: 011-2251073 பிரதீப்: 0773-583287. திருகோணமலை: ட்ரிங்கோ ஸ்டேஷனர்ஸ்- தொ: 026-2223071, ட்ரின்டெக் கொம்பியூட்டர்ஸ்- தொ: 026-2222552 மில்ரோய்: 0773-182838. வவுனியா: நோர்த் லிங்க் எஞ்ஜினியரிங்- தொ: 024-2224537, கஜன் சென்டர்- தொ: 024-2222476 மில்ரோய்: 0773-182838 பத்தரமுல்லை: சியரஸ் டெக்னோலொஜி- தொ: 011-2693232 ப்ரியன் - 077-3081488

# இவர் படும் கஷ்டம் ஏனோ?

சீரோங்கு சிறீலங்கா நாட்டில் வாழும்
சீர்பூத்த சிங்களப் பெரும்குடியார்
ஊரோடும் உறவோடும் இங்கு வந்து
உபத்திரப் படுவதனைப் பார்த்த போது
பேரோங்கு இம்மக்கள் பெரும் "பஸ்" ஏறி
பெருமளவில் அணிதிரண்டு இங்கு வந்து
தேரோடும் திருவீதி நல்லை தன்னில்
திரண்டிருந்து படும் அவதி கண்டபோது
தீராதோ இவர்படும் துயரென்று சிந்தித்து
தீட்டியதே இக்கவிதை படித்துப்பாரும்

புனிதமுனி புத்தபிரான் அன்று வந்து
புகழ்பூத்த நயினையிலே கால் பதித்த
இனியதிரு இணையிலா,நிகழ்வுதன்னை
இன்பமுற மனமதனில் நினைவுகூர
அணி அணியாய் பக்தர்குழாம் அலைபோல் வந்து
அலைகடலை படகதனால் கடந்து சென்று
வினைகளைத் தீர்க்கவென்றே விழுந்தெழுந்து
விம்மி மனம் கலங்குவதைக் கண்டீரன்றோ
கனைகடலின் அருகினிலே தவம் கிடந்து
கால்கடுக்க காத்திருப்பர் படகை நோக்கி

வந்தடைந்த "ஏ-9" வீதியினை எண்ணி எண்ணி
வருந்திமனம் துவழுகிறார் இவ்வடியார் எல்லாம்
அந்தமிலா பெரும் கிடங்கில் வீழ்ந்தெழுந்து
அடிவயிறே புண்ணாகிப்போச்சு தென்பர்
நொந்து விட்ட வயிறதனில் நோக்காடு போக்க
நொடிந்தவர்க்கோ மலசலகூடமில்லை
வெந்துமனம் விரக்தியினால் விம்மி அழ
வீடுவீடாய் படுக்கைதனை தேடியன்றோ
எந்த ஒரு வீடதுவும் கிடையாது போக
இரவதனைக் கழிக்கின்றார் துரையப்பா அரங்கில்

தங்குதற்கோ தரமான கூரையில்லை
தரித்து நிற்க வெளிவளவு தானுமில்லை
பங்கமிலாது மலசலம் கழிக்கக் கூட
பல மைல் சென்றாலும் இடமேதுமில்லை
எங்குதான் அலைந்தாலும் குளிப்பதற்கோ
ஏரிகுளம் கிணறேதும் கிடைப்பதுமரிது
இங்கெல்லாம் அலைந்த பின் இந்த மக்கள்
தமதில்லம் சென்றா அவற்றைச் செய்வர்
தாங்கொணா இத்துயரைத் தெரிந்த போதும்
தாமாகப் படையெடுத்து வருகின்றாரே!

புகழ் பூத்த நல்லைக்கு ஓடி வந்தால்
பூட்டியே கிடக்கிறது திருக்கதவு
திகழ் நயினை விட்டிங்கு வந்தவர்கள்
திடுக்குற்றார் திருக்கதவு பூட்டக்கண்டு
அகமகிழாது நல்லைக் கந்தனாரும்
அடைப்பட்டுக் கிடப்பதனைக் கண்டுகொண்டு
சுகபோகம் தமிழருக்கு வந்திட்டாலும்
சுந்தரனுக்கு விடிவு எப்போ என்றார் பக்தர்
இதமாக வள்ளி தெய்வானையோடு
இன்னமும் துயிலுதியோ? என்று கேட்டார்

சிறைக்கதவே மணியடிக்க திறந்து மூடும்
சிங்கள நாட்டினிலே என்றார் பக்தர்
முறையாமே திருக்கதவைப் பூட்டிவைத்தல்
முழு உலகில் காணாத புதுமை என்றார்
கறைபடியா தென் இந்திய நாட்டிலெல்லாம்
திருக்கதவுகள் திறந்தே கிடக்குதென்று
முறையாகப் பல தலங்கள் பார்த்த மக்கள்
முணுமுணுத்து மனம் விரக்தியுற்று நின்றார்'
சிறைப்பிடித்து முருகனைக் கொண்டு
போவோமென்றோ
சீலிட்டு தாளிட்டு பூட்டுகின்றீர்
அறையந்த ஆதிமூலத்தைப் பூட்டிவிட்டு
அடியவரை உட்செல்ல அனுமதித்தலாலென்ன?

- விகடகவி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**சுவீடன் (Swiss oriflame PVT) நாட்டு Natural Course Marketing கம்பனிக்கு விநியோகஸ்தர் தேவை**

ஆர்வமுள்ளவர்களும், வேலைபார்த்துக்கொண்டு Part time ஆகவும் வீட்டில் இருப்பவர்களும், படித்து முடித்தவர்களும் சேர்ந்து கொள்ளலாம். முன்கூட்டியே தொடர்பு கொள்ளவும். T.P. 0779103405 இதற்கான விளக்கமும், பயிற்சியும் இலவசமாக 26.03.2010 வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு பருத்தித்துறை சிவன் கோயில் பர்வதவர்த்தனி கலியாணமண்டபத்தில் நடைபெறும்.

சிவன் கோயிலடி,
பருத்தித்துறை.

(சி/566022)


## சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 24

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சால் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தினூடாக கடந்த ஆண்டு நடத்தப்பட்ட தொழிற் பயிற்சியை நிறைவுசெய்த தொகுதி ஒன்று பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள அமைச்சின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளதால் பயிற்சியை நிறைவு செய்த பயிற்சியாளர்கள் அன்றைய தினம் சமுக மளித்து சான்றிதழைப் பெற்றுக்கொள்ளுமாறு வலி.வடக்குப் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (50-201)


**தமிழ் தேசியக் கூட்டமைப்பு TNA**



தமிழரசுக்கட்சியின்
"வீட்டுச் சின்னத்திற்கு"
வாக்களிப்போம்!
தனித்துவம் காப்போம்!!
மண்பற்றுள்ள கல்வியாளன்
**திரு.கந்தையா அருந்தவபாலன்**
(அதிபர் - நிபேக் கல்லூரி, சாவகச்சேரி)
அவர்களை ஆதரிப்போம்.


1 2 3 4 5 6 7 8 9 10 11 12

தென்மராட்சி. (95810) ஆதரிப்பு நண்பர்கள்



**மீரோ** MEERO SOLE AGENT
**மின்சாரத் தராசு**

அளவு பீரிவு தரம் மற்றும் சேவை - திணைக்களத்தின் அனுமதி பெற்றது




உங்களிடமுள்ள பழைய தராசுகளைத் தந்து அரச அனுமதிபெற்ற புது தராசுகளை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

★அரச அனுமதி பெற்ற மின்சாரத்தராசு
★யப்பான் தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்டது
★ ஒருவருட உத்தரவாதம். விற்பனையின் பின்னர் பழுதடையும் பட்சத்தில் திருத்திக்கொடுக்கப்படும்.

விசேட கழிவும் வழங்கப்படும்.

அனுமதிபெற்ற விநியோகஸ்தர்:
**நந்தலாலா இரும்பகம்**
29,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 6234.



**நாடாளுமன்றத் தேர்தல் - 2010**



இலங்கைத் தமிழரசுக் கட்சி
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
என்றும் உங்களுடன்
இந்த மண்ணில்...
**சீ.வீ.கே. சிவஞானம்**
[முன்னாள் யாழ்.மாநகரசபை ஆணையாளர், பட்டயச் செயலாளர்]

(சி/566021)


## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 12 ★ 10 ★ 1928 |  | 20 ★ 02 ★ 2010 |

### திருமதி திருநாவுக்கரசு பரமேஸ்வரி அம்மா

(தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்)

எமது திருநிறைத்தாயார் திருமதி திருநாவுக்கரசு பரமேஸ்வரிஅம்மா அவர்களின் மரணச் செய்திகேட்டவுடன் எங்களுடன் தொடர்புகொண்டு பலவழிகளிலும் ஆறுதல் கூறி மனத் தெம்பூட்டி, அந்தியேட்டிக்கிரியை வரை துன்பமுற்றிருந்த வேளை எமக்கு உறுதுணையாகவிருந்த சகலருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம். அத்துடன் மரணச் செய்தியையொட்டி பதாகை, மலர்வளையங்கள், பிரசுரங்கள் தயாரித்தளித்த:

விலைமதிப்பீட்டுத் திணைக்களம்-யாழ்ப்பாணம், வலி.தென்மேற்குப் பிரதேச சபை-பண்டத்தரிப்பு கிராமம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்-யாழ்.மாவட்டம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்- வலி.மேற்குப் பிரிவு, அரிமாக் கழகம்-வட்டுக் கோட்டை, பழைய மாணவர் சங்கம், பாடசாலைச் சமூகம்-யாழ்.சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, பாடசாலைச் சமூகம், யாழ்.தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம், தொல்புரம்- வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தான பரிபாலன சபை, தொல்புரம்- வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தான தொண்டர் சபை, தொல்புரம்- மடத்துப்பிள்ளையார், சுப்பிரமணிய சுவாமி கோயில் தர்மகர்த்தாக்கள்/ பரிபாலன சபை, தொல்புரம்-மடத்துப்பிள்ளையார் சுப்பிரமணிய சுவாமி கோயில் அன்னதான சபை, தொல்புரம் கிழக்கு விக்னேஸ்வரா சனசமூக நிலையம், தொல்புரம், மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாய நிதிச் சங்கம், திரு.தி.வேலுப்பிள்ளை சமாதான நீதிவான் குடும்பம், தொல்புரம் கிழக்கு வாழ் நண்பர்கள்.

இன்று (24.03.2010) புதன்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிரியைகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைத்து நல்லுள்ளங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

தொல்புரம் கிழக்கு, சுழிபுரம். (95841)


**கொவிசெத**
உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 747
சீட்டிழுப்பு திகதி 22.03.2010

எழுத்து: **R**
வெற்றி இலக்கங்கள்: **12 14 27 52**

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரு. 12,466,980.80 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரு. 2,000,000/= | - |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 20,000/= | 12 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரு. 2,000/= | 321 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 1,000/= | 625 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரு. 50/= | 14962 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரு. 40/= | 8388 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரு. 20/= | 213980 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரு. 20/= | 33810 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,546,420.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 13,812,627.20

வெற்றிப் பெறும் சீட்டுகள் 6மாதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

செப்டெம்பர் 01ம் திகதியிலிருந்து லொத்தர் சீட்டிழுப்பின் நிகழ்ச்சிகள் தேசிய தொலைக்காட்சியில் இரவு 9.35ற்கு இடம்பெறும்.


**தேசிய லொத்தர் சபை**
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: [illegible]
இணையதளம்: www.nlb.lk

FASTads


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதன இரசாயனவியல் : தொடர்ச்சி....

05. a) பின்வரும் கட்டமைப்புடைய சேர்வையின் IUPAC பெயரீட்டை எழுதுக.




..............................................................................................................

b) C-40%, H-6.7%, O-53.3% ஐ திணிவுப்படி கொண்ட சேதனச்சேர்வையில் உள்ள அணுக்களின் எண்ணிக்கையைச் சதவீத அமைப்பில் தருக. (C-12, H-1, O-16)


..............................................................................................................

..............................................................................................................


c) பின்வரும் கூற்றுக்களில் ஒவ்வொரு அமைப்பிலும் உள்ள பொருந்தாத சொல்லை/குறியீட்டை வெட்டிவிடுக.

1) CN ஆனது ஒரு (இலத்திரன் நாடி/கருநாடி) ஆகும்.
2) இத்தாக்கம் (கருநாட்ட/இலத்திரன்நாட்ட) (பிரதியீட்டு/கூட்டல்) தாக்கவகை என அழைக்கப்படுகிறது.
3) Cl உடன் இணைந்த காபன் அணு ($sp^3$ / $sp^2$ / sp) கலப்புக்கு உட்பட்டதாகும்.


d) கீழே உள்ள பெட்டிகளுக்கு ஊடாக தாக்க ஒழுங்கமைப்புக் காட்டப்படுகிறது. A,B,C,D பெட்டிகளுள் பொருத்தமான கட்டமைப்புச் சூத்திரங்களை எழுதுக. P,Q எனும் இரசாயனப் பதார்த்தங்களின் குறியீடுகளையும் அப்பெட்டிகளுள் எழுதிவிடுக.




06. a) $C_5H_{12}O$ மூலக்கூற்றுச் சூத்திரத்தை உடைய A,B,C,D எனும் அற்கோல்களில் A,B என்பவை ஒளியியற் தாக்கத்துக்கு உள்ளானவை. எனினும், A ஆனது B யின் ஒளியியற் சமபகுதியம் அல்ல. இவை இரண்டினதும் ஆவிகளை தனித்தனியாக வெப்பமேற்றப்பட்ட $Al_2O_3$ இற்கூடாகச் செலுத்திப் பின் A சேர்க்க இரண்டும் ஒரே விளைவினைத் தந்தன. A ஆனது, நீரற்ற $ZnSO_4$/செறி HCl உடன் B இலும் பார்க்க விரைவில் கலங்கற் தன்மையை ஏற்படுத்தியது. C என்ற சேர்வையில் OH கூட்டத்தை வேறு ஐதரசன் அணுக்களாகப் பிரதியிட்டபோதும், வேறு சேர்வை எதனையும் பெறமுடியவில்லை. எனின், A,B,C,D இன் கட்டமைப்புச் சூத்திரங்களை உரிய பெட்டியில் எழுதுக.




b) $C_2Cl_2$ மூலக்கூற்றில் உள்ள காபன் அணுக்களின் ஓபிற்றல் கலப்பினைக் கருத்திற்கொள்க. கூடு A இலுள்ள பெட்டிகள் ஈற்றோட்டு ஓபிற்றல்களைக் குறிக்கின்றன. கூடுகள் A,B இனை நிரப்பும்போது பின்வரும் அறிவுறுத்தல்களுக்கு அமைய நிரப்புக.





கூடு A,C அணுவின் ஓபிற்றல் கலப்புக்கு முன்பு (தரை நிலையில்)

கூடு B,C அணுவின் ஓபிற்றல் கலப்பின் பின்பு


அறிவுறுத்தல்:


* கூடு B இற்குரிய ஓபிற்றல் அமைவுக்கு ஏற்றவாறு பெட்டிகளை வரைக.
* ஓபிற்றல்களை வகைப்படுத்திக் காட்டுவதற்கு பெட்டிகளுக்குப் பெயரிடுக.
* கூடுகள் A,B இல் இலத்திரன் பரம்பலை எடுத்துக்காட்டுக.

c) $P \longrightarrow Q \xrightarrow{B} R \xrightarrow{C} S \xrightarrow{D}$




P,Q,R,S எனும் சேதனச் சேர்வைகளில் P ஆனது 60 இலும் குறைந்த சார் மூலக்கூற்றுத் திணிவு உடையது. A,B,C,D என்பவை அசேதனச் சேர்வைகளாகும். P,Q,R,S என்பவற்றின் கட்டமைப்புச் சூத்திரங்களையும் A,B,C,D இற்கான சூத்திரங்களையும் உரிய பெட்டிகளில் எழுதுக.




(நிறைவுற்றது)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை - ஓகஸ்ட், 2010.
General Certificate of Education (Advance Level) Model Examination - August, 2010.

# பௌதிகவியல்: புலங்கள்

01. 3μc, 8μc ஏற்றங்கள் 7cm தூரத்தினால் பிரிக்கப்பட்டுள்ள 3μcஇலிருந்து சூனியப்புள்ளியின் தூரம்,
1) 2.13cm 2) 4.5cm 3) 2.24cm 4) 1.56cm

02. -12μc, 18μc ஏற்றங்கள் 42cm தூரத்தினால் பிரிக்கப்பட்டுள்ளன. -12μc இலிருந்து சூனியப்புள்ளியின் தூரம்,
1) 120cm 2) 187cm 3) 130cm 4) 119cm

03. மேற்கூறிய வினாவில் 18μc இலிருந்து சூனியப்புள்ளியின் தூரம்,
1) 120cm 2) 61cm 3) 229cm 4) 215cm

04. -10μc, 30μc ஆகிய ஏற்றங்கள் 30cm தூரத்தால் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் தொழிற்படும் விசைகளுக்கிடையிலான விகிதங்கள் முறையே,
1) 1 : 1 2) 1 : 2 3) 2 : 1 4) 1 : 4

05. dcm நீளமான சமபக்க முக்கோணி ஒன்றின் மூன்று உச்சிகளிலும் ஏற்றம் q வைக்கப்பட்டுள்ளது. மையப்போலியில் 2q ஏற்றம் வைக்கப்பட்டுள்ளது எனின், 2q இல் தொழிற்படும் விசை,
1) பூச்சியம். 2) $3q/4\pi\varepsilon o d^2$ 3) $7q/4\pi\varepsilon o d^2$ 4) $9q/4\pi\varepsilon o d^2$

06. சர்வசமனான இரண்டு 2μc ஏற்றங்களை இணைக்கும் கோட்டின் நடுப்புள்ளியில் ஏற்றம் q வைக்கப்பட்டுள்ளது. தொகுதியானது சமநிலையில் இருக்குமெனின், q ஆனது,
1) -1/2μc 2) 3μc 3) -2μc 4) 4μc

07. E மின்புலச் செறிவுடைய மின்புலத்தில் ஓர் இலத்திரனானது வைக்கப்பட்டு உள்ளது. அவ் இலத்திரனானது தனது நிறைக்கு சமனான மின்விசையை உணருமாயின் E ஆனது,
1) $5.6 \times 10^{-7} Nc^{-1}$ 2) $5.6 \times 10^{-8} Nc^{-1}$
3) $5.6 \times 10^{-10} Nc^{-1}$ 4) $5.6 \times 10^{-11} Nc^{-1}$

08. கிடைத்தளமொன்றில் 2q, 8q ஏற்றங்கள் 6a தூரத்தில் வைக்கப்பட்டுள்ளன. மின்புலச்செறிவு பூச்சியமாகவுள்ள புள்ளியின் தூரம் (2q ஏற்றத்திலிருந்து)
1) 2a 2) a 3) 1.5a 4) 2.5a

09. புரோத்தன் ஒன்று காரணமாக 0.2nm தூரத்திலுள்ள புள்ளியில் மின்புலச் செறிவின் பருமன்,
1) $3.6 \times 10^{8} Nc^{-1}$ 2) $3.6 \times 10^{10} Nc^{-1}$
3) $3.6 \times 10^{12} Nc^{-1}$ 4) $3.6 \times 10^{13} Nc^{-1}$

10. 8cm நீளமான சமபக்க முக்கோணி ஒன்றின் இரு உச்சிகளில் 10μc ஏற்றங்கள் வைக்கப்பட்டுள்ளன. மூன்றாவது உச்சியில் மின்புலச் செறிவானது,
1) $2.43 \times 10^{7} Vm^{-1}$ 2) $5\sqrt{3} \times 10^{7} Nc^{-1}$
3) $5.83 \times 10^{7} Vm^{-1}$ 4) $5\sqrt{3} \times 10^{8} Nm^{-1}$

11. $3\sqrt{2}$cm நீளமுடைய சமபக்க முக்கோணி ஒன்றின் இரு உச்சிகளில் 20μcஉம் -20μcஉம் வைக்கப்பட்டுள்ளன. மூன்றாவது உச்சியின் மின்புலச் செறிவு,
1) $10^{5} Nc^{-1}$ 2) $10^{6} Nc^{-1}$ 3) $10^{7} Nc^{-1}$ 4) $10^{8} Nc^{-1}$

12. 40cm பக்க நீளமுடைய சதுரமொன்றின் உச்சிகளில் 40μc ஏற்றம் வைக்கப்பட்டு உள்ளது. சதுரத்தின் மையத்தில் மின்புலச் செறிவு,
1) பூச்சியம். 2) $10^{6} Nc^{-1}$
3) $10^{7} Nc^{-1}$ 4) $10^{14} Nc^{-1}$

13. 9cm பக்க நீளமான சமபக்க முக்கோணி ஒன்றின் உச்சிகளில்+qμc, -qμc வைக்கப்பட்டுள்ளன. மூன்றாவது உச்சியின் மின்னழுத்தம்,
1) $18 \times 10^{5} V$ 2) $18 \times 10^{3} V$
3) பூச்சியம். 4) $18 \times 10^{7} V$

14. 30V மின்னழுத்த வித்தியாசம் உடைய இரு புள்ளிகளுக்கிடையில் புரோத்தன் ஒன்றை அசைக்கும்போது, புரோத்தன் பெற்ற இயக்கசக்தி eV இல்,
1) 30eV 2) 10eV 3) 20eV 4) 40eV

15. 30μc பருமனுடைய இரு ஏற்றங்கள் 18cm தூரத்தால் பிரிக்கப்படுகின்றன. தொகுதியின் சக்தியானது,
1) 15J 2) 20J 3) 10J 4) 25J

16. முடிவிலி எண்ணிக்கையான q பருமனுடைய ஏற்றங்கள் புள்ளி Oஇலிருந்து 1, 2, 4, 8 ......... m தூரங்களில் நேர்கோடொன்றில் வைக்கப்பட்டுள்ளன. Oஇலுள்ள மின்னழுத்தம்,
1) $q/4\pi\varepsilon o$ 2) $q/3\pi\varepsilon o$ 3) $3q/4\pi\varepsilon o$ 4) $9/2\pi\varepsilon o$

17. 2m நீளமுள்ள ABCD எனும் சதுரமொன்றின் உச்சிகளில் 2μc, -8μc, 6μc, 8μc ஏற்றங்கள் வைக்கப்பட்டுள்ளன. சதுரத்தின் மையத்தில் மின்னழுத்தம்,
1) $36\ 2 \times 10^{3} V$ 2) $36\ 2 \times 10^{6} V$
3) $36\ 2 \times 10^{4} V$ 4) $36\ 2 \times 10^{5} V$

18. a பக்கநீளமுடைய சதுரமுகி ஒன்றின் உச்சிகளில் 4μc ஏற்றம் வைக்கப்பட்டு உள்ளது. ஒவ்வொரு உச்சியிலிருந்தும் 32cm தூரத்திலுள்ள சதுரமுகியின் மையத்தில் மின்னழுத்தம்,
1) $9 \times 10^{5} V$ 2) $9 \times 10^{9} V$
3) $9 \times 10^{11} V$ 4) $72 \times 10^{10} V$

19. மேற்கூறிய வினாவில் சதுரமுகியின் மையத்தில் மின்புலச் செறிவு,
1) $9 \times 10^{5} Nc^{-1}$ 2) பூச்சியம்.
3) $9 \times 10^{10} Nc^{-1}$ 4) $9 \times 10^{8} Nc^{-1}$

20. முடிவிலியிலிருந்து 10μc ஏற்றத்திலிருந்து 18cm தூரத்திலுள்ள புள்ளிக்கு இலத்திரனை கொண்டுவர செய்யப்பட்ட வேலை,
1) $8 \times 10^{-10} J$ 2) $8 \times 10^{-11} J$
3) $8 \times 10^{-12} J$ 4) $8 \times 10^{-14} J$

(வளரும்)

ஆசிரியர்: தி.சிந்தனைச்செல்வன் (B.Sc) Dip.in.Edu, Dip.in.IT
கொ/விவேகானந்தா கல்லூரி,
கொழும்பு-13. T.P:077-7550332



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளாவிய வாக்கெடுப்புக்களால்......

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களவர்கள் வலபா ஆற்றின் தெற்கு மேற்குப் பகுதிகளின் உள்நாட்டிலும் தமிழர்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும் பிரிந்திருந் தார்கள். அவர்கள் இருபாலாரும் தமது மதம், மொழி, பழக்கவழக்கங்களில் முற்றிலும் வேறுபட்டவர்கள்.

இப்படிப்பட்ட முக்கியம் வாய்ந்த குறிப்பை கிளைகோன் அனுப்பிய பின்பும் கோல்புரூக் ஆனவர் கோட்டே, யாழ்ப்பாணம், கண்டி இராச்சியங்கள் அழிக்கப்பட்டுக் கொழும்பில் மத்திய அரசு அமைக்கப்பட வேண்டும் எனத் தீர்மானித்தார். சமூக பிரதிநிதித் துவத்தையும் சர்வதேச வாக்களிப் பையும் அழிப்பது, சிறுபான்மை யினரின் அழிவுக்கு வழிவகுக்கும் என அகில இலங்கைத் தீவின் தமிழ் காங்கிரஸ் சரியாக எடுத்துக்கூறியது.

இலங்கைத் தீவு முழுவதும் ஒரு தேசம் எனத் தவறாக எண்ணியமை தான் ஆட்சியாளர்கள் விட்ட பெரிய தவறாகும். உண்மை நிலையானது யாதெனில், இலங்கைத் தீவு ஒரு நாடு. அதில் சிங்களவர், தமிழர் என இரு தேசிய இனங்களும், இந்தியத் தமிழர், இலங்கைத் தீவின் முஸ்லிம் கள், இந்திய முஸ்லிம்கள், பறங்கிகள், மலேயர் என வேறு ஐந்து சமுதாயத் தினரும் இருந்தனர்.

டொனாமூர் குழுவினருக்குச் சமஷ்டி ஆட்சியைக் கோரி கண்டிச் சிங்களவர்களால் ஒரு பலமான அறிக்கை விடப்பட்டது. எமக்கு, எமது மக்கள் சுயமாக வாழ வேண்டும். அதற்கு அமெரிக்காவைப் போல ஒரு சமஷ்டி ஆட்சி வேண்டும். அதன் மூலம் எல்லாத் தேசிய இனங்களும் மற்றவர்களின் தலையீட் டைத் தவிர்த்துத் தமது சொந்த தேசியத்தை வளர்க்கலாம் என அது கோரியது. இக்கோரிக்கை இன்றையத் தமிழர்களின் பிரச்சினைக்கும் வாக் கெடுப்பிற்கும் மிகவும் முக்கியமா னதாகிறது.

1840இல் கண்டியில் வாழ்ந்த விவசாயிகளுக்குத் தமது காணியை உறுதிபடுத்துவது முடியாத காரியமாய் இருந்தது. (இன்று இராணுவக் கட்டுப் பாட்டில், வடக்கில் இருக்கும் தமிழ ரின் நிலைபோல்!). 1948இல் சோல்பரி யின் குழுவானது இலங்கை அரச மைப்பில் சிறுபான்மையினருக்கு தீங்கு ஏற்படக்கூடிய எதனையும் காண முடியவில்லை எனக் கூறியது.

1948இன் பின் தமிழர்கள் தமது இறையாண்மையைச் சிங்கள பெரு பான்மை அரசிடம் இழந்துவிட் டார்களா?

இதற்கு மறுமொழி நிச்சயமாக, ஆம் என்பதே. இதற்குத் தனியே பிரித்தானியா மாத்திரம்தான் பொறுப்பு எனக்கூற முடியாது. இலங்கைத் தீவின் மக்களுக்கு 60 வருடகாலமிருந்தும், அவர்கள், பிரித்தானியரால் செய்யப்பட்ட அழிவை நிவர்த்திச் செய்வதற்குப் பதிலாக அதனுடன் கூடிய அழிவை உண்டாக் கியுள்ளனர். 1972 குடியரசு யாப்பின் மூலம் சோல்புரி யாப்பில் இருந்த பாதுகாப்பளிக்கும் ஷரத்துகளை அகற்றி தமது குறிக்கோள்களை அடைந்தனர்.

இதனால்

1. தமிழர்களுக்கு எதிராக அரசு தனக்கு விரும்பிய எதையும் செய்யலாம் (கல்வி, தொழில் ஆகிய எல்லா வற்றிலும் பாகு பாடு).

2. இலங்கைத் தீவை சிங்கள பௌத்த நாடாக மாற்றலாம்.

6 ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களின் அரசுரிமையை ஒழித்தது. 1983இல் ஜெயவர்த்தனாவின் குண்டர்களும், கொலைகார மந்திரிகளும், புத்த பிக்குகளும் நடத்திய இனப் படுகொலையின் பின்னும், தமிழ் பிரதேசுமென அழைக்கப்படுவதை இது தடுத்தது. இதன் மூலம் இலங் கைத் தீவிலோ, வெளிநாட்டிலோ தமிழர் களுக்கு இலங் கைத் தீவிற்குள் ஒரு தனிநாடு [illegible] [illegible] மாக ஒரு தமிழரசு இருந்ததை மறுக்கும் முயற்சியும் தற்போது மேற்கொள்ளப்படுகிறது. தமிழரசு என ஒன்று இல்லாவிடின் தமிழ் மக்கள் எப்படி இறையாண்மையைக் கோர முடியும்? என்பதே சிங்கள அரசின் தர்க்கம்.

### போரும் இன அழிப்பும் பயங்கரவாதத்தின் சுற்றுமாற்று:

கீழ்கண்ட சம்பவங்கள் நடைபெற் றன.

1. சிங்கள மக்களைக் கொண்ட இராணுவமும், தமிழ் மக்களைக் கொண்ட இராணுவமும் (விடுதலைப் புலிகள்) யுத்தத்தில் மோதின.

2. தமிழருக்கெதிரான இனக் கலவரங்கள் தொடர்ச்சியாகத் தமிழர் களை அடிபணிந்து சிங்கள பௌத்த அரசைச் சர்வமத சர்வகலாசார அரசாக ஏற்கும்படி வற்புறுத்தியது.

3. இந்து சமுத்திரத்தைக் கட்டுப் பாட்டில் கொண்டு வருவதற்கு இலங் கைத் தீவைவிட வேறு இடம் இருக்க முடியாது என சர்வதேசங்கள் காய் நகர்த்தின.

18 வீதமாகவுள்ள உள்ள தமிழர் களால் என்ன செய்ய முடியும்?

1. அவர்களை நாட்டிலிருந்து கலைக்கலாம். 13 இலட்சம் தமிழ் மக்கள் முன்னரேயே சென்றுவிட் டனர். மற்றவர்கள் தற்போது வெளி யேறிவருகின்றனர். எப்படியாயினும் சிலர் மிஞ்சியுள்ளனர்.

2. அவர்களை அகதிகளாக்கலாம். இங்கு ஏறத்தாழ 5 இலட்சம் தமிழர் க/ள் இந்நிலையிலேயே தற்போது உள்ளனர். தமிழ் நாட்டில் ஒன்றறை லட்சம் பேர் அகதிகளாக உள்ளனர்.

3. அவர்களை காணாமற் போகச் செய்யலாம். உலகத்தில் காணாமற் போக்குவதில் (ஈராக் முதலிடத் தைப் பெறுகிறது) இலங்கைத் தீவு இரண்டாமிடத்தைப் பெறுகிறது. இப்படிக் காணாமற் போகிறவர்களில் பெரும்பாலானோர் தமிழர்களாவர்.

4. அவர்களைக் கொன்றுவிட லாம். அதாவது இன அழிப்புச் செய்ய லாம். தற்போது 2லட்சத்து 50 ஆயிரம் (பெரும்பாலும் அதனிலும் கூட) தமிழர்கள் கொல்லப்பட் டுள்ளார்கள்.

### இது இனஅழிப்பு நடவடிக்கையாகும்:

ஐ.நா-வின் சட்டத்தின்படி ஒரு தேசிய, சமய, கலாசார குழுவினரை முழுதாகவோ பகுதியாகவோ அழிக் கும் எண்ணத்துடன் செய்யப்படு வது இனப்படுகொலை என மொழியப் படும். இலங்கைத் தீவுத் தமிழரைப் பொறுத்தவரையில், இலங்கைத் தீவில் வடக்கிலும், கிழக்கிலும் இருக்கும் பகுதியினர் அவர்களாகும்.

இனஅழிப்பில் பலவிதங்கள் உள்ளன. அவை கலாசார, பொருளா தார, சமய இனஅழிப்பாகின. இவற் றை அழிக்கும் நோக்கோடு செய்யும் செயல்கள் இனஅழிப்பாகும். இலங் கைத் தீவின் அரசு இத்தகைய எல்லா வகை இன அழிப்புகளையும் புரியும் குற்றவாளியாகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருக்கும் தமிழர்களின் நிலைமை தமிழர் சிங்களவர் என்ற வரைய றைக்கு அப்பால் ஒரு மனித உரிமைப் பிரச்சினை. உலகளாவியு பரிமா ணத்துடன் உலகளாவிய பின்தங்கல் நிகழ்ந்ததால் அதற்கு உலகளாவிய தீர்வு தேவை. மனித உரிமைப் பிரச்சினை இனிமேல் உள்நாட்டுப் பிரச்சினை எனத் தட்டிக்கழிக்க முடியாது. இதனால்தான் தென்னா பிரிக்காவில் நிற வேற்றுமை ஒழிக்கப் பட்டது. இன்னும் பல உதாரணங்கள் உள்ளன. இலங்கைத் தீவும் இதற்கு விதிவிலக்காக முடியாது.

### நம்பிக்கை இழப்பதன் மூலம் ஒன்றையும் அடையமுடியாது:

தேவாலயத்தில் கூறியது போல் எங்கும் போரிடுங்கள் என நான் கூறவில்லை. ஆனால், தோல்வி மனப்பான்மையைத் தவிருங்கள் என்றுதான் கூறுகிறேன். இராணு வத்துறை அல்லாத பல மார்க்கங்கள் இன்று உள்ளன. எனவே இராணுவ முறையில் போர் தொடங்கும்படி நான் கூறவில்லை.

உண்மையான போர் தற்போது தொடங்குகிறது. சம்பிரதாயமான போர் முடிந்திருக்கலாம். ஆனால் போருக்கான பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. நாங்கள் வெளி நாடுகளில் இருக்கிறோம் என சார்ல்ஸ் டிகோல் நாஸிகள் பிரான்ஸிற்கு வரும்போதும், கூறினர். ஆனால், வெளி நாட்டில் இருப்பதால்தான் உங்கள் பொறுப்புகள் இன்னும் கூடியவை யாக உள்ளன. 15 லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வெளிநாட் டில் இருந்தும் தமது பிரச்சினையைத் தீர்க்கமுடியவில்லை என்றால் அவர்க ளில் அல்லது அவர்களது வழிமுறை களில் அல்லது இரண்டிலும் ஏதோ பிழை இருக்க வேண்டும் என்பதுவே உண்மை.

கிழக்குத் தீமோரில் அப்படியொரு சாட்டு ஏற்கப்படலாம். ஏனெனில் அங்கு புலம்பெயர் மக்கள் குறைவா கவும் கல்வியறிவில் குறைவாகவும் இருந்தனர். இலங்கைத் தீவின் தமிழ ரின் நிலை வேறு. இத்தனை வலுவுள்ள புலம்பெயர் சமுதாயத்தை உலகில் உள்ள எந்தவொரு விடுதலை இயக்க மும் கொண்டிருக்க முடியாது என்பதை நான் அறிவேன்.

ஈடுபடுங்கள் என்பதே தமிழர்க ளுக்கு நாம் கூறிய புத்திமதியாகும்.✱


NEW BERNARDS ANIMAL FEEDS

**S.R.S. Farm**

**எஸ்- ஆர் - எஸ் பாம்**

பலாலி வீதி, கோண்டாவில் வடக்கு [பஸ் டிப்போ முன்பாக]

தொ.பே. 0770890444, 0775049058

**கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள பண்ணையாளர்களின் நலன் கருதி நாம்**

**நியூ பேர்ணாட் இன்**

**கோழித் தீவனங்கள், கால்நடை உணவுத் தீவனங்கள், ஒரு நாள் கோழிக்குஞ்சுகள்**

என்பவற்றைத் தரமானதாகவும், குறைந்த விலையிலும் வழங்கி வருகின்றோம். இவற்றைக் கொள்வனவு செய்வதன்மூலம் உங்கள் செலவினைக் குறைத்து இலாபத்தை அதிகப்படுத்துங்கள்

- ஒரு நாள் இறைச்சிக் கோழிக்குஞ்சுகள் (புறோயிலர்)
- ஒரு நாள் முட்டைக் கோழிக்குஞ்சுகள் (லேயர்)
- இறைச்சிக்கோழி (புறோயிலர்) உணவுவகைகள்
- முட்டைக்கோழி(லேயர்) உணவு வகைகள்
- கோழிகளின் நோய்களுக்கான மருந்து வகைகள் (Antibiotic)
- கோழிகளுக்கான விட்டமின் வகைகள்
- கோழிகளுக்கான தடுப்பு மருந்துகள் (Vaccine)
- கோழிகளுக்கான குளுக்கோஸ்
- பண்ணை உபகரணங்கள்
- சிறிய இன நாய்களுக்கான உணவு (Dog Food)
- பெரிய இன நாய்களுக்கான உணவு (Dog Food)
- நாய்களுக்கான சம்போ,சவர்க்காரம்,விற்றமின்கள்

கால்நடைகளுக்கான அனைத்து மருந்து வ்கைகளும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். இன்றே நாடுங்கள்

விற்பனை முகவர் : நியூ பேர்னாட் மிருக உணவுகளும் கோழிக் குஞ்சுகளும்


**நான்காம் ஆண்டு நினைவு நாள்**

| பிறப்பு | இறைபாதம் |
| --- | --- |
| 11 | 19 |
| 05 | 03 |
| 1955 | 2006 |



**செல்லக்கண்டு சந்திரோதயம்**

திதி: நவமி

அன்பெனும் மலர் தூவி ஆசை மொழி பல பேசி
எம் இதயங்களில் குடிகொண்ட குல விளக்கே!
எம்மை இவ் உலகிற்கு முகம் காட்டிய - தாயே
நீ எம்மை விட்டு ஆண்டுகள் நான்கு கடந்தாலும்
உன் நினைவு எம் இதயத்தை விட்டு என்றும் - நீங்காது.

நாவலம்பதி,
அச்சுவேலி. (95918) குடும்பத்தினர்.


**அரச பொது ஊழியர் சங்கம்**

**அரச உத்தியோகத்தர்களுக்கு அன்பான வேண்டுகோள்!**

எம்து சங்கத்தின் கோரிக்கைகளுக்கு அமைவாக

(1)அர்சியல் தலையீடுகள் இன்றி திணைக்களத் தலைவர்கள் சுதந்திரமாக மக்கள் நலப்பணிகளை மேற்கொள்வதற்கும், உத்தியோகத்தர்களின் கெள்ரவ்த்தை பாதுகாத்தலுடன் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கவும்

(2)அரச உத்தியோகத்தர்களின் பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்ற தேவைக்ள்ள அதிமேதகு ஜனாதிபதி மற்றும் துறைசார் அமைச்சர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நியாயமான உடனடித்தீர்வைக் காணவும்

(3)அரச உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு அவர்கள் பணிபுரியும் திணைக்களங்களில் தகுதிக்கேற்ப பொருத்தமான பணிகளில் அவர்கள் வ்சிக்கும் பிரதேசங்களில் நியமனங்களைப் பெற்றுக்கொடுக்கவும்

(4)யாழ் மாவட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு நல்லூர் மற்றும் மத வழிபாட்டு ஸ்தலங்களுக்கு அண்மையில் தொடர்மாடி வீட்டுத்திட்டம்

(5)திணைக்கள உத்தியோகத்தர்கள், அதிபர், ஆசிரியர்களுக்கு சொந்த இடங்களில் இடமாற்றம்,பணிஉயர்வு,வாகனக்கடன்களை பெற்றுக்கொடுக்கவும்

கல்விப் பின்புலத்துடன் கூடிய திறமை மிக்க நிர்வாகியான மு.தொழில்நுட்பக் கல்லூரி அதிபரும், அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்ட கலாநிதி.ந.யோகராஜன் அவர்களை வெற்றிலைச் சின்னத்திற்குப் புள்ளடி இடுவதுடன் இலக்கம் ஐந்திற்கு மேலேயும் புள்ளடி இட்டு பெரும் வெற்றி பெறச்செய்வதன் மூலம் எமது தேவைகளை உடன் நிறைவு செய்வோம்.

**மாவட்ட இணைப்பாளர்**
**அரச பொது ஊழியர் சங்கம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் நிலவும் கடுமையான வரட்சியால் மலையகப் பிரதேசங்களில் காட்டுத் தீ அபாயம்

கண்டி, மார்ச் 24

தற்போது நாட்டில் நிலவும் கடும் வெப்பம் காரணமாக மத்திய மலைநாட்டில் காட்டுத்தீ பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அச்சம் வெளியிடப்படுகின்றது.

குறிப்பாக கண்டி மாவட்டத்தின் மலைப்பாங்கான பிரதேசங்களில் அமைந்துள்ள பற்றைகளிலும், காடுகளிலும் அண்மைய சில நாள்களாக தீ பரவி வருவதாகவும் தெரியவருகின்றது.

கடந்த 20ஆம் திகதி குண்டசாலை வரக்கப்பிட்டி பிரதேசத்திலுள்ள பச்சைக் காடு ஒன்று தீப்பற்றி எரிந்துள்ளதெனப் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

கண்டி உடுநுவர மலைப்பகுதியிலும் கடந்த 20ஆம் திகதி தீ பரவியதாகத் தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் காலநிலையுடன் விஷமிகளின் செயலும் இவ்வாறு தீ பரவுவதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (ளி)

# குடமுழுக்கு விழா

மஸ்கெலியா, மார்ச் 24

மஸ்கெலியா ரைட் அக்கரை தோட்டத்தின் பூந்தோட்டப்பிரிவில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய புனருத்தாரண மஹா கும்பாபிஷேக விழா எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.15 முதல் 11.05 மணிவரை இடம்பெறும்.

27 ஆம்திகதி சனிக்கிழமை அம்மனுக்கு எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

குடமுழுக்கு கிரியைகள் யாவும் சிவஸ்ரீ வள்ளிகாந்தக் குருக்கள் தலைமையில் இடம்பெறும் என ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது. (ளி)

# சிங்களமொழியில் கற்கும் தமிழ் மாணவர்கள்

மாத்தறை, மார்ச் 24

மாத்தறை மாவட்டதின் தவளம பிரதேச செயலகத்திற்குட்பட்ட வீரபாண கிராமத்தில் கணிசமான தோட்டத்தொழிலாளர் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றபோதும் அங்கு ஒரு தமிழ்ப்பாடசாலை இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்காரணமாக இங்குள்ள சுமார் 50 மாணவர்கள் வீரபாண கனிஷ்ட வித்தியாலயமான சிங்களப் பாடசாலையில் - சிங்கள மொழியிலேயே கல்விகற்றுவருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 450 சிங்களக் குடும்பங்களும், 100 தோட்டத் தொழிலாளர் குடும்பங்களும் வாழும் இப்பகுதியில் உள்ள இந்த ஒரே ஒரு சிங்களப் படசாலையான இப்பாடசாலையிலும் போதிய வசதிகளின்றி மாணவர்களின் கல்வியில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகவும் விசனிக்கப்படுகின்றது.

இங்கு தமிழ்ப்பாடசாலை ஒன்று இல்லாத நிலையில் தமிழ் மாணவர்கள் தாய்மொழியில் கற்கும் தமது உரிமையைத் துறந்து சிங்கள மொழிமூலமே கல்வியைத் தொடர்கின்றனர் என விசனிக்கும் தோட்டத்தொழிலாளர்கள் அரசியல்வாதிகள் இதுகுறித்து கவனம் செலுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றனர். (ளி)

# காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கு அருகே மின்சார வசதியற்ற குடியிருப்புகள்

## கவனிக்குமா சம்பந்தப்பட்ட அமைச்சு

மஸ்கெலியா, மார்ச் 24

இலங்கையில் மின்னுற்பத்தி செய்யப்படும் பிரதான நீர்த்தேக்கங்களில் ஒன்றான காசல்ரீ நீர்த்தேக்கத்திற்கு அருகே இருக்கும் சுமார் எட்டுக் குடியிருப்புகளுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மஸ்கெலியா காட்டு மஸ்கெலியா தோட்ட கோர்த்தி பிரிவில் - நீர்த்தேக்கத்திற்கு அருகில் உள்ள இரண்டு லயன்களில் வாழும் எட்டுக் குடும்பங்களே இவ்வாறு மின்சாரமின்றி வாழ்கின்றன என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இது குறித்து குடியிருப்பாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

2004 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது இவ்விடயம் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் முத்து சிவலிங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இதனையடுத்து தோட்டத்தின் மேற்பிரிவிலுள்ள அனைத்துக் குடியிப்புகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட்ட போதிலும் குறித்த இரண்டு லயன்களும் புறக்கணிக்கப்பட்டன.

இதற்குப் பின்னர் கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது இக்குடியிருப்புகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கான முன்னேற்பாடுகள் இடம்பெற்று கம்பங்களும் நடப்பட்டன.

குடியிருப்பாளர்களும் சந்தோசத்துடன் தமது இல்லங்களுக்கு மின் இணைப்புக்குரிய வேலைகளை மேற்கொண்டதுடன், மின்சார உபகரணங்களையும் கூட ஆர்வத்துடன் வாங்கி வைத்தனர். ஆனாலும் மின்சாரம் வழங்கப்படவில்லை.

மின் இணைப்புக்காக ஒவ்வொரு குடும்பமும் தலா பத்தாயிரம் ரூபா வீதக் 15 ரூபா பணத்தை ஏற்கனவே கட்டணமாகச் செலுத்தியிருக்கும் நிலையில் தற்போது மேலும் சுமார் ஐயாயிரம் ரூபா பணத்தைச் செலுத்துமாறு கூறப்படுகின்றது. இந்தப் பணத்தைக் கட்டுவதற்கு இக்குடும்பங்கள் முன்வரும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சின் கடிதம் இருந்தால்தான் பணத்தைப் பெறுப்பேற்க முடியும் என பிராந்திய மின்சாரசபை அதிகாரிகள் கூறுகின்றனர்.

எனவே, இதுகுறித்து சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை மேற்கொண்டு இக்குடியிப்புகளுக்கு விரையில் மின்சாரம் பெற்றுத்தரவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (ளி)

# மனோவைக் கண்டு அஞ்சும் எதிரணியினரே மலையகத்தில் தாக்குதல் நடத்துகின்றனர்

## வேலணை வேணியன் தெரிவிப்பு

கண்டி, மார்ச் 24

கண்டி மாவட்டத்தில் ஐ.தே. முன்னணியின் யானைச் சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசனின் துரித வளர்ச்சியைக் பொறுக்காத எதிரணியினரே எமது ஆதரவாளர்களைத் தாக்கி வருகின்றனர். அண்மையில் நாவலப்பிட்டி, கலஹா போன்ற இடங்களில் ஐ.ம.சு.மு. ஆதரவாளர்களே தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர் என அறியப்படுகின்றது - என்று அக்கட்சியின் உபதலைவர் வேலனை வேணியன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனநாயக நாட்டிலே பௌத்த தர்மக் கொள்கைகளின்படி இப்படியான தாக்குதல்கள் நடத்தப்படுவது ஒரு இனத்தின் உரிமைகளை மனிதாபிமான மற்ற ரீதியில் அழித்தொழிப்பதற்கு சமமாகும். தேர்தல் பிரசாரங்களில் போட்டியிருக்கலாம். ஆனால் வன்முறைகள் இடம்பெறக்கூடாது.

இவ்வாறான தாக்குதல்களால் மனோகணேசனுக்கு தமிழ் மக்களிடையே மேலும் ஆதரவு பெருகும். கண்டி மாவட்டத்தில் வாழக்கூடிய தமிழ் மக்கள் மனோகணேசனின் கரங்களைப் பலப்படுத்த முன்வர வேண்டும்.

இதேநேரத்தில் தலைநகர் கொழும்பில் தமிழ் மக்கள் எமது கட்சியின் தேசிய அமைப்பாளர் பிரபாகணேசனுக்கும், கலாநிதி ந. குமரகுருபரனுக்கும் வாக்களித்து எமது கட்சியின் எதிர்கால வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கவேண்டும்.

அதேபோல், நுவரெலியா மாவட்ட மலையக மக்கள் பாரதிதாசனுக்குத் தமது வாக்குகளை அளிக்க முன்வரவேண்டும். கம்பஹாவில் ஜெரோமுக்கு வாக்களிக்க முன்வரவேண்டும் - என்றார். (ளி)




# முஸ்லிம்களின் தன்மானத்தை விடுத்து சரணாகதி அரசியல் செய்யமாட்டோம்

## கல்கமுவையில் ரவூப் ஹக்கீம் திண்ணம்

கண்டி, மார்ச் 24

பொதுத் தேர்தலில் அரசு மூன்றிலிரண்டு பெரும்பான்மையை ஒருபோதும் பெறப்போவதில்லை. முஸ்லிம் சமூகத்தின் கௌரவத்தையும், தன்மானத்தையும் விட்டுக்கொடுத்து சரணாகதி அரசியல் புரிய மாட்டோம் - என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கெலிஓயா, கல்கமுவையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்ட அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

பொதுத் தேர்தல் முடிவுகள் அரசுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொடுக்காது. ஏனெனில் தற்போதைய அரசியல் சூழ்நிலை மற்றும் தேர்தல் முறைமை ஆகியவை இத்தகைய மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்திற்கு இடமளிக்காது.

கண்டியில் ஐக்கிய தேசியக் கட்சியில் மூன்று முஸ்லிம்களும் தெரிவுசெய்யப்படும் வாய்ப்பு அதிகம். ஆனால் தொகுதி முறை கொண்டு வரப்படுமாயின் ஒருவரையேனும் தெரிவுசெய்து கொள்ளும் வாய்ப்பு அற்றுப் போகும். கடந்த காலங்களில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் மாற்றங்களை மேற்கொள்ள எடுக்கப்பட்ட முயற்சிகளை நீதிமன்றம் சென்று தடுத்தோம். ஆனால் எதிர்காலம் பற்றி தற்போதைக்கு எதுவும் கூறமுடியாது. பொதுத் தேர்தலின் பின்பு நிம்மதியான சூழல் தோன்ற வேண்டும் என்று விரும்புகின்றோம்.

முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் சமூகத்தின் குரலாக இருக்கின்றது. முஸ்லிம் காங்கிரஸின் தலைமையை பொதுத் தேர்தலின் முஸ்லிம்கள் பலப்படுத்த வேண்டும்.



ஏனெனில், தனி மனிதன் அல்லது கட்சி யொன்றின் உறுப்பினர் நாடாளுமன்றத்தில் குரலெழுப்புவதற்கும், கட்சித் தலைமைத்துவம் குரலெழும்புவதற்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன.

தேர்தல் காலங்களில் கட்சி தாவல் சகஜமானதே. ஆளும் கட்சியுடன் இருந்தால் தமக்கு ஏதேனும் நன்மை கிடைக்கும் என்ற எதிர்ப்பார்ப்பில் கட்சிதாவல்கள் இடம்பெறுகின்றன. ஐக்கிய தேசியக்கட்சி தனது நாற்பது நாடாளுமன்ற உறுப்பினர்களை இழந்துள்ளது. எனவே, கட்சி தாவல்களுக்கு அணைகட்டுமாறு தற்போது மக்கள் மத்தியில் இருந்து கோரிக்கைகள் எழுகின்றன. இது வரவேற்கத்தக்கதாகும். மேலும் வேட்பாளர்களும் கட்சிபாய மாட்டோம் என்று மக்கள் மத்தியில் உறுதி வழங்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எனது 14 வருட நாடாளுமன்ற அரசியலில் பத்து ஆண்டுகள் கண்டி மாவட்டத்தில் இருந்து அரசியலை முன்னெடுத்துள்ளேன்.

மேலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நீதியையும், நியாயத்தையும் நிலை நிறுத்தப்போராடும் என்ற அடிப்படையில் நீதி மற்றும் நியாயத்தை வலியுறுத்திச் செயற்படும். இதனால்தான் ஜெனரல் சரத்பொன்சேகாவுக்கு அநியாயம் இடம் பெற்றபோது குரலெழுப்பினோம் - என்றார். (ளி)

# இரத்தினக்கல் மோசடியில் ஈடுபட்ட நபர் வாகனம் விபத்தில் சிக்கியதால் மாட்டினார்

## கற்களை விழுங்கிவிட்டாராம்

இரத்தினபுரி, மார்ச் 24

ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக் கற்களை மோசடி செய்து எடுத்துச்சென்ற ஒருவர் அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கியதால் வசமாக மாட்டிய சம்பவம் ஒன்று இரத்தினபுரியில் இடம்பெற்றுள்ளது.

காவத்தையிலிருந்து ஒக்கம்பிட்டிய சந்தைக்கு வந்த இரத்தினக்கல் வர்த்தகர் ஒருவர் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான 'புஷ்பராக' இனக் கற்கள் இரண்டை வஞ்சகமாக ஏமாற்றி மறைத்துவைத்துக் கொண்டு காவத்தை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது விபத்தில் சிக்கி காயமடைந்து மொனராகலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என மொனராகலை பொலிஸார் தெரிவித்தனர்.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

ஒக்கம்பிட்டிய சந்தைக்கு வந்த இந்த வர்த்தகரிடம் இரத்தினக்கல் ,அகழ்வில் ஈடுபடும் பிரதேசவாசி இரு கற்களையும் காட்டிப் பேரம் பேசியுள்ளார். பேரத்திற்கு இணங்காத இந்த வர்த்தகர் திரும்பிச் சென்றுவிட்டு மீண்டும் சிறிதுநேரத்தில் வந்து அக்கற்களை வாங்கிப் பார்த்துவிட்டு பிரதேசவாசியிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு மோட்டார் சைக்கிளில் ஏறிச் சென்றுள்ளார்.

பின்னர் கற்களை எதேச்சையாகப் பார்த்த பிரதேசவாசி அவை போலியானவை எனத் தெரிந்துகொண்டு சந்தையில் கடமையிலிருந்த பொலிஸாரிடம் விவரத்தைக் கூறியுள்ளார். இதையடுத்து பொலிஸார் அவரை பிடிக்கச் சென்றபோது அவர் விபத்திற்குள்ளாகி பாதையோரத்தில் கிடந்துள்ளார்.

எனினும், பொலிஸார் இவரைக் கைது செய்தபோது அவர் இரத்தினக்கற்கள் இரண்டையும் விழுங்கியிருந்தமை தெரியவந்துள்ளது. பின்னர் வைத்தியசாலையில் பேதி மருந்து கொடுக்கப்பட்டு கற்கள் வெளியில் எடுக்கப்பட்டுள்ளன - எனத் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்நிகழ்வில் கடந்த வருடம் நடைபெற்ற ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவன் ஒருவனுக்கு பிரதம விருந்தினர் பா.செந்தில் நந்தனன் பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர் மற்றும் மக்களை படங்களில் காணலாம்.

## வாசகர் திருமுகம்

### இ.போ.ச.பஸ் வருகை ஒழுங்கில்லை; சிற்றூர்திகளில் நெரிசல்;என்செய்வோம்!

கடந்த சில மாதங்களாக யாழ். குடாநாட்டில் போக்குவரத்தில் பெரும் நெரிசல் நிலைமை தோன்றியுள்ளமையும், பயணிகள் எண்ணிக்கை திடீரென அதிகரித்த மையால் பேருந்துகள், சிற்றூர்திகளில் நெரிசல்களும், தரிப்பிடங்களில் நீண்டநேரக் காத்திருப்புக்களும் யாவரும் அறிந்த விடயமே. இது இவ்வாறிருக்க, ஓரிரு மாதங் களுக்கு முன்னர் மோட்டார் போக்குவரத்துப் பிரிவினரால் செய்தி ஒன்று வெளியி டப்பட்டிருந்தது. சிற் றூர்திகள்(மினிபஸ்)யாவும் இலங்கை தேசிய சிற்றூர்திச் சங்கத் தின் நேரடிக் கண்காணிப்பிலேயே சேவையில் ஈடுபடுவதாகவும், சேவைக்குத் தகு தியற்ற சிற்றூர்திகள் சேவையினின்றும் நீக்கப்படுமெனவும், அளவுக்கதிகமான பயணி கள் ஏற்றல், கட்டாய பயணச்சீட்டு வழங்கல் என்பன மேற்படி சங்கத்தினரால் பரிசீ லிக்கப்படும் என்பதுமே அந்தச் செய்தியாகும். ஆனால், அது வெறும் செய்தியே தவிர எவையும் நடைமுறையிலில்லை. தினமும் காலை வேளைகளிலும் மாலைவேளை களிலும் யாழ். நகரின் பிரதான பயணவழிகளான 750,764,769 என்பவற்றில் தனியார் சிற்றூர்திகள் பயணிகளால் நிரம்பி வழிந்துகொண்டே செல்கின்றன. இதிலும் யாழ்ப் பாணம்-தெல்லிப்பளை (769) வழிப்பாதையை எடுத்துக் கொண்டால் இ.போ.ச. பேருந்துகள் அத்தி பூத்ததுபோல வந்தாலும் தேவையற்ற நேரங்களில் ஓரிரு பயணிகளுடன் பயணிக்கின்றன. அரச, தனியார் சேவை உத்தியோகத்தர்கள், வங்கி ஊழியர்கள் என்போர் அதிகமாகப் பயன்படுத்தும் இப்பிரயாண வழிகளினது இப்பாரிய பிரச்சினையை உரியவர்கள் கவனிப்பார்களா?

தெல்லிப்பளை. பாதிப்புறும் ஒரு பிரயாணி.

### மன்னாரில் பணிபுரிபவர்களின் பிரயாணக் கஷ்டம்

மன்னாரில் பணிபுரியும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அரச, தனியார், அரச சார்பற்ற நிறுவனங்களைச் சார்ந்த உத்தியோகத்தர்கள் வார இறுதி நாள்களில் யாழ்ப்பாணம் பயணிக்க மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். வெள்ளிக்கிழமைகளில் பணி முடிந்து யாழ்ப்பாணம் திரும்பவும்,திங்கள் காலையில் இங்கிருந்து கடமைக்குச் சமுகமளிக்கக் கூடியதாகவும் நேரடி பஸ்சேவை இல்லை.

கேரதீவு-சங்குப்பிட்டி பாதை பாவனைக்கு அனுமதிக்கப்படாத நிலையில், வவுனியா சென்றுதான் யாழ்.வரமுடியும். வேலை முடிந்து 5 மணி பஸ்ஸில் மன் னாரி லிருந்து வந்தால், வவுனியாவில் இ.போ.ச.பஸ் கிடைப்பதில்லை. தனியார் பஸ் மக்கள் நிரம் பும்வரை தாமதிப்பார்கள். அதுவும் இல்லையென்றாலோ அல்லது மன்னாரிலிருந்து வருவதற்குத் தாமதமானால் ''ஹையஸ்'' வாகனத்தில் ஒருவருக்கு ரூ.500 அறவிடுகிறார்கள். இவையும் சாத்தியம் இல்லாதவிடத்தில், கொழும்பிலிருந்து வரும் பஸ் வண்டிகளில் நின்றபடியே பயணம் செய்யவேண்டிய நிலை. அப்படியே வந்தாலும், யாழ். வருவதற்கு நடு இரவு ஆகிவிடும். வீடுகளுக்குப் போவதற்குத் தனியார் வாகனங்களுக்கு அதிகளவு பணத் தைச் செலுத்திக் கொண்டிருக்கின்றோம். வார இறுதி நாள்களில் மன்னார்- யாழ். பயணம் செய்யும் பெருமளவு அரச, அரச சார்பற்ற, தனியார் நிறுவன உத்தியோகத்தர்களின் நலன் கருதி வெள்ளி பிற்பகல் 5 மணிக்கு மன்னார்- யாழ். சேவையையும்திங்கள் காலை வேலைக்கு சமுகமளிக்க ஏது வாக யாழ்- மன்னார் சேவையையும் நடத்த, உரியவர்கள் கவன மெடுப்பார்களா? இ.போ.ச. (யாழ்ப்பாணம்) இதற்கு உரிய நடிவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

யாழ்ப்பாணம். கே.எஸ்.குகன்.






பாராளுமன்றத் தேர்தல் – 2010

யாழ்ப்பாண மாவட்டம்

இலங்கைத் தமிழரசுக் கட்சி

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) TNA



தமிழ்ப் பணி, தலைமைப் பணி அது என்றும் என் இரத்தத்துடன் கூடிய பணி என்றுரைத்த எஸ். எக்ஸ். குலநாயகம்.

நேற்று - இன்று - நாளையும் நம்மவர் வழிகாட்டி அவர் வெற்றிக்கு உழைப்போம்.

- உடுப்பிட்டித் தொகுதி வாக்காளர்கள்

12

இலங்கைத் தமிழரசுக் கட்சி

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

எஸ். எக்ஸ். குலநாயகம் 12


### பெண்களுக்கான மனை முகாமைத்துவ பயிற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 24

பாடசாலைக் கல்வி முடித்து வெளியேறிய மகளிருக்கு யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் இலவச மனை முகாமைத் துவப் பயிற்சிநெறி நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறியானது ஊரெழு மேற்கு சுன்னாகத்திலுள்ள கலாக்ஷேத்திரா கல்வி நுண்கலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் இணைவோருக்குச் சிறந்த, பல்துறை சார்ந்த பயிற்சியும் பெறுமதி மிக்க சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

பயிற்சிநெறியைப் பயில விரும்பும் மகளிர் தமது விண்ணப்பப் படிவங்களை 'கலாக்ஷேத்திரா கல்வி நுண்கலை வளாகத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும் என அதன் இயக்குநர் அறிவித்துள்ளார்.

(ஒ-10)

### 'பிரமமாய் நின்ற சோதி' நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 24

ஓய்வுபெற்ற நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம் எழுதிய 'பிரமமாய் நின்ற சோதி' நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

நூலுக்கான ஆய்வுரையை இரா. செல்வவடிவேல் நிகழ்த்துவார்.

(204)


**விற்பனைக்குண்டு**

சாவகச்சேரியில் அமைந்துள்ள சிறந்த நிலையிலுள்ள கல் உடைக்கும் ஆலை (கிறேஸர்) விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0778118036, 0779213881

**வேலை ஆள்கள் தேவை**

அரிசி ஆலையில் வேலை செய்வதற்கு வேலை ஆள்கள் தேவை. ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். (சாப்பாட்டுடன் தங்குமிட வசதி உண்டு).

குறிப்பு: முன் அனுபவம் தேவையில்லை.

RASAM MILL,
POWER HOUSE ROAD, CHUNNAKAM.




உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 601344412 முதல் 601361392 வரை. சீட்டிழுப்பு இல. 633 திகதி 22-03-2010

வெற்றி எண்கள்

12 34 44 45 A

ஜக்பொட் பரிசு ரூ. 13,281,580/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 13,281,580/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 13 | 2,000/= | 26,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 374 | 1,000/= | 374,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 593 | 1,000/= | 593,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15067 | 60/= | 904,020/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7037 | 40/= | 281,480/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 177121 | 20/= | 3,542,420/= |
| | | மொத்தம் ரூ. | 6,520,920/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்

தங்கக்காசு வெற்றியாளர் - M.ஜோசப் M.பெரேரா - நாத்தாண்டியா.

கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - W.ருபரத்ன வீரக்கொடி - ஓஜுகம.

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மொணராகலை | 601345145-3-40 |
| கண்டி | 601351965-0-13 |
| வவுனியா | 601352358-2-44 |
| குருணாகல் | 601344616-7-15 |
| கொழும்பு | 601360344-4-43 |
| கொழும்பு | 601348047-0-16 |
| மட்டக்களப்பு | 601359239-5-25 |
| மாத்தளை | 601347516-4-38 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,920,920/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட

ரூ. 13,761,430/=

தொடர் இல. 701315767 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 மார்ச் 25 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02

தொ.பே: 2335467

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

SLS 1038

அறிமுகமாகிறது...!

இலங்கையில் முதல் முறையாக....

Sterliing

NATURAL MINERAL WATER

இயற்கை தாது நீர்

www.sterlingnatural.com

STERLING MINERALS (PVT) LTD

Hot Line-0772244888


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மக்களின் பிரச்சினைக்கான தீர்வில் இந்தியா சிரத்தையுடன் செயற்பட்டு வருகிறது

## அந்நாட்டின் உதவி, ஒத்தாசைகள் என்றும் எமக்குத் தேவை

## முஸ்லிம்களுக்கு அவர்களின் பிரதேசங்களில் அதிகாரத்தை வழங்குவதற்கு நாங்கள் தயார்



**பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி யின் பொதுச் செயலாளரும் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் இக்கட்சி சார்பாகப் போட்டியிடும் முதன்மை வேட்பாளருமாகிய திருநாவுக்கரசு ஸ்ரீதரன் வழங்கிய செவ்வி இது.**

தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் 30 வருட காலத்துக்கும் மேலாக போராடிவரும் அமைப்பே பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி. இது ஆரம்ப காலத்தில் ஒரு போராட்ட இயக்கமாகப் பரிணமித்துப் பின்னர் அரசியல் இயக்கமாகப் பரிணமித்துக் கொண்டிருக்கும் பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் இம்முறை புளொட் அமைப்பினருடன் இணைந்து நாடாளுமன்றத் தேர்தலை எதிர் கொள்கின்றது.

அவ்வமைப்பின் பொதுச் செயலாளர் ஸ்ரீதரன் உதயனுக்காக வழங்கிய நேர்காணல் இது:-

**கேள்வி:** ஆரம்பகாலத்தில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட தாங்கள் பின் அதனைக் கைவிட்டு ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் கலந்துகொண்டு செயற்படுகிறீர்கள்? இந்நிலையில் இத்தேர்தலை எவ்வாறு எதிர் கொள்ளப் போகிறீர்கள்?

**பதில்:** 30 வருடகாலமாக தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்பதற்காகப் போராடி வருகின்றோம்.

### கூட்டாட்சி முறை

எமது பிராந்திய நலன், புவிசார் அமைவிடம் என்பவற்றைக் கவனத்திற்கொண்டு இந்தியாவே எமது பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதில் நம்பிக்கை கொண்டிருப்பதுடன் அந்நாட்டுடன் நல்லுறவையும் பேணி வருகின்றோம்.

எமது பிரச்சினையின் தீர்வுக்கு இந்தியாவில் இருப்பது போன்ற கூட்டாட்சி முறையே பொருத்தமானது என்றும் நம்புகின்றோம்.

வடக்கு, கிழக்கு தாயகத்தில் எமது சுயநிர்ணய உரிமையை வலியுறுத்துகின்றோம். நாம் படிப்படியாக எம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வலியுறுத்துவாம். இவற்றுக்காகவே நாம் புளொட் அமைப்பினருடன் இணைந்து இத் தேர்தலை எதிர்கொள்கின்றோம்.

**கேள்வி:** தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தங்களுடைய நிலைப்பாடு என்ன?

**பதில்:** எமது மக்களுக்கான தீர்வு விடயமாக ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து மக்களும் சுதந்திரமாக, சமத்துவமாக வாழ வேண்டும். இந்த நாடு சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் என அனைவருக்கும் பொதுவானது.

தனி ஓர் இனம் இதனைச் சொந்தம் கொண்டாட முடியாது. பல்லினங்களும் ஒற்றுமையாக வாழும் பல்லின நாடாக இருக்க வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

மாகாணசபைகள் பலப்படுத்தப்பட வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டும். இதற்காக கிழக்கில் இருந்தும் பலமான குரல் ஒலிக்க வேண்டும்.

**கேள்வி:** அப்படியானால் நீங்கள் ஒஸ்லோ பிரகடனத்தை வலியுறுத்தவில்லையா?

**பதில்:** ஒஸ்லோ பிரகடனத்தின் அடிப்படையில் தீர்வு காணப்படுமாக இருந்தால் நாம் மகிழ்ச்சியடைவோம். ஆனால் சிங்களத் தலைமைகள் இதனைச் செய்ய முன்வருவார்களா என்பது சந்தேகமே. இன்றைய யதார்த்த களச் சூழலுக்கு எது பொருத்தமானதோ அதனை நாம் கவனத்தில் கொள்வதுடன் இந்தியாவின் அனுசரணையையும் பெற வேண்டும்.

**கேள்வி:** மாற்று அரசியல் தொடர்பாகத் தங்களுடைய நிலைப்பாடு அல்லது கருத்து என்ன?

**பதில்:** மாற்று அரசியல் என்பது எமது இனத்துக்கு இன்று கட்டாயம் தேவையானது. இம்மாற்று அரசியலில் வெவ்வேறு கருத்துக்கள் உடையவர்கள் பங்கேற்க வேண்டும். ஆனால் எமது சமூகத்தில் இன்று இந்நிலைமை இல்லை. வெவ்வேறு கருத்துக்களுடன் நாகரிகமான அரசியல் உறவு நிலை ஒன்று உருவாக வேண்டும்.

### அரசில் தமிழர்கள் பங்காளிகளாக வேண்டும்

மக்களுக்கு அரசியல் போதை ஏற்றும் செயற்பாடுகளுக்கு இடமளிக்கக் கூடாது. இலங்கை அரசில் தமிழ் மக்கள் பங்காளிகள் ஆக வேண்டும்.

**கேள்வி:** இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பாக என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் அவர்களின் சொந்தக் காணிகளில் குடியமர்த்தப் படவேண்டும். அவர்களுக்கான உள்ளகக் கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

உயர்பாதுகாப்பு வலயங்கள் அனைத்தும் நீக்கப்படுவதுடன் 1980 ஆம் ஆண்டளவில் இராணுவ முகாம்கள் எந்நிலையில் இருந்தனவோ அந்நிலைக்குத் திரும்பச் செல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். இவைதவிர மே 18 இன் பின்னர் பயங்கரவாதச் சட்டம் தேவையில்லை எனவே அச்சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

**கேள்வி:** தமிழ் மக்களின் பிரச்சினை போன்று இணைந்த வடக்கு, கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கும் பிரச்சினைகள் உண்டு. அவர்களுக்கு என்ன பதில் கூறுகிறீர்கள்?

**பதில்:** முஸ்லிம் மக்களுக்கு பிரச்சினைகள் உண்டு. அதனை நாம் மறுக்கவில்லை. முஸ்லிம் மக்களுடன் நாம் இணைந்து செயற்படுவோம். முஸ்லிம் மக்கள் தாம் பெரும்பான்மையாக வாழும்




அம்பாறையை கேட்டால் அதனை நாம் வழங்கத்தயார். அவ்வாறு இல்லாது அம்பாறையை தலைமையகமாகக் கொண்டு பெரும்பான்மையாக வாழும் பகுதிகளை உதாரணமாக கல்முனை, யாழ்ப்பாணத்தின் சில பகுதிகள் போன்றவற்றின் அதிகாரங்களையும் நாம் வழங்கத்தயார்.

**கேள்வி:** எமது தாயகப் பகுதிகளில் நடத்தப்பட்டு வரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள்...?

### சிங்களப் குடியேற்றத்தை தடுக்க இந்திய உதவி

**பதில்:** இது ஓர் உணர்வு பூர்வமான விடயம். நாம் தடுக்கக்கூடிய சில சந்தர்ப்பங்களை நாம் தவற விட்டுள்ளோம். இதனைத் தடுப்பதற்கு இந்தியாவின், சர்வதேசத்தின் உதவியை நாம் பெறவேண்டும்.

இராணுவ மயப்படுத்தப்பட்ட இந்த சூழல் ஆபத்தானது. சிங்கள மக்கள் கிழக்கில் ஒரு சில இடங்களில் ஆரம்பத்தில் இருந்தனர். அதனை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் பெரும்பான்மையாக இருந்த தமிழினத்தை சிறுபான்மையாக்கும் செயல்களை நாம் தடுத்தாக வேண்டும்.

**கேள்வி:** வன்னியுத்தத்தில் பின் பெரும் பாலான தமிழ் மக்களிடம் இந்திய விரோதப் போக்கு அதிகமாக உள்ளது. ஆனால் தாங்கள் இந்தியாவின் நலனில் அக்கறை கொண்ட அமைப்பாக உள்ளீர்கள். இந்தியா தனது பிராந்திய நலனைக் கைவிட்டு இலங்கைப் பிரச்சினையில் உண்மையான அக்கறைகாட்டுமென நம்புகிறீர்களா?

**பதில்:** மக்களிடம் இந்திய விரோதப் போக்கு உள்ளது என்பதை எம்மால் ஏற்றுக் கொள்ளமுடியாது. தவிர, இந்தியாவின் பங்களிப்புடன் தான் எமது பிரச்சினையை நாம் தீர்க்க முடியும்.

இந்தியா சர்வதேச நாடுகளில் முக்கியத்துவம் பெற்ற நாடாக உள்ளது. இந்தியாவிடம் இருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை ஏராளம் உள்ளன.

எமது போராட்டம் பயங்கரவாதமாக நோக்கப்படுவதற்கு இந்தியாவின் இளம் தலைவர் அதுவும் பிரதமரை கொலை செய்ததால் தான் என்பதையும் நாம் உணர வேண்டும். அதற்கான பழிவாங்கல் தான் இவ் அழிப்பே தவிர தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இந்தியா சிரத்தையுடன் உள்ளது. இதனை இந்தியாவின் இராஜதந்திர உயர் அதிகாரிகள் எம்மிடம் கூறியுள்ளனர்.

**கேள்வி:** தமிழ் மக்களின் நம்பிக்கையான தலைமையாக இருந்த விடுதலைப் புலிகளின் இயங்கு நிலை இன்று இல்லாமல் போய்விட்டது. இந்நிலையில் தமிழ் மக்களை வழிநடத்திச் செல்லும் தலைமையாக யாரைக் கருதமுடியும்?

### நேர்மையான இளம் அரசியல் தலைமைகள் தேவை

**பதில்:** வரலாற்றில் தலைமைகள் இல்லாமல் போனது கிடையாது. தலைவர்கள் பலரை விடுதலைப் புலிகள் அழித்து விட்டனர்.அவர்களில் அமிர்தலிங்கம், நீலன் திருச்செல்வம், பத்மநாபா போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இன்றைய அரசியலில் நேர்மையான இளம் அரசியல் தலைமைகள் தேவை. இதற்கு நாம் அரசியல் ரீதியான கற்பித்தல், எழுச்சி, போராட்டம் என்பவற்றின் ஊடாக இளம் சமுதாயத்தைக் கொண்டு புதிய தலைமை உருவாக்கப்பட வேண்டும். அத்தலைமை சமூகப்பிரக்ஞையுடையதும் நேர்மையானதாகவும் இருத்தல் வேண்டும். இன்று தாமே தலைமைகளாகவும், ஏகப்பிரதிநிதிகளாகவும் வேண்டும் எனும் நினைப்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டு வருகிறது. இவர்கள் கபடத்தனமாக வந்தவர்கள். இவர்களை மக்கள் தூக்கி வெளியில் போடவேண்டும்.

பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பிரதிநிதிகளாக தெரிவாக வேண்டும். ஏகப் பிரதிநிதித்துவம் என்னும் சொல்லையே இல்லாது செய்யவேண்டும்.

**கேள்வி:** விகிதாசாரத் தேர்தல் சிறுபான்மை இன மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்றும் இம்முறையைத் தவிர்க்க வேண்டும் என்றும் கூறப்படுகின்றதே....?

**பதில்:** யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இம்முறைமையினாலோ அல்லது தொகுதி ரீதியிலான தேர்தலைக் கொண்டு வருவதாலோ பாதிப்பு ஏற்படப் போவதில்லை. ஆனால் கிழக்கு மாகாணத்திலும் மலையகத்திலும் தொகுதி ரீதியான தேர்தல் முறைமை தமிழ்மக்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாது செய்துவிடும். இத்தேர்தல் முறைமையிலும் மாற்றம் அவசியம். இதற்காக ஜேர்மனியில் உள்ளது போன்று தொகுதியும் விகிதாசாரமும் கலந்த தேர்தல் முறைமையைக் கொண்டு வரவேண்டும்.

**கேள்வி:** ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வில் புலம்பெயர் சமூகம் தவிர்க்க முடியாத சக்தி. அவர்கள் தொடர்பில் என்ன கருதுகின்றீர்கள்.

### புலம்பெயர்ந்தவர்கள் நாட்டுக்கு வரவேண்டும்

**பதில்:** நிச்சயமாக அவர்கள் தவிர்க்கப்பட முடியாதவர்கள். நாட்டைவிட்டு வெளியேறிய அவர்கள் மீண்டும் இங்கு வரவேண்டும். இங்கு முதலீடுகளைச் செய்யவேண்டும். ஆனால் அவர்களில் பலர் கனவுலகில் உள்ளனர். அவற்றிலிருந்து அவர்கள் விடுதலை பெறவேண்டும். இளம் தலைமுறைக்கும் இம் மண்ணுக்குமான உறவு விட்டுப்போய்க்கொண்டு இருக்கிறது. அந்த இடைவெளியை நாம் நிரப்பவேண்டும். புலம்பெயர் இலக்கியமே இன்று அழிந்துபோய்க் கொண்டுள்ளது. அங்குள்ள கலைச்செல்வங்கள் இங்கு கொண்டு வரப்படவேண்டும்.

**கேள்வி:** புலம்பெயர் சமூகத்துடன் தங்களுடைய உறவுநிலை எவ்வாறு உள்ளது?

**பதில்:** நாங்கள் அம்மக்களுடன் தொடர்ச்சியான உறவைப் பேணி வருகின்றோம். அங்குள்ள மாற்றுக் கருத்துடையவர்களையும் சந்திக்கின்றோம். அங்கு நடைபெறும் இலக்கியச் சந்திப்புக்கள், பெண்கள் வட்ட சந்திப்புக்கள் என்பவற்றில் எமது பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர். அங்கிருந்தும் புதிய தலைமைகள் உருவாக வாய்ப்புகள் உள்ளன.

### வரதர் வருவாரா?

**கேள்வி:** தங்களுடைய தலைவர் வரதராஜப்பெருமாள் குறித்து தகவல்களை அறியமுடியவில்லையே? இலங்கையின் அரசியலில் அவர் மீண்டும் வருவாரா?

**பதில்:** அவர் இப்போது இந்தியாவில் உள்ளார். இணைந்த வடக்கு, கிழக்கின் முதலாவது முதல்வராக இருந்தவர். அவர் விரைவில் இங்கு வந்து அரசியல் பணிகளை முன்னெடுப்பார். அவரின் பொருளியல் அறிவு தமிழ் மக்களின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப துணைநிற்கும்.

**நேர்காணல்**
**தமிழரசன்**

**கேள்வி:** உதயன் ஊடாக மக்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்.

**பதில்:** மக்கள் தமது தலைமைகளைத் தேர்ந்தெடுப்பதில் தெளிவாக இருத்தல் வேண்டும். தவிர அனைவருமே தமது வாக்குரிமையைப் பயன்படுத்தவேண்டும். வெறுமனே வாய்ப்பந்தல் போட்டு மக்களை ஏமாற்றும் தலைமைகளை விரட்டியடிக்க வேண்டும். மக்கள் யதார்த்த பூர்வமான, நடைமுறைச் சாத்தியமான தீர்வு குறித்து சிந்திக்கவேண்டும். தாம் பழக்கப்பட்ட கட்சிக்குப் போடாது சிந்தித்துப் போடவேண்டும். ஒரே கட்சியில் பலரை அனுப்புவது மக்களுக்கு பாதிப்பையே ஏற்படுத்தும். இம்முறை மக்கள் அனைத்துக் கட்சிகளில் இருந்து பிரதிநிதிகளைத் தேர்வு செய்யவேண்டும். அப்போதுதான் பிழைகள் விடமாட்டார்கள். வெளிநாடுகளுக்குச் செல்லாது தொகுதியிலேயே இருப்பார்கள்.

மக்களே! நீங்கள் எம்மை மாத்திரம் தெரிவு செய்யுமாறு நான் கூறவில்லை. எங்களிலும் சிலரைப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யுங்கள். தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க எமக்கும் ஒரு சந்தர்ப்பம் தாருங்கள். இத்தேர்தலில் போட்டியிடும் பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சின்னமான மெழுகுதிரிக்கு உங்கள் வாக்கை இட்டு உங்கள் வாழ்வில் ஒளியேற்றுங்கள். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## யாழ்ப்பாணத்தில் வாழும் நண்பர்களே!
## இதோ உங்களுக்கோர் அரிய வாய்ப்பு...

# Ceybank
அலகு நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்கள்

-சீபேங்க் அலகு நம்பிக்கைப் பொறுப்பு - வருமான, வளர்ச்சி நிதியம்
-சீபேங்க் நூற்றாண்டு வளர்ச்சி நிதியம் - சாதாரணப் பங்கு நிதியம்
-சீபேங்க் சேவிங்ஸ்பிளஸ் - பணச் சந்தை நிதியம்

## பங்கு/பணச் சந்தை முதலீடுகள் ஊடாக சீபேங்க் அலகுகளில் ஏன் மூலதனமிட வேண்டும்?

- தேசிய சேமிப்பு வங்கியே நம்பிக்கைப் பொறுப்பாளராகும்
- 100% வரி அற்ற நன்மைகள்
  - மூல்தனச் சம்பாத்தியங்கள்
  - பங்கிலாபங்கள்
- வெளியேற்றக் கட்டணங்கள் இல்லை
- எந்த நேரத்திலும் முதலீடு செய்வதற்கும், பணமாக்குவதற்கும் இலகுவானதாகும்.
- நீங்கள் ஒரு நிதிசார் நிபுணராக இருக்க வேண்டிய அவசியமில்லை.
- நீங்கள் முதலீடு செய்வதற்கு பாதுகாப்பான நிறுவனங்கள் மத்தியில் இருக்கிறீர்கள்
- வாழ்க்கைத்தொழில் நிதிய முகாமையாளர்களின் திறன்களிலிருந்து இலாபம்
- சிறிய தொகையொன்றுடன் ஆரம்பிக்கலாம்




30.12.2009இல் உள்ளவாறு 31.12.2000 அன்று செய்யப்பட்ட ரூபா 100,000/- கொண்ட முதலீடொன்றின் பெறுமதியை விளக்கப்படம் காட்டுகிறது (பங்கிலாபங்கள் மீள்முதலீடு செய்யப்பட்டுள்ளன). அடிப்படையிலான முதலீடுகளின் பெறுமதியைப் பொறுத்து அலகு விலைகள் மேலேறும் அத்துடன் கீழிறங்கும். நிதியத்தின் எதிர்காலப் பெறுபேற்றினை கடந்த கால பெறுபேறு எடுத்துக்காட்டவில்லை.

### சீபேங்க் அஸெட் மனேஜ்மன்ட் (பிறைவேற்) லிமிட்டெட்

(பதிவு இல. PV 3326)
சீபேங்க் அலகு நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களின் முகாமையாளர்கள்
3ஆவது மாடி, இலங்கை வங்கிக் கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு 01
தொலைபேசி 011 7602000-2
பக்ஸ்: 0112 448404
ஈமெயில்: உநலடியமெ;ளட்வ.டம
இணையதளம்: றறற.உநலடியமெ.உழஅ

சீபேங்க் அலகுகள் நிலையம்
பு 1. சீபேங்க் இல்லம், கண்டி
தொலைபேசி/பக்ஸ்: 081 2202861

**விபரங்களுக்கு:**

யாழ்ப்பாணம் இலங்கை வங்கியில் திரு.ரி.துஷ்யந்தனுடன்
தொடர்பு கொள்ளுங்கள்
தொலைபேசி: **077 074 2860**

பங்குடமையாளர்கள்;
இலங்கை வங்கி, வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், கார்சன் கம்பர்ச் அன்ட் கோ லிமிட் மற்றும் யூனிட் டிரஸ்ட் ஒ.ப் இந்தியா
அடிப்படையிலான முதலீடுகளின் பெறுமதியைப் பொறுத்து அலகு விலைகள் மேலேறும் அத்துடன் கீழிறங்கும்.

---

## வடமாகாண மாணவர்களின் நலன் கருதி யாழ் நகரில் முதலாவது
## மாபெரும் சர்வதேச கல்வி கண்காட்சி

# JAFFNA EDUEXPO 2010
# யாழ் கல்விக்காட்சி 2010

**பங்குனி 28, 29ம் திகதிகளில் (28th & 29th March)**

## புனித.பத்திரிசியார் கல்லூரி வளாகத்தில்(St.Patrick's College)

வடமாகாணத்தில் முதல்முறையாக UK,USA,Canada,Ukraine,Switzerland,India மற்றும் பல நாடுகளிலிருந்து30க்கு மேற்பட்ட புகழ்பெற்ற பல்கலைக்கழக கல்லூரிகள் மற்றும் பல சர்வதேச பல்கலைக்கழகங்களின் உள்நாட்டு முகவர்களும் மற்றும் பல கல்விசார் நிபுணர்களும் கலந்து கொள்ளும் மாபெரும் சர்வதேச கல்விக்கண்காட்சி இதுவாகும் Medicine(MBBS),Engineering(Civil, Mechanical,Electrical/Electronics,Aeronautical,Marine ect.),IT/ICT,Management,Fashion Technology, Accountancy,Marketing,Law ஆகிய துறைகளில் உயர்கல்வியை தொடர்வதற்காக சகல வசதி வாய்ப்புகளையும் மற்றும் சலுகை அடிப்படையிலான விசேட கல்லூரி கட்டணங்களையும் மற்றும் பல புலமைபரிசில்களையும் பெறுவதற்க்கான ஓர் அரிய சந்தர்ப்பம்! மாணவர்களும்,பெற்றோர்களும் சகல பல்கலைக்கழக பிரதிநிதிகளை நேரடியாக சந்தித்து உரையாடவும்,தங்களுக்கு தேவையான சகல தகவல்களை பெற்றுக்கொள்ளவும் மேலும்உயர்கல்வியை தொடர்வத்தற்க்காக பதிவுசெய்து கொள்ளவும் ஓர் பொன்னான வாய்ப்பு.

**A/L 2008, 2009 & 2010 வருட மாணவர்களுக்கு விசேட அழைப்பு**

வாருங்கள்! பாருங்கள்! பயன்பெறுங்கள்! அனுமதி இலவசம்!

அனுமதி
கல்வி அமைச்சு இலங்கை

சக அனுசரணையாளர்
GCC Emphasis is on life
Garden City College Bangalore,India

பிரதம அனுசரணையாளர்
உதயன்
New Uthayan Publication (Pvt) Limited

பிரதம ஏற்பாட்டாளர்
cec
colombo exhibition center

சக ஏற்பாட்டாளர்
St. Patrick's College, Jaffna Old Boys Association - Colombo Br.

சக அனுசரணையாளர்
SSM College of Engineering Salem,India

சக அனுசரணையாளர்
Enterprise Systems

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆளும் தரப்பினருக்கு எதிராகவே கூடுதல் தேர்தல் முறைப்பாடுகள்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு எதிராகவே இதுவரை அதிகளவு தேர்தல் வன்முறைகள் சம்பந்தமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பான 159 முறைப்பாடுகள் தமது அமைப்பில் பதிவாகியுள்ளன எனத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையத்தின் ஊடக இணைப்பதிகாரி திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்த முறைப்பாடுகளில் 103 பாரதூரமான சம்பவங்களும், 56 சாதாரண சம்பவங்களும் பதிவாகி இருக்கின்றன என அவர் தெரிவித்தார். இந்த முறைப்பாடுகளில் தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள், அரச உடைமைகள் பாவனை, தீ வைத்தல் உள்ளிட்ட பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் இனம் காணப்பட்டுள்ளன எனத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் குறிப்பிடுகின்றது.

இதுவரை பதிவாகியுள்ள மொத்த வன்முறைச் சம்பவங்களில் 100 முறைப்பாடுகள் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டன என அந்த நிலையத்தின் ஊடக இணைப்பதிகாரி கூறினார். (சி)

# புலிகளைத் தோற்கடித்துத் தேசியத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் இந்திய அரசின் திட்டத்துக்குக் கூட்டமைப்பு துணைபோனது

### நாடாளுமன்ற வேட்பாளர் ஸ்ரீகாந்தா குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம்,மார்ச்24

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து தமிழ்த் தேசிய எழுச்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று விரும்பிய இந்திய அரசாங்கத்தின் திட்டத்திற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் என்று தம்மை கூறிக்கொள்வோர் இரகசியமாகத் துணைபோனார்கள். யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் 2009 ஏப்ரல் மாதத்தில் யுத்தநிறுத்தம் ஒன்றைக் கொண்டுவந்து எமது மக்களைக் காப்பாற்றுவதற்கு கிடைத்த அருமையான சந்தர்ப்பம் இவர்களால் தவறவிடப்பட்டது. இந்திய அரசாங்கத்தை திருப்திப்படுத்தவே இந்த வரலாற்றுத் தவறு நிகழ்த்தப்பட்டது.

இவ்வாறு கடந்த சனிக்கிழமை திருநெல்வேலி சிவகாமி அம்மன் கோயில் வீதியில் நடைபெற்ற தமிழ்த்தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய அதன் தலைவரும் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளருமான ந.சிறீகாந்தா தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் நல்லூர் தொகுதி வேட்பாளர் சட்டத்தரணி கனக.நமநாதனை ஆதரித்து நடத்தப்பட்ட இக்கூட்டத்திற்கு வட்டுக்கோட்டைத் தொகுதிக்கான வேட்பாளர்களில் ஒருவரான வி.கேதீஸ்வரதாசன் தலைமை தாங்கினார்.

ஸ்ரீகாந்தா மேலும் தெரிவித்தவை வருமாறு-

கொடூரமாகத் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருந்த யுத்தத்தில் தினமும் பெரும் எண்ணிக்கையில் தமிழ்மக்கள் கொல்லப்பட்டுக் கொண்டிருப்பதையிட்டு தமிழ்நாட்டு மக்கள் ஆத்திரம் அடைந்திருந்தனர். அதன் எதிரொலியாக தமிழ்நாடே குமுறிக்கொண்டிருந்தது. இந்தியப் பொதுத் தேர்தலுக்கும் அப்போது அறிவிப்பு வெளியிடப்பட்டது.

பொதுத்தேர்தலை மனதில் வைத்து தமிழ்நாட்டு மக்களை சாந்தப்படுத்த இந்தியாவின் காங்கிரஸ் தலைமையிலான ஆளும் கூட்டணி விரும்பியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பேச்சுவார்த்தைக்கு வருமாறு இந்திய அரசாங்கம் அழைத்தது. தமிழ்நாட்டில் காங்கிரஸ் - கருணாநிதி கூட்டணியின் தேர்தல் வெற்றிக்கு இந்தப் பேச்சுவார்த்தை தேவையாக இருந்தது.

போரில் இந்தியாவின் இரட்டை வேடத்தைப் புரிந்துகொண்டிருந்த பெரும்பான்மையான கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், யுத்தநிறுத்தம் ஒன்றினை இந்திய அரசு ஏற்படுத்தினால் மட்டுமே பேச்சுவார்த்தைக்கு கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழு செல்லவேண்டும் என்று முடிவெடுத்தனர்.

யுத்த நிறுத்தத்தைக் கொண்டுவர, நல்லதோர் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது என்பதே அவர்களின் கருத்தாக இருந்தது. அவர்களின் முடிவு சென்னையில் இருந்த சம்பந்தனுக்கு அறிவிக்கப்பட்டது.

ஆனால் பெரும்பான்மையினரின் முடிவை மீறி சம்பந்தனும் மற்றவர்களும் புதுடில்லிக்குப் போனார்கள். பேச்சுவார்த்தை நடந்தது. ஆனால் யுத்தநிறுத்தக் கோரிக்கை எதுவும் கூட்டமைப்பின் சார்பில் சமர்ப்பிக்கப்படவில்லை.

இந்தச் சந்திப்பைப் பயன்படுத்தி தமிழ்நாட்டில் பெரும்பான்மையான நாடாளுமன்ற ஆசனங்களை காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி தட்டிச்சென்றது.

இந்திய அரசை திருப்திப்படுத்தும் முயற்சியில் கூட்டமைப்புத் தலைவர்கள் எமது மக்களின் உயிர்களோடு விளையாடினார்கள். இவர்களைப் பயன்படுத்திக் கொண்ட இந்திய அரசு, இந்திய பொதுத்தேர்தல் முடிந்த கையோடு விடுதலைப் புலிகளையும் வீழ்த்துவதில் வெற்றிகண்டது.

இந்திய - இலங்கை அரசாங்கங்களின் கூட்டுக் சதியினால் தமிழ்த்தேசிய எழுச்சி நசுக்கப்பட்டது. கூட்டமைப்பு உடைவதற்கு இந்திய அரசும் அதன் ஏவலாட்களாகச் செயற்படும் கூட்டமைப்பு தலைவர்களுமே காரணகர்த்தாக்கள் ஆவார்கள் என்றார். (50)

# தமிழர்களின் உரிமை குறித்த அடிப்படைக் கொள்கைகளை கைவிட்டமையாலேயே கூட்டமைப்பிலிருந்து விலகினோம்

### மாலுசந்திக் கூட்டத்தில் கஜேந்திரகுமார் விளக்கம்



யாழ்ப்பாணம்,மார்ச் 24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் உரிமைகள் சம்பந்தமான அடிப்படைக் கொள்கைகளைக் கைவிட்டமையினாலேயே அதிலிருந்து விலகி மக்களிடம் உண்மையைச் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் தமிழ்க் காங்கிரசுக்கு ஏற்பட்டது.

இவ்வாறு மாலு சந்தியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தமிழ்க் காங்கிரசின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முதன்மை வேட்பாளர் சி.வரதராஜன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன், செ.கஜேந்திரன் மற்றும் கலாநிதி கெனடி விஜயரட்ணம், க.திருலோகமூர்த்தி, [illegible]ஸ்ரீபன், ந.துரைராஜா, வி.மணிவண்ணன், பி.வின்சென் டிபோல், செ.சுப்பிரமணியம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனதுரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தமழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமாகட்டும், பேச்சுவார்த்தையாகட்டும் சில அடிப்படைக் கொள்கைகளை முன்னிறுத்தியே மேற்கொள்ளப்பட வேண்டும். சிங்கள மக்களைப்போல தமிழர்களும் ஒரு தனித்துவமான தேசமென்ற அந்தஸ்து உடையவர்கள். எமது சகல எதிர்கால அரசியல் நடவடிக்கைகளுக்கும் இந்த அந்தஸ்து அடிப்படையானதும் இன்றியமையாததும் ஆகும்.

இங்கு உரையாற்றிய முன்னாள் பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் கலாநிதி கெனடி விஜயரட்ணம் கருத்துத் தெரிவிக்கையில்

நாம் எமது இனத்தின் விடிவுக்காக இந்தியாவின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம். அதேபோல் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் தயாராக இருக்கின்றோம். ஆனால் கூட்டமைப்புத் தலைமைகள் சிலர் இந்திய நலன்களின் முழுநேர முகவர்களாக செயல்படுவதை அனுமதிக்க முடியாது. ஏனெனில் எமது மக்களின் தேசிய நலன்கள் முதன்மைப்படுத்தப்பட வேண்டும். இனிமேலும் நாம் எடுப்பார் கைப்பிள்ளைகளாக இருக்க முடியாது. கூட்டமைப்பின் தலைமைத்துவம் முன்னாள் ஒட்டுக் குழுக்களின் பிடிக்குள் சிக்குண்டுள்ளது. கூட்டமைப்பை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தவன் என்ற வகையில் மாமனிதர் சிவராம், நாட்டுப்பற்றாளர் நடேசன் போன்றவர்களின் பணியைத் தொடர்பவன் என்ற வகையில் கூட்டமைப்புத் தலைமையின் கொள்கைப் பிரள்வை கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது - என்றார். (50)




# தாம் விரும்பும்-தமக்குத் கட்டுப்படும் தலைமை ஒன்றை வடக்கு- கிழக்கில் உருவாக்க அரசு முயற்சிக்கின்றது

### வண்ணார்பண்ணைக் கூட்டத்தில் சீ.வீ.கே.சிவஞானம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

இன்றைய அரசாங்கம், நிகழவிருக்கும் தேர்தலில் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படும் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கிறது. புலிகள் கேட்ட எதையும் தமிழ் மக்கள் கேட்கக் கூடாது என்றும் சொல்கிறது. சமஷ்டி பிரிவினையின் வாசற்படி என்றும் சொல்கிறது. இத்தனைக்கும் மத்தியில் தாம் விரும்பும்தமக்கு கட்டுப்படும் தலைமை ஒன்றை வடக்கு, கிழக்கில் உருவாக் கவே இந்த அரசு முனைந்து நிற்கிறது என்பது மிகத் தெளிவு.

இவ்வாறு வண்ணார்பண்ணை பாரதியார் சனசமூகநிலைய மைதானத்தில் நடைபெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய முன்னாள் மாநகர ஆணையாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளருமான சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்த பின்புலத்தில் தான் இந்தத் தேர்தலைச் நாம் சந்திக்கின்றோம். விடுதலைப்புலிகள் முன்னெடுத்த கோட்பாடுகள் யாவும் அவர்களால் உருவாக்கப்பட்டன அல்ல. அவை எல்லாம் தந்தை செல்வா காலத்திலேயே தீர்மானிக்கப்பட்டு ஜனநாயக வழிமுறைகளில் முன்னெடுக்கப்பட்டவை. ஒரேஒருவேறுபாடு விடுதலைப்புலிகள் ஆயுதம் ஏந்திய போராட்ட வழி முறையை வடிவத்தைக்கொண்டனர். அது இப்போது மௌனித்து விட்டது. எனினும் அவர்களுக்குமுன்பிருந்து தமிழ் பேசும் இனம் வரித்துக் கொண்ட தாயகம், தமிழ் தேசியம், தன்னாட்சி, இணைப்பாட்சி, சுயநிர்ணய உரிமை போன்ற கோட்பாடுகள் இன்னும் நீரோட்டமாகவே எம்மத்தியில் உள்ளன.



ஆயுதப் போராட்டமானது தந்தை செல்வா விட்டுச் சென்ற இடத்தில் இருந்து தொடங்கியே இடம் பெற்றது. அந்தப் போராட்டம் வெறுமனே சாதனை எதுவும் மின்றி மௌனிக்க வில்லை. எமது பிரச்சினைகளை உலக மயப்படுத்தி விட்டே மௌனித்திருக்கிறது. அந்த இடத்திலிருந்து சாத்வீக முறையில் இந்தச் சமரை தொடர வேண்டியது எமது கடமையும் பொறுப்புமாகும். அதைச் செய்யும் தகுதியும் தகைமையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத்தான் உண்டு.

என்னைப் பொறுத்தவரை இலட்சியங்களிலும் கோட்பாடுகளிலும் விட்டுக் கொடுப்பெதுவும் செய்யாமல், இறுகப் பற்றி நின்று கொண்டு மக்களின் அன்றாட தேவைகளில் கவனம் செலுத்துவதே பொருத்தமானது. அதையே நான் செய்வேன் என்பதையும் வீர வசனங்களிலும் உணர்ச்சிப் பேச்சுக்களுடன் எனது செயற்பாடு தங்கியிருக்கிறது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

யோதிலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, சுரேஸ்பிரேமச் சந்திரன், சிறிதரன், இராசேந்திரன், பேராசிரியர் சிவசந்திரன் உட்பட பல வேட்பாளர்கள் உரையாற்றினர். (50)

# ஊர்காவற்றுறையில் எமது பிரசாரத்துக்கு ஈ.பி.டி.பியினரே இடையூறு விளைவித்தனர்

### ஐ.தே.க. வேட்பாளர் விஜயகலா மகேஸ்வரன் அறிக்கை



யாழ்ப்பாணம்,மார்ச் 24

ஊர்காவற்றுறையில் நாம் பிரசாரத்தில் ஈடுபட்ட போது ஈ.பி.டி.பி. இயக்கத்தினரே எமக்கு இடையூறு விளைவித்தனர். அவர்களை எமது பிரசாரப் பணிகளைத் தடுக்க முயன்றனரே தவிர எமக்கும் பொது மக்களுக்குமிடையில் எத்தகைய முறுகல் நிலையும் ஏற்படவில்லை என்று ஐக்கிய தேசியக்கட்சியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

ஊர்காவற்றுறையில் நாமும் எமது ஆதரவாளர்களும் பிரசார பணியில் ஈடுபட்டிருந்த போது அங்கு வந்த ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் எமது பிரசார ஆவணங்களை பறித்தனர். சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு இடையூறு விளைவித்தனர். இருந்த போதிலும் அவர்களின் செயற்பாடுகளுக்கு நாம் அனுமதிக்கவில்லை. நாம் எமது பிரசாரப் பணியினைத் தொடர்ந்தோம்.

எமது ஆதரவாளர்களின் நால்வர் கைது செய்யப்பட்டதாக ஈ.பி.டி.பியினால் தெரிவித்துள்ளமையும் உண்மைக்குப் புறம்பான தகவலாகும். எமது பிரசார நடவடிக்கைகளைத்தடுக் ஈ.பி.டி.பியினர் முயற்சித்தனரே தவிர எமது [illegible] எனது மக்களுக்கும் இடையில் முறுகல் நிலை எதுவும் ஏற்படவில்லை.

ஊர்காவற்றுறை மக்கள் எமக்கு ஆதரவு வழங்குவதாக உறுதியளித்ததனால் எத்தகைய அச்சுறுத்தல்களுக்கும் அவர்கள் அடிபணியத் தயாரில்லை. மக்களின் ஆதரவை பொறுக்க முடியாமையை பொய்யான அறிக்கைகளை ஈ.பி.டி.பியினர் வெளியிடுகின்றனர். எனவே இவ் விடயத்தில் பொது மக்கள் சிந்தித்து செயற்பட வேண்டும்.

எமது பிரசாரத்தை குழப்பும் ஈ.பி.டி.பியினரின் செயல்கண்டு ஆத்திரம் கொள்ளாது எமது ஆதரவாளர்கள் அமைதிகாக்க வேண்டும் என்று நான் தயவாக கேட்டுக் கொள்கின்றேன். எதிர்வரும் 8ஆம் திகதி மக்கள் தமது தீர்ப்பினை வழங்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்- என்றுள்ளது. (50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி

## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010



தாய் நாட்டைத் தாரை
வார்த்தேனும் தனி வீடு
பெற்றிட வேண்டும்..
என்று தமிழரை ஏமாற்றும்
தலைமையை நிராகரித்து
புதிய வரலாறு எழுத
வாக்களிப்போம்..
தமிழ்த் தேசியத்திற்காய்
வாக்களிப்போம்..
தமிழ்த் தேசியத்திற்கான
மக்கள் முன்னணிக்கு
வாக்களிப்போம்...
தனித்தலைவன்
மாமனிதன் குமார்
வழியே தேசியத் தலைவன்
வழி செல்லும்
கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை
பெருவெற்றி பெறவைப்போம்.

திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

2

"நம்புங்கள் நாளை நமதாகும்"

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்

X

இளைஞர் கழகம் - யாழ்ப்பாணம்

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - TNA யாழ்.மாவட்டம்

வேண்டுகோள் ஒன்று

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவசந்திரன் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புச் சார்பில் இலங்கை தமிழரசுக் கட்சி வேட்பாளராகத் தேர்தலில் நிற்கின்றார். கட்சி சின்னமான வீட்டுக்கு நேரே புள்ளடியிட்டு அவரது விருப்புவாக்கு இலக்கமான 5 க்கு மேலே புள்ளடியிட்டு அவரது வெற்றியை உறுதிசெய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றேன். உங்கள் அனைவரையும் நேரில் சந்தித்து உரையாட உளவிருப்புக் கொண்டிருப்பினும் முதுமையின் தளர்ச்சி தடையாக உள்ளது. எனவே, இவ்வேண்டுகோளை ஊடகங்கள் ஊடாக விடுக்கின்றேன். நீங்களும் வாக்களியுங்கள். உங்கள் உறவினர், நண்பர்களையும் வாக்களிக்க வையுங்கள். தபால்மூலம் வாக்களிக்கும் உத்தியோகத்தர்களுக்கும் இந்த வேண்டுகோள்.

நன்றியுடன் :

திருமதி புஸ்பா கணேசலிங்கம், B.Sc, M.Ed. PGDE, SLEAS II
(முன்னாள் தென்மராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்)



உலகின் மனச்சாட்சியை நோக்கி
குரலெழுப்பவேண்டும்.
★மீள்குடியேற்றம்,
★மீள் அபிவிருத்தி,
★திட்டமிடுதல், பசுமை,வெண்மை,
நீலப்புரட்சிகளை ஏற்படுத்தல்
வேண்டும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி

X

5

பேராசிரியர் இரா.சிவசந்திரன்

www.sologam.blogspot.com நாமும் வாக்களிப்போம் நம்மவரையும் வாக்களிக்க வைப்போம்.

LG

Abans Vaasi Raashi Sale

UPTO 40% OFF

உங்கள் புத்தாண்டினை
அமோகமாக்கிக் கொள்ளுங்கள்

அபான்ஸ் ஆதரவில்



WD1403

## LG TROMM STEAM WASH

இடம், காலம், சக்தி மற்றும்
தண்ணீரைச் சேமியுங்கள்

ஸ்ரீம் ரொம் தொழில்நுட்பமானது உங்கள்
ஆடைகளை ஆவிமூலம் சுத்தம் செய்ய குறைந்த
அளவு நீரையே எடுத்துக் கொள்கின்றது.
எனவே பெருமளவு நீரைக் கொதிக்கவைக்க
வேண்டிய அவசியம் இல்லை. வழமையான
துவைக்கும் யந்திரங்களைப்போல
மின்சாரத்தை வீணடிப்பதும் இல்லை.
துவைக்கும் செயற்பாட்டை - 20% குறைக்கிறது
மின்சாரத்தைக் குறைக்கிறது 50%
தண்ணீர்த் தேவையைக் குறைக்கிறது 27%

ரூ. 237,990/=
விசேட விலை
ரூ. 219,990/=

Pay your phone bills, credit card bills and even reload your mobile phone at any Abans Showroom, Abans Elite Showrooms, JVC/Haier Showrooms and A-Z Electronics Showrooms islandwide.

Welsara, Kollupitiya

Abans

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

நிஜமாக 29.09.1941

நிழலாக 15.03.2008



## அமரர் ஆறுமுகம்பிள்ளை சுப்பிரமணியம்

(விநாயகர் ஸ்ரோர்ஸ், குகன் ஸ்ரோர்ஸ்,
குகன் எரிபொருள் நிலையம், மீனாட்சி அரிசி ஆலை)

இலட்சியம் இமயமாய் இருந்தாலும்
நாளும் எடுத்து வைக்கும் அடிகள்
சிந்தித்து சிதறாமல் செல்ல
இதயத்தில் விழும் அடிகளோ பல
வெறியாய் இருந்தாலும்
வெறுத்துப் போகின்றது
எங்கள் ஏணி எங்களை
விட்டுச் சென்றதே...!

எங்கள் அமைதியான இதயம்
உங்கள் சிதையுடன் சிதைந்துபோய்
ஆண்டுகள் இரண்டு ஆனதே...!
உங்கள் உயிர்த்துடிப்பான எண்ணங்கள்
எங்களை கொள்ளைகொண்டு
மீண்டும் எம்மை உயிர்ப்பித்துவிட்டதே
உங்கள் உயிர் மூச்சான கொள்கைக்காக
என்றும் வாழ்வோம்.....!

என்றும் அன்புடன்:
குடும்பத்தினர்

144/3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 95805


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த்தேசிய விடுதலை கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டம் சித்தன்கேணியில்

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டம் இன்று மாலை 5 மணிக்கு சித்தன்கேணி சந்திக்கு அருகில் நடைபெறவுள்ளது.

இந்த பிரசாரக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான என்.சிறிகாந்தா எம்.கே. சிவாஜிலிங்கம் உட்பட பல வேட்பாளர்கள் உரையாற்றவுள்ளனர். (1-10)

## பாடசாலைகளுக்கு பொருள்கள் விநியோகம்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் இயங்கும் தனியார், தேசியப் பாடசாலைகள் உட்பட அனைத்துப் பாடசாலைகளுக்கும் 'யுனிசெப்' வழங்கிய பச்சைக்கரும்பலகை, பிளாஸ்ரிக் வாளி, குப்பை வாளி உட்பட மற்றும் பல பொருள்கள் யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு வழங்கப்படவுள்ளன. அனைத்துப் பாசடாலைகளையும் மேற்படி பொருள்களைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (201)

## மின் ஒழுக்கு காரணமாகவே மின்நிலைய ஊழியருக்குக் காயம்

சுன்னாகம் மின்சாரசபையின் மின் காவலிகளைச் சுத்திகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த சபையின் ஊழியர் மின் ஒழுக்கு காரணமாக விபத்துக்குள்ளானார்.

இலங்கை மின்சாரசபையின் சுன்னாகம் மின் பொறியியலாளர் மேற்கண்டவாறு விளக்கமளித்துள்ளார்.

இது தொடர்பாக மின் பொறியியலாளர் அனுப்பியுள்ள விளக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 21 ஆம் திகதி பத்திரிகையின் கடைசிப் பக்கத்தில் வெளிவந்த மின்சார சபை ஊழியர் விபத்து சம்பந்தமாக பின்வரும் தவறுகள் இடம்பெற்றமையைச் சுட்டிக்காட்டுகிறோம்.

அத்தியாவாசிய தேவைகள் நிமித்தம், யாழ்.நகரப் பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கான மின் விநியோக மார்க்கங்கள் மட்டும் துண்டிக்கப்பட்டு சுத்திகரிப்பு வேலைகள் காலை 8.50 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டன. இதன்போதே எவரினதும் வற்புறுத்தலின்றி தனக்கு வழங்கப்பட்டிருந்த கடமையின் நிமித்தம் மின்மாற்றிகளல்லாது மின் காவலிகளைச் (Insulators) சுத்திகரிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த போதே மின் ஒழுக்குகாரணமாக குறிப்பிட்ட ஊழியர் விபத்துக்குள்ளானார். அத்துடன் செய்தியில் குறிப்பிட்டது போல் உடல் முழுவதும் எரிகாயங்கள் ஏற்படவில்லை. ஒரு பகுதியிலேயே காயம் ஏற்பட்டது - என்றுள்ளது. (ஒ-1)


COMPUTER COURSES

Diploma in Computerized **Accounting** Tally, Quick Book, Accpac M.Y.O.B

Diploma in **Video Editing** Premiere Pro CS4, particleIllusion, Pinnacle Studio, Adobe After Effe. Nuendo,

Diploma in **AutoCAD** 2D & 3D Modeling

Adv. Dip. in **Hardware & Networking**

புதிய பிரிவுகள் ஆரம்பம் 100%

மேலதிக விபரங்களுக்கு

DMI COMPUTER EDUCATION
NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel: 021-222 4403

மானிப்பாயில்...........

100% Practical Education!!
பல புதிய விடயங்களுடன்
28/03/2010 அன்று பிரிவு - 01 ஆரம்பம் !!

Diploma in Mobile Phone Repairing

(சகல வகையான கைத்தொலை பேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார் கற்கை நெறி)

மேலதிக விபரங்களுக்கு :
UNI TECHNOLOGY
ICT Education Trainers
Manipay T.P:- 021 7429325 / 0777 110862
(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)


# பொதுத்தேர்தல் பற்றிய வழிகாட்டலை ஆணையாளர் வெளியிட வேண்டும்

## நீதிமன்றம் ஊடாக ஐ.தே.க கோரிக்கை

கொழும்பு, மார்ச் 24

எதிர்வரும் பொதுத்தேர்தல் மற்றும் ஊடக நடவடிக்கைகள் தொடர்பில் வழி காட்டல்களை வெளியிடுமாறு தேர்தல் ஆணையாளரிடம் நீதிமன்றத்தின் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத் துள்ளது.

ஏப்ரல் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் தொடர்பில் வழிகாட்டல்களை தேர்தல் ஆணையாளர் வெளியிட வேண்டுமெனக்கோரி ஐ.தே.கவின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

தேர்தல் ஆணையாளர் தயாணந்த திஸாநாயக்க மற்றும் சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸ் ஆகியோர் இந்த மனுவின் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலை நடத்துவதாக அளித்த வாக்குறுதியை தேர்தல் ஆணையாளர் தயாணந்த திஸாநாயக்க மீறியுள்ளார் என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியாயமான தேர்தலை நடாத்துவது குறித்து தேர்தல் ஆணையாளர் வழிகாட்டல்களை அறிவிக்க வேண்டும். வாக்குப் பெட்டி பாதுகாப்பு, வாக்குச்சீட்டு, தேர்தல் வன்முறைகள் தொடர்பில் கடுமையான சட்ட திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும்.

தேர்தலில் ஈடுபட்டுள்ள சகல தரப்பினருக்கும் பொதுவான வகையில் சட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும்.

ஊடகப் பாவனையின்போது பக்கச் சார்பு தன்மை காணப்படக் கூடாது.

அரச ஒளி, ஒலி மற்றும் அச்சு ஊடகங்கள் ஜனாதிபதிக்காக பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன - என்று அந்த மனுவில் அவர் தெரிவித்துள்ளார்.

## இடம்பெயர்ந்த மாணவர் பரீட்சைக்கு விண்ணப்பம்

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த ஜி.சீ.ஈ. (உயர்தரம்), தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை என்பவற்றுக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தமக்கான விண்ணப்பப் படிவங் களை நிரப்பிக் கையொப்பம் இடும் அலுவல்களை இன்று முற்பகல் 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை யாழ். கல்விவலய முகாமைத்துவ மண்டபத்தில் மேற்கொள்ள முடியு மென யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

உயர்தர மாணவர்கள் தோற்றவுள்ள பாட இலக்கம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றுடன் சமுகமளித்து விண்ணப்பிக்க முடியும் என பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ-16)

# மோட்டார் சைக்கிளில் வந்து தாலிக் கொடியை அறுத்துச் சென்ற இருவர் பிடிபட்டனர்

## ஏழாலை இளைஞர்கள் விரட்டிச் சென்று மடக்கினர்!

வலி.வடக்கு, மார்ச் 24

தனிமையில் சென்ற பெண்ணிடம் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் கத்தியைக் காட்டி தாலிக் கொடியை அறுத்துக் கொண்டு ஓடினார்கள். ஆனால் அவர்களை கிராம இளைஞர்கள் மடக்கிப் பிடித்துவிட்டனர்.

நேற்றுப் பகல் ஒரு மணியளவில் ஏழாலை தம்புவத்தைப் பகுதியில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

ஆலயத்திற்கு சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்த பெண்ணின் தாலிக் கொடியே அறுக்கப்பட்டது. கொடியைப் பறிகொடுத்த அந்தப் பெண் கூக்குரலிட் டுள்ளார். அவ்வேளை அங்கு கூடிய இளை ஞர்கள் தப்பி ஓடியவர்களை விரட்டிச் சென்றுள்ளனர். தொடர்ந்து செல்ல முடியாத நிலையில் திருடர்கள் இளைஞர்களை தாக்கியுள்ளனர். இளைஞர்களும் விடவில்லை. தப்பியோட முயன்ற திருடர்களை மடக்கிப் பிடித்து விட்டனர். பின்னர் அவர்களை சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைத்த னர். (ஒ-86)

## மணிக்கூட்டுக் கோபுர கடிகாரங்களுக்கு 'ஓய்வு'

யாழ்.மணிக்கூட்டுக் கோபுரத்தின் 'டிஜிற்றல்' மணிக்கூடுகள் செயலிழந்து காணப்படுகின்றன.

மக்களைக் கவர்ந்திருந்த இந்தப் புதிய கடிகாரங்கள் கடந்த திங்கட்கிழமையுடன் செயற்பாடுகளை நிறுத்திக் கொண்டு ஓய்வு எடுத்துக் கொண்டுள்ளன. இனி எப்போது அவை ஓடத்தொடங்குமோ தெரியவில்லை. (ஒ-224)

# யாழ். நாச்சிமார் கோயிலில் திருடர் கைவரிசை

வண்ணை, மார்ச் 24

யாழ். வண்ணை, குளங்கரை மருதடி ஸ்ரீகாமாக்ஷி 'நாச்சிமார்' கோயில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு திருடர்களின் கைவரிசைக்கு் இலக்காகி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது :-

கடந்த திங்கள் நள்ளிரவுக்குப் பிற்பாடு திருடர்கள் அம்பாளின் கோயில் உண்டியலை உடைத்துப் பணத்தைச் சூறையாடியுள்ளனர். தொடர்ந்து அருகே தீர்த்தமாடும் கேணி மற்றும் துர்க்கை சிற்றாலயம் ஆகியவற்றின் புனருத்தாரணம் நடைபெற்று வருவதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கோயிலுக்குள் உட்புகுந்து விக்கிரகங்களில் அணிவிக்கப்பட்டிருந்த பெறுமதியான தங்க மற்றும் ஐம்பொன் நகைகளையும் திருடிச் சென்றிருப்பதாகக் கூறப்படுகிறது. (ஒ-160)

## 4 பரிசாரகர்களுக்கு மகரகமவில் பயிற்சி

கைதடி, அரச சித்த போதனா வைத்தியாசாலை பரிசாரகர் நான்கு பேர் மேலதிக பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதற்காக இங்கிருந்து கடந்த வாரம் மகரகமவுக்குச் சென்றனர்.

மகரகம, நாவின்ன ஆயுள்வேத திணைக்கள தலைமையகத்தில் இவர்களுக்கு மூன்றுமாதப் பயிற்சி வழங்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைதடி, போதனா வைத்தியாசாலையைச் சேர்ந்த இரு ஆண்களும், இரு பெண்களுமே பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதற்காக அங்கு சென்றுள்ளனர். (ஒ-160)

### அண்மைக்காலத்தில் மீளக்குடியமர்ந்த

# கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம் மக்களுக்கு ரூ.25ஆயிரம் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மார்ச் 24

குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு 'நிக்கொட்' நிறுவனத்தினரால் வழங்கப்பட்டு வரும் 25ஆயிரம் ரூபா வாழ்வாதாரக் கொடுப்பனவுக்கான அனுமதிக் கடிதங்கள் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு, நல்லூர் பிரதேச செயலர் பிரிவு, யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவு ஆகிய இடங்களில் குடியேறிய குடும்பங்களுக்கு இன்று வழங்கப் படவுள்ளதாக அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார். கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 105குடும் பங்களுக்கும், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் 222 குடும் பங்களுக்கும், யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் பிரிவில் 417 குடும்பங்களுக்கும் கொடுப்பனவுக்கான அனுமதிக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன. எனவே உரியவர்கள் தேசிய அடையாள அட்டை அல்லது பிறப்புச் சான்றிதழ்,குடும்ப அட்டை, வங்கி வைப்பு புத்தகம் [illegible] ளைப் பெற்று[illegible] அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஒ-10)

## சங்கானை ப.நோ. கூ.ச பணிப்புறக்கணிப்பு முடிவு

யாழ்ப்பாணம், மார்ச் 24

சங்கானை ப.நோ.கூ. சங்க பணியாளர்கள் மேற்கொண்ட பணிப்புறக்கணிப்பு நேற்று கைவிடப்பட்டுள்ளது.

நான்கு கோரிக்கைகளை முன்வைத்து தொழிற் சங்கத்தின் ஊழியர்கள் கடந்த திங்கட்கிழமை பணிப் புறக்கணிப்பில் குதித்தனர்.

இந்தப் பணிப்புறக்கணிப்பால் சங்கத்தின் செயற்பாடுகள் அனைத்தும்முடங்கின.

தொழிற்சங்கம் முன்வைத்த நான்கு கோரிக்கைகளையும் சங்கத்தின் பணிப்பாளர் சபை ஏற்றுக்கொண்டதை அடுத்தே நேற்று சங்கச் செயற்பாடுகள் வழமைக்குத் திரும்பின என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-224)

## மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, மார்ச் 24

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2220ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் 'H'என்ற ஆங்கி எழுத்தும் 5/6/6/1/4/2 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்திற்குரியனவாக தெரிவு செய்யப்பட்டன.

இதன் பிரகாரம் இடமிருந்து வலமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. 5/6/6/1/4/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாக இருபது லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

6/6/1/4/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 15பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு லட்சம் ரூபா கிடைக்கும்.

6/1/4/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 132பேருக்கு மூன்றாம் பரிசாக தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

1/4/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,307 பேருக்கு நான்காம் பரிசாக தலா ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

4/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,162 பேருக்கு ஐந்தாம் பரிசாக தலா நூறு ரூபா கிடைக்கும்.

2 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 129,743 பேருக்கு ஆறாம் பரிசாக தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

வலமிருந்து இடமான அமைப்பில் 5/6/6/1/4 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13பேருக்கு ஏழாம் பரிசாக தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கும்.

5/6/6/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்கள்ள வைத்திருக்கும் 136பேருக்கு எட்டாம் பரிசாக தலா ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.


5/6/6 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,303 பேருக்கு ஒன்பதாம் பரிசாக தலா நூறு ரூபா கிடைக்கும்.

5/6 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12,958 பேருக்கு பத்தாம் பரிசாக தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

H என்ற ஆங்கில எழுத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 52,050 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ஒ-10)

## மரண அறிவித்தல்

### *அம்பலவாணர் இராசரத்தினம்*



ஏழாலை வடக்கைச் சேர்ந்த அம்பலவாணர் இராசரத்தினம் நேற்று (23.03.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி அம்பலவாணரின் இளைய மகனும் வரணியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி குணம் ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற ஹறியட்டின் கணவரும் ஹென்றி (கனடா), எல்சி (டென்மார்க்) ஆகியோரின் தந்தையும் டெய்சி (கனடா), நடராசா (டென்மார்க்) ஆகியோரின் மாமனும் மாணிக்கவாசகன், மனோன்மணி தேவசகாயம், சிவகுரு நாகம்மா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று(24.03.2010) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உசத்தியோடை கிறிஸ்தவ சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை வடக்கு,*
*ஏழாலை.*

தகவல்:
பொ. ஆனந்தன் (CTB).

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நகர சபை, யாழ்ப்பாணம்.

# ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவையை மே மாதம் முதல் வழங்குவதற்கு ஏற்பாடு

## கல்வி அமைச்சர் பிரேமஜயந்த தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 24

ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைத் தொகை அனைத்தையும் எதிர்வரும் மே மாதம் முதல் வழங்க நடவடிக்கை எடுக்கப் படும் - என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தர். மாலபே பகுதியில் பாடசாலை விழா ஒன்றில் உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தற்போது இடைக்கால கணக்கறிக்கை மூலமே அரசு செலவினங்களை மேற்கொண்டு வருகிறது. அதனூடாக சம்பளம் மட்டுமே வழங்க முடிகிறது.

எதிர்வரும் 22 ஆம் திகதி புதிய நாடாளுமன்றம் கூடுகிறது. அதனைத் தொடர்ந்து சில நாள்களில் புதிய வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அந்த வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக ஆசிரியர்களின் சம்பள நிலுவைகளை வழங்குவதற்கான நிதி ஒதுக்கப்படும் - என்று கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-சி)

## 'சிரச' தாக்குதல்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பான சகல சாட்சியங்களும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனவும் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும் பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி மேலும் தெரிவித்துள்ளார்.

## எதிர்க்கட்சிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தும் இன்று தீவகப் பகுதிகளில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுகின்றன.

எதிர்க் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தேர்தல் பிரசாரத்திற்கு தீவகத்தில் இடையூறு விளைவிக்கப்படு கின்றது என்ற குற்றச்சாட்டுகள் எழுந் துள்ள பின்னணியில் - அந்த அணிகள் அங்கு பிரசாரம் செய்வதற்கு அச்சப்படுகின்ற நிலையில் - எல்லாக் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் இணைந்து இன்று ஒரே நாளில் தீவகம் முழுவதிலும் கூட்டாக இறங்கி பிரசாரத்தில் ஈடுபடுவது என்று தீர்மானித்திருக்கின்றன.

இன்று காலையில் யாழ். நகரப் பகுதியிலிருந்து கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் தீவகம் நோக்கி வாகனத் தொடரணியாகப் புறப்படுவார்கள் என்றும் - அங்கு சென்றடைந் ததும், ஒவ்வொரு அணியினரும் வீடு வீடாகச் சென்று தத்தமது கொள்கை நிலைப்பாடுகளை விளக்கி வாக்குச் சேகரிப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இன்றைய இந்தப் பிரசாரத்தின் போது அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படாமல் தடுப்பதற்காக பொலிஸாரின் பாதுகாப்பும் கோரப்பட்டுள்ளதாக அறியவந்தது.

## பொன்சேகாவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை 10.30 மணிமுதல் 11.30 மணிவரை புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஜே.வி.பியின் எம்.பிக்கள், பௌத்த பிக்குகள் மற்றும் பொன்சேகாவின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஜே.வி.பியின் பிரசாரச் செயலா ளர் விஜித ஹேரத் கூறியவை வருமாறு:-

அரசுக்கு எதிராக சதித்திட்டம் தீட்டினார் எனக் குற்றம் சுமத்தியே அரசு பொன்சேகாவைக் கைது செய்தது. ஆனால், இறுதியில்அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு பற்றரிகள் கொள்வனவு சம்பந்தப்பட்டதாகும்.

அரசின் இந்தப் போலி நாடகம் மக்களுக்கு இப்போது தெரியவந்துள்ளது. குற்றமே செய்யாத பொன்சேகாவை அடைத்து வைத்துப் பழிவாங்குவதை அரசு உடன் நிறுத்தி அவரை விடுதலை செய்யவேண்டும். மக்கள் பொன்சேகாவின் விடுதலைக்காகப் போராடவேண்டும் - என்றார்.

## பொன்சேகாவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திங்கட்கிழமை சரத் பொன்சேகாவிற்கு நான் மதிய உணவை எடுத்துச்சென்றவேளை, அதனை வழங்குவதற்கு அனுமதியளிக்க அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

அனோமா பொன்சேகாவிற்கு மாத்திரமே இதற்கான அனுமதியுள்ளது என அவர்கள் குறிப்பிட்டனர்.

பொன்சேகாவிற்கு சுவாசம் தொடர்பான பிரச்சினைகள் உள்ளமையால், உரிய காற்றோட்ட வசதிகள் அவசியம்.

எனினும், அவர் தடுத்துவைக்கப்பட்டுள்ள அறைக்கான காற்றோட்ட வசதியைத் தடைசெய்துள்ளமை மூலம் அரசு அவரை நோயாளியாக்க முயல்கின்றது.

பொன்சேகா இயற்கை மரணம் எய்தும் சூழ்நிலையை அரசு ஏற்படுத்துகின்றது என நாங்கள் கருதுகிறோம். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

## மேலை நாடுகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ-மூன், இலங்கையில் நடைபெற்ற போரின் போது மனித உரிமைகள் மீறப்பட்டதா என்பது குறித்து தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு நிபுணர் குழு ஒன்றை நியமிக்கப் போவதாக அறிவித்திருக்கின்றார். பிரிட்டன், அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆகியன பான் கி மூனின் முடிவை ஆதரிக்கின்றன.

இதனைக் கருத்தில் கொண்டே, மேற்கு நாடுகளையும் பான் கீ மூனையும் சாடும் விதத்தில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

புத்தளத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற அரச தரப்பினரின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும் போதே பிரதமர் ரட்ணசிறி மேற்கண்டவாறு மேலை நாடுகளைச் சாடினார்.

பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கா தமது தேர்தல் பிரசார உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

அரசாங்கம் இந்த நாட்டு மக்களின் முடிவுகளுக்கு மட்டுமே தலை வணங்கும். ஏனைய நாடுகளின் உள்விவ காரங்களில் தலையிடுவதில்லை என்ற வியன்னா ஒப்பந்தத்தில் எமது நாடு கைச்சாத்திட்டுள்ளது. அதனை நாம் நேர்மையாகக் கடைப்பிடித்து விருகின்றோம். ஏனைய நாடுகளின் விவகாரங்களில் நாம் மூக்கை நுழைப்பதில்லை. ஆனால் 'சில நாடுகள்' பிறநாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுகின்றன -என்று குற்றஞ்சாட்டினார் பிரதமர்.

இலங்கையில், போர் காலத்தில் மனித உரிமைகள் மீறப்பட்டன என்ற குற்றச்சாட்டுத் தொடர்பாகத் தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு நிபுணர் குழுவை நியமிக்கும் முடிவில் மாற்றமில்லை என்று ஐ.நா. செயலாளர் நாயகம் திட்டவட்டமாக அறிவித்த ஒரு வாரகாலத்தில் -

இலங்கைப் பிரதமரின் சீற்றமும் கடுமையும் நிறைந்த கூற்று வெளிவந்திருப்பதாக அவதானிகள் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## விசாரணைக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச விதிகளை மீறி மனித உரிமை மீறல்களை நாம் செய்யாத நிலையில் எந்த வித நடவடிக்கையையிட்டும் நாம் கவலைப்படவில்லை.

இலங்கை அரசு மீது சுமத்தப்பட்டுவரும் மனித உரிமைக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக பல நாடுகளுக்கு நாம் விளக்கி வெற்றியடைந்துள்ளோம் - என்றார் அவர் (அ-1)

## அரசமைப்பைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத் தமது கட்சி வழங்கமாட்டாது என்று ஐ.தே.கட்சியின் எம்.பியும், அந்தக் கட்சியின் பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-


நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்காக நாம் தொடர்ந்தும் பாடுபடுகிறோம். அதே போல் நல்லதொரு தேர்தல் முறையை ஏற்படுத்தவும் நாம் விரும்புகிறோம்.

இந்த ஜனாதிபதி முறைமையை இல்லாதொழித்தல் மற்றும் தேர்தல் முறைமையை மாற்றுதல் போன்றவற்றிற்காக அரசியல் யாப்புத் திருத்த யோசனையை ஆளும் தரப்பு முன்வைத்தால் அந்த யோசனையை நாம் நன்கு ஆராய்ந்து பார்ப்போம்.

முன்வைக்கப்படும் யோசனை நாடாளுமன்றத்தின் பொது இணக்கப்பாட்டைப் பெற்றிருத்தல் வேண்டும். அப்படி இல்லாது அது ஒரு குடும்பத்திற்கோ அல்லது தனிக் கட்சிக்கோ இலாபம் தரக்கூடியதாக அமைந்திருந்தால், அந்த யோசனையை நிறைவேற்ற நாம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுக்கொடுக்கமாட்டோம்.

கொண்டுவரப்படும் எந்த யோசனையும் இந்நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கவேண்டும். ஏகாதிபத்தியம் மற்றும் குடும்ப நிர்வாகம் போன்றவற்றால் இந்நாட்டு மக்கள் ஒருபோதும் நன்மையுடைய மாட்டார்கள். நாம் என்றும் அத்தகைய நிர்வாகத்திற்கு எதிராகவே செயற்படுவோம். - என்றார். (சி)

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது
ஆனால் திருமண அழைப்பிதழ்களோ மதி கலர்ஸில் நிச்சயிக்கப்படுகின்றது.
உங்கள் இல்லங்களில் நடைபெற இருக்கின்ற மங்கலகரமான நிகழ்வுகளுக்கு ...
திருமண அழைப்பிதழ் காட்சியறை
மதிகலர்ஸ் பிறிண்டர்ஸ்
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 200க்கு மேற்பட்ட பல வர்ண.
புத்தம்புதிய டிசைன்களுடன் 15 ரூபா முதல் 35 ரூபா வரை விசேட கழிவுடன்
எமது காட்சியறையில் உங்களுக்காக ...
MATHI COLOURS PRINTERS
Wedding Card Show Room
15/2B. முருகேசர் லேன், நல்லூர், [முத்திரைச்சந்தி] யாழ்ப்பாணம்.
தொ.இல : 021 2229285, 0777 222524







இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org